
# பகவான்
# ஸ்ரீ சத்யசாயிபாபா
வின்
# அருளுரைகளிலிருந்து
சில
# முத்துக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதராஜன் அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான்

# ஸ்ரீ சத்ய சாயி பாபாவின்

## அருளுரைகளிலிருந்து

## சில முத்துக்கள்

அவரின்

## 63வது பிறந்ததின வெளியீடு

**(23-11-1988)**

*(சென்ற மூன்று ஆண்டுகளில் அவர் நிகழ்த்திய அருளுரைகளிலிருந்து பொறுக்கியவை)*

தொகுப்பு:- செ. ஞானசேகரம்

வெளியீடு:

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தி,
திருநெல்வேலி.

(அகில இலங்கை சத்யசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுவின் அனுமதியுடன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: நவம்பர் 1988 (2000 பிரதிகள்.)
அச்சுப்பதிவு: ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.
விலை ரூபா 15/-

கிடைக்குமிடம்: யாழ்ப்பாணம் (திருநெல்வேலி) பல்கலைக்கழக விஞ்ஞான பீட நுழைவாயிலுக்கு எதிரேயுள்ள ஒழுங்கையிலுள்ள சத்யசாயி சேவா நிலையம்.
(ஞாயிறு, வியாழக்கிழமைகளில்
மாலை 3-30 — 5-30 மணிக்கிடையில்)

## அட்டைப் படங்கள்

**முன்அட்டை மேற்புறம்:** பகவானின் ஒரு கண் ஒரு கிளியினூடாகத் தெரிகிறது.

**முன் அட்டை கீழ்ப்புறம்:-** பிரசாந்தி நிலைய மந்திர் (புட்டப்பர்த்தி) இது பஜன் நடக்கும் மண்டபம். இதன் பின்புற அறை ஒன்றே பகவான் உறையுமிடம்.

**பின் அட்டை -** பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா

---

**குறிப்பு :**

ஒவ்வொரு கருத்தின் கீழும் த. ச. சா என்று குறிப்பிட்டிருப்பது, தமிழ் சனாதன சாரதி இன்ன இதழிலிருந்து பெற்றது என்பதே. இந்தக்கருத்துக்கள் பெறப்பெற்ற ஸ்வாமியின் அருளுரைகள் குறிப்பிட்டமாத சனாதன சாரதி இதழில் காணலாம். சாயிநிறுவனங்களில் நடத்தப்பட வேண்டிய கல்வி வட்டங்களில் இதைப் பிரயோசனப்படுத்தலாம்.

---

தமிழ் சனாதன சாரதி மாத இதழ்கள் பெற விரும்புவோர்! எயர் மெயிலானல் இந்தியப் பணம் ரூபா 120/-ம் கடல் மார்க்கமானல் இந்தியன் ரூபா 60/-ம் ஒருவருடசந்தாவாகக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிப் பெறலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**கன்வீனர் ஸ்ரீ சத்யசாயி ட்ரஸ்ட்**
**(தமிழ்நாடு)**
**"சுந்தரம்" 7, பகஸ் ரோடு,**
**ராஜா அண்ணுமலைபுரம், சென்னை 600028**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின்
அருளுரைகளிலிருந்து
சில முத்துக்கள்.

## பொருளடக்கம்


1. கடவுள்
2. மனிதன்
3. தேகம்
4. குரு
5. பிரேமை
6. பக்தி
7. தியானம்
8. கர்மம்
9. தர்மம்
10. எண்ணங்கள்
11. மனம்
12. ஞானம்
13. அத்வைதம்
14. ('I') நான்
15. பிரம்மம்
16. நான் யார்
17. ஆத்மதத்துவம்
18. மதங்கள்
19. புலன்கள்
20. நாமம்
21. சாதனை
22. நம்பிக்கை
23. உள்ளம்
24. ஆசை
25. தூய்மை
26. யக்ஞம்
27. யோகம்
28. சேவை
29. தியாகம்
30. ஆனந்தம்
31. நிகழ்காலம்
32. உருவவேற்றுமை
33. சத்யம்
34. அஞ்ஞானம்
35. சந்நியாசம்
36. சுயகட்டுப்பாடு
37. வைராக்கியம்
38. பாபம்
39. தெய்வப்பிரீதி, பாபப்பீதி, சமூகநீதி
40. நாவு
41. பஞ்சகோசம்
42. புருஷ அதமனும் புருஷ உத்தமனும்
43. பஜனை
44. சித்துக்கள்
45. குணங்கள்
46. புகழ் – இகழ்
47. லோபம்
48. அஹங்காரம்
49. சரணாகதி
50. காமம்
51. கோபம்
52. சமுதாயம்
53. சகவாசம்
54. ராகம் – துவேஷம்
55. பிரார்த்தனை
56. திரிகரணசுத்தி
57. மாணவர்
58. பெற்றோர்
59. கல்வி
60. சாயிதத்துவம்
61. சாயிநிறுவனம்
62. Watch
63. தீர்க்கஜீவிதம், திவ்யஜீவிதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எனக்கு ஒரு வேலை இருக்கிறது. மனிதகுலம் முழுவதையும் பேணுவதும் அவர்களது வாழ்க்கை முழுவதும் ஆனந்தம் நிறைந்து காணுமாறு நிச்சயப்படுத்துதலுமே. எனக்கு ஒரு பிரதிக்ஞை உண்டு. நேர்பாதையில் இருந்து விலகிச்செல்லும் எல்லோரையும் மீளவும் நல்வழிக்கு இட்டுச்செல்வதும் பாதுகாப்பதும் ........ என்னிடம் பற்றுக் கொண்டவர்களை நான் ஒருபொழுதும் கைவிடமாட்டேன்.'

o o o o o

'நான் ஓரிடத்திற்குரியவன் அல்லன். நான் ஒரு பெயருக்குட்பட்டவன் அல்லன். என்னிடம் 'எனது' 'உனது' என்பன இல்லை. நீ கைக்கொள்ளும் எந்தப் பெயர் மூலமாகவும் நான் விடை பகருகிறேன். எங்கே நான் வேண்டப்படுகிறேனே அங்கே நான் செல்கிறேன்'.

o o o o

'ஒருவர் யாராயிருந்தாலும், அவரது விசாரணை எவ்வளவாயிருந்தாலும், எவ்வளவுகாலம் அவர் முயன்றாலும் ஒருவராலும் எனது பெருமையை விளங்கிக் கொள்ள முடியாது'.

*(பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா, தன்னுடைய 21வது வயதில், தமயன் சேஷமராஜுவுக்கு எழுதிய பதிலிலிருந்து.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

## I

''ஒவ்வொருவரிடமும் சென்று, ஒவ்வொரு மனிதனிடமும் தூங்கிக் கிடக்கும் தெய்வீக உணர்வைத் தட்டி எழுப்புவதற்காக, முழுமையான தெய்வீக சக்தி சத்திய சாயியாக மனித சமுதாயத்திற்கு நடுவே வந்திருக்கிறது. நீ தூங்காமல் இருப்பதாலோ, தூக்கம் அதிகமாக இருப்பதாலோ, உறுமினாலோ, முனகினாலோ, உதைத்தாலோ, குறை கூறினாலோ, சண்டையிட்டாலோ, அழுதாலோ, அப்பொழுதும் நான் கைவிடமாட்டேன். உனது தெய்வீகத் தன்மை உறங்கும்படி நான் விடமாட்டேன். குழந்தை தன் கோபத்தையும் ஆத்திரத்தையும் தாய்மேல் செலுத்தினாலும், தாய் தான் தூக்கிச் செல்லும் குழந்தையைக் கைவிடுவதும் இல்லை, கீழே விழுவதற்கு விடுவதும் இல்லை. உன்னைச் சுமந்து செல்லவும், உன் கூடவரவும், உனக்கு உதவி செய்யவும் வந்திருக்கிறேன், உன்னை என்றால் கைவிட முடியாது. என் குழந்தைகளுக்கு நான் செய்யவேண்டிய கடமையில் தவறமாட்டேன். என்னுடைய பணிக்கு உதவி செய்கின்ற என்னுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் மிகவும் நன்றியுடன் இருப்பேன்'' என்கிறார் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா.

இப்படியும் ஒரு அன்பை, இப்படி ஒரு துணையை, இப்படி ஒரு உறுதியை, இப்படி ஒரு தயாளரை உலகம் என்றும் கண்டதுண்டா? நல்லவர் தீயவர் என்றுகூடப் பாகுபடுத்தாமல், எல்லோரையும் மீட்கவந்து, பிரபஞ்சம் என்னும் சேற்றில் அமிழ்ந்து போன நம்மை மீட்கக் கை நீட்டுகிறதே. இதையும் எவரும் வேண்டாமென்பாரா? திக்கற்றுத் தவிக்கும் மக்களுக்குக் கற்பக விருக்ஷம்போல் வந்து நம்முன் நிற்கிறதே! இதை அறியாத அறிவும் அறிவா? காணாத கண்ணும் கண்ணா? பந்தத்தில் நின்று மீள வழியறியாமல் கிடப்பவருக்கு ஆயிரக் கணக்கான வருடங்கள் காணாத விமோசனத்தை ஏற்றுக்கொள்ளாதிருப்பது நமது பாபமா? இந்தச் சாயி எதை நமக்குத்தர இருக்கிறது? ''ஸ்வாமியிடம் (என்னிடம்) உள்ள ஐஸ்வரியம் எவரிடமுமில்லை. அது என்னவெனில் நிலையான தூய்மையான மாசுமறுவற்ற பிரேமை ஒன்றே. இதுவே சாயியின் பெருமதிப்புள்ள நிதி. இதுமட்டுமிருந்தால் பிரபஞ்சமே நமக்கு அடிபணியும்'' என்கிறார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய தெய்வீகத் தகைமையை அவரே அறிவார். "நான் சாதுக்களுக்கும் சாதகர்களுக்கும் வழிகாட்டி, அவர்களுக்கு அருளுவதற்கே வந்திருக்கிறேன். நான் அனைத்துமாவேன், என்னை ஸ்துதி செய்யவேண்டாம். நீ உனது தந்தையை முகஸ்துதி செய்தா உனக்கு வேண்டுவனவற்றைக் கேட்கிறாய்? உரிமை கொண்டாடியே கேட்கிறாயல்லவா? அங்ஙனமே என்னிடத்திலும் தைரியமாகக் கேள். நான் இவ்வுலகத்திற்கு அழைக்கப்படாமல் வந்தேனில்லை. எல்லா நாட்டையும் மதத்தையும் சேர்ந்த முனிவர்களும் துறவிகளும் நல்லோர்களும் என் வரவை வேண்டினர். ஆகையால்தான் நான் வந்தேன். உங்கள் யாவரையும் அன்றும் இன்றும் என்றும் நான் அறிவேன். நான் சங்கு, சக்கரம், கதை பத்மங்களுடன் வந்திருந்தால் என்னைக் கண்டவுடன் நீங்கள் அஞ்சி ஓடிவிட்டிருப்பீர்கள், அல்லது கண்காட்சியில் ஒரு காட்சிப் பொருளாக வைத்திருப்பீர்கள். உங்களில் ஒருவரைப்போல் சாதாரண மனிதனாக இருந்தாலும் என்னை நீங்கள் பொருட்படுத்தியிருக்க மாட்டீர்கள். அதனால்தான் ஒரு மனித வடிவை எடுத்து மகிமைகளைச் செய்து வருகிறேன். ஆன்மீக மறுமலர்ச்சியே எனது குறிக்கோள், தர்ம மார்க்கம், பிரம்ம மார்க்கம் என்ற இரண்டையும் உங்களுக்குக் காட்டுவதற்கே வந்திருக்கிறேன்."

இந்தச் சாயி அவதாரம், தன் ஒவ்வொரு சொல்லாலும், செயலாலும் உலகமெங்கும் தெய்வீகத்தைப் பரப்பி வருகிறது. மக்கள் உள்ளங்களிலே நல்ல தன்மையை மலரச் செய்கிறது. "சாயி தத்துவமே பிரேமை தத்துவந்தான். எவ்வளவு தூரம் பிறர் உங்களை நிந்தனை செய்து உங்களுக்குக் கோபம் வருமாறு இகழ்ந்து பேசினாலும் நீங்கள் சிறிதும் பாதிக்கப்படாமல் எப்பொழுதும் புன்முறுவலுடனே இருத்தல் வேண்டும். போலியான சிரிப்பை வரவழைத்துக்கொள்வதை நான் குறிப்பிடவில்லை. உங்கள் இதயத்தின் ஆழத்திலிருந்து இந்த நேச உணர்வை எழுப்பி உண்மையாகவே மகிழ்ச்சியைப் புலப்படுத்துவதாக இருக்க வேண்டும் உங்கள் புன்னகை. இதயம் பரிசுத்தமாக இருந்தால் தான் இப்படிப்பட்ட இயல்பான மகிழ்ச்சி எப்பொழுதும் நிறைந்து இருக்கும்" என்கிறார் பாபா.

அவர் சொல்வதைக் கேட்காமல், அவருடைய பிரேமையை எப்படி அறிய முடியும். மக்களைப்பற்றி அவர் சொல்லும் உண்மையையும் அதை அடையும் மார்க்கத்தையும் அறியாமையை வளர்த்துக்கொண்டிருப்பவர்கள் எங்ஙனம் அறியமுடியும்? அவரை அடைந்தவர்களாகப் பலர் எண்ணிக்கொண்டும் அவர் அளிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருபகாரத்தைப் பெருது வாழ்வது அவருடைய கருத்துக்களைக் கேட்க முயலாத துர்ப்பாக்கியமே!

வேதங்களும் சாஸ்திரங்களும் கடவுளை எட்டக்கூடிய அளவு விவரித்தாலும் அதை மக்கள் எட்டாத பொருளாகவே எண்ணி வந்தனர். ஆனால் இந்தத் தெய்வஸ்வரூபம் தான் தெய்வம் என்று பிரகடனம் செய்து தன்னை நாடிய பக்தர்களுக்கு ஐயந்திரிபற தன் தகைமையைப் புரியவைப்பதோடு, அவர்கள் வாழ்வின் போக்கையே மாற்றி உயர்த்தி விடுகிறது. நாம் சாஸ்திரங்கள் மூலமும் சம் பிரதாய முறைப்படியும் அறிந்தவற்றில் உள்ள குறைபாடுகளை நோகாமல் வெளிப்படுத்தி சரியான வழிமுறைகளைத் தந்து வரு கிறது இந்தச் சாயி அவதாரம். (இந்த நூலில் தொகுக்கப் பட்டவை முழுமையும் அவையே). பிடிவாதமான கொள்கைகள் வைத்திருப்பவர்கள் இவற்றைக் கண்டு இளகுவார்களோ என் னவோ? ஆனால் உண்மை உள்ளவர்கள் எவரோ அவர்களுக்கு இந்த நூலில் உள்ள தொகுப்பு தேவா அமிர்தம். அவர்களின் ஞானக் கண்ணைத் திறக்கும். அவர்கள் வாழ்வு ஒளிமயமானதாயும் நாள்வீதம் தெய்வீகம் வளர்வதாகவும் இருக்கும் என்பது சத்யம்.

நாம் இதுகாறும் பஜனை, தியானம், பூஜை இவற்றால்தான் மோக்ஷம் பெறலாம் என்றிருந்தோம். ஆனால் பகவான் சொல் வதைக் கேளுங்கள். ''பஜனை, தியானம், பூஜை இவைகளினால் மோக்ஷம்பெற முடியாது. இவைகள் மனதைக் கட்டுப்படுத்தும் வழிவகைகளேயாகும். அவைகள் எண்ணங்களைத் தூய்மையாக்க உதவுகின்றன. அதன் பிறகு கடவுளை நாடும் மோக்ஷ சாதனையில் ஈடுபட வேண்டும். இவைகள் யாவும் பேரானந்த நிலையடைய வகுக்கப்படும் பாதையே. பாதையைச் செப்பனிட்டபின் பய ணத்தைத் தொடங்க வேண்டும். இந்தப் பயணமே சமுதாய சேவை. இந்தச் சேவை செய்யும்போதே ஒவ்வொரு உயிர்வாழும் ஜந்துவிலும் ஒரே தெய்வம் உள்ளது என்றும், இவை யாவும் ஒரே தெய்வத்தின் பல்வேறு உருவங்கள் என்றும் உணர்ந்து செயல்படவேண்டும்.''

''பவித்திரமான சேவை மாத்திரமே மனிதனைக் கடவுளிடம் கொண்டு செல்கிறது. கடவுளை அடைவதே வாழ்க்கை என்னும் யாத்திரையின் குறிக்கோள்''. சாயி அளிக்கும் சேவை மார்க்கம், உலகத்தில் நாம் காணும் சேவைகளைப் போன்றதன்று. அது, தியாகத்தின் மூலமாக, 'எனது' 'எனது' என்றும் 'நான்' என்றும் பொய்மையாய் வளர்ந்திருக்கும் அகங்காரத்தைத் தியாகம் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் மார்க்கமே. விடவிட, விடுதலை என்னும் மகிமை மிக்க லட்சியமே,

பல்வேறு பாகுபாடும் குணமும், கொள்கையும் பிரிவும் நிறைந்திருக்கும் எம்மிடத்திலே ஒன்றுகக் காணுவதையே வலியுறுத்தி 'நீங்கள் ஒருவருக்கொருவர் வேருனவர் என்று கொள்ள வேண்டாம். நீங்கள் வேறு பெயரால் உங்களை அழைக்கலாம். ஆனுல் யாபேரும் பல உடல்களில் காணப்படும் ஒரே ஆத்மாவின் பிரதிபிம்பங்களே. கண்ணுடியை எடுத்துவிட்டால் பிரதிபிம்பங்கள் மறைகின்றன. ஆனுல், அந்தப் பொருள் மறைவதில்லை. அதுபோல உடலாகிய கண்ணுடியை நீக்கிவிட்டால் அந்தப் பிரதிபிம்பம் மாத்திரமே மறைகிறது. ஆனுல் ஆத்மா (கடவுள்) மறைவதில்லை, கடவுள் உங்கள் ஒவ்வொருவரிடத்தும் உள்ளார் என்ற உண்மையைக் கண்டு கொள்ளுங்கள்'' என்கிருர் பாபா.

''பவித்திர சேவை மாத்திரமே மனிதனைக் கடவுளிடம் கொண்டு செல்கிறது. கடவுளை அடைவதே வாழ்க்கை என்னும் யாத்திரையின் குறிக்கோள்'' என்று சேவையே விடுதலைக்கு அதி உயர்ந்த ஒரே சாதனை என்று தெளிவுபடுத்தி ''விஞ்ஞானத்தோடு கூடிய விவேகம் உங்களுக்கு அளிக்கப்பட்டது. அந்த மேலான தெய்வநிலைக்கு எழுவதற்கு முயல வேண்டும். இதுவே உங்களுடைய மேலான விதியாகும்'' என்று சேவையின் மகத்துவத்தைப் பெரிதும் புகழ்ந்து சொல்கிருர்.

''இவ்வுலகில் ஒரு பரம உண்மை உளது. காணப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் மறை பொருளான ஒரு ஆதாரம் உண்டு. மாற்றமுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் மாருத ஒன்று அதன் ஆதாரமாயுள்ளது'' என்று எங்கள் வாழ்வின் உண்மையைத் தெளிவுபடுத்தி எமது க்ஷேமத்திற்காகவும் லோக க்ஷேமத்தை வளர்க்கவும் மூன்று நியதிகளைத் தந்திருக்கிருர். அதாவது ''கடவுள் மேல் அன்பு வைத்திருங்கள்'' (தெய்வப்பிரீதி), பாபத்திற்கு அஞ்சுங்கள் (பாபப்பீதி). சமூகத்தில் நல் ஒழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள் (சமூகநீதி). இம் மூன்றையும் மந்திரங்களாகக் கொண்டு, இவற்றை மனசாரக் கடைப்பிடித்துத் தந்தம் வாழ்க்கையைப் பவித்திரமாக்கிக் கொள்ளுங்கள் என்கிருர் பகவான். ஏனெனில் இறைவன் மேல் அன்பு வைக்கும் பொழுது தீய எண்ணங்கள் தாமாகவே ஓயும். நல்லொழுக்கம் வளரும். நல்லவர்கள் சமூகத்தில் நிறைய நிறைய, மக்களிடையே ஆத்ம சமன்பாடும் சுபீட்சமும் நின்று நிலவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோர் இணக்கம் இனிமையைத் தரும். மகான்களுடன் சகவாசம், வைராக்கியம் ஞானமாதியவற்றை அளிக்கும். இவை பெரும் புண்ணியவசத்தால் மட்டுமே கிட்டும். அங்ஙனமானல், ''தெய்வ நிலை'' என்ற பெரும் பரிசை மக்களிடையே வளர்க்க வந்திருக்கும் சாயி அவதாரத்துடன் உண்மையான தொடர்பு கிடைப்பதானல் அது அநேக ஜென்ம புண்ணியத்தால் மாத்திரமே கிட்டும். இந்த நூலில் உள்ள கருத்துக்களை நீங்கள் வாசித்துத் தெளியும்போது, உங்களுக்கு மேலான ஒரு தெய்வ தத்துவத்தின் துணை கிடைத்துவிட்டதாக அறிந்து மகிழ்ச்சியும் சாந்தியும் அடைவீர்கள். உங்கள் கவலைகளுக்கும் துன்பங்களுக்கும் நிவர்த்தியும், தெய்வ வாழ்விற்கோர் அத்திவாரமும் கிடைத்துவிட்டதாகவும் உணர்வீர்கள்.

தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று, மேற் சொன்ன பாக்கியம் கிடைத்ததை உணரும் அன்பர்களுக்கு, இந் நூலின் மூலமாக ஒரு சேவையும் பின் தொடர்கிறது. இதுவும் நீங்கள் கடைத்தேற சுவாமி சொல்லியிருக்கும் மேலான பணியே. அதாவது இந்நூலைப் பற்றி பிறருக்குச் சொல்லி அவர்களையும் இந்நூலைப் பெற்றுப் படித்துப் பெரும் பலன் எய்தச் செய்வதே. இதை நீங்கள் செய்யும்போது அவர் சொல்லும் அறிவுரையின்படி வாழ்பவராகவும் ஆவீர்கள். அதனால் ஆனந்தம் பெற்றவராவீர்கள்.

## II

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அருளுரைகளிலிருந்து சில முத்துக்களின் தொகுப்பே இந்நூல். ஸ்வாமியின் 60 வது பிறந்த தினமாகிய நொவெம்பர் 1985 இற்குப் பின், சென்ற செப்தெம்பர் 1988 வரை அவர் செய்த அருளுரைகளிலிருந்து பொறுக்கியவையே இவை. ஸ்வாமியின் மேற்படி அறிவுரைகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுத் ''தமிழ் சனதன சாரதி'' என்னும் மாத இதழாக 'சுந்தரம் பக்ஸ் ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை. 600028 என்ற விலாசத்திலுள்ள 'தமிழ்நாடு சத்தியசாயி ட்ரஸ்ட்'டினல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. இவர்களுடைய அங்கீகாரத்தை முன்னிட்டு, பகவானுடைய 63வது பிறந்த தினத்தில் அவர் பாதத்தில் சமர்ப்பிக்கும் ஒரு பிரசாதமாகவே இந்நூல் தொகுப்பு வெளி வருகிறது. இது 200க்கு மேற்பட்ட கருத்துக்கள் கொண்டது. இவை 63 தலைப்புக்களில் அடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வாமியின் நூல்களை வாசிக்க வசதியும் சந்தர்ப்பமும் இல்லையே என்று வருந்துபவருக்கு இது கற்பகம் போலிருக்கும் என்றால் மிகையாகாது. தீயதை நல்லதாகவும் இல்லாததை உள்ள தாகவும் கொண்டு முத்திநெறியறியாத மூர்க்கர்களாய் அறியாமை யில் மயங்கி இருக்கும் நமக்கு பேரொளி கிட்டியது போலாகும் இந்நூல்.

ஜீவாம்ருதமாகிய அன்பை, எவ்வளவோ காலம் முயன்றும் இன்னும் காணாத நாம் பிரேமை சமுத்திரமான இந்தச் சாயி அவதாரத்தின் கைங்கர்யத்தில் தொடர்பு வைப்பது அவருடைய சங்கல்பத்தாலேயே. பிரேமை என்னும் தடாகத்தில் பூத்திருக்கும் அளவிலா மலர்களில் ஒரு சில மலர்களைக் கோத்து ஒரு மாலை யாக்கியதுதான் இந்த நூல் வெளிவருவதற்குச் செய்த முயற்சி. இதை வாசிப்பவர்களுக்கே இம்மாலை உரித்தாகும். ஸ்வாமி, அவர் களுக்காகவே இதைச் சங்கல்பித்திருக்கிறார்.

ஆத்ம வழியில் எந்த விஷயத்தைப்பற்றித் தெரியவேண்டுமோ அவற்றில் அநேகம் இங்குண்டு. ஒரு நிமிஷத்தில் அதில் ஒன்றைப் பற்றி அறிந்துகொள்ளக் கூடிய அகராதியாகவும் இந்நூல் இருப் பதை நீங்கள் காண்பீர்கள்.

(திருநெல்வேலி) யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்யசாயிசேவா நிலையத் தலைவர் ஸ்வாமியின் 63வது பிறந்ததினத்திற்கு ஒரு நூல் வெளி யிட வேண்டும் என்று விரும்பினார். இதை அகில இலங்கை சத்யசாயி சேவா நிறுவனத் தலைவரும் ஆதரித்தார்.

ஸ்வாமியின் அண்மைக் காலக் கருத்துக்கள் சத்தியத்தின் அற்புதமே! அவருடைய ஒவ்வொரு சொல்லும் பொன்போல் பிரகாசித்திருப்பதைக் கண்டு வியந்துகொண்டிருக்கும் எமக்கு, அவருடைய கருத்துக்களைத் திரட்டி லேசாக மக்கள் அறியக் கூடியதாகக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அவருடைய சங்கல்பத்தால் உதித்தது. மேற்படி சத்யசாயி சேவா நிலையத்தார் 1000 பிரதிகளை விரும்பினர். எமது இன்னொரு ஆத்ம நண்பர் இந்நூல்களை நமது அன்பர்கள் கொண்டு சென்று பரப்பும் சேவை யாகச் செய்யவேண்டும் என்ற கருத்திற்கிணங்க இன்னொரு ஆயிரம் பிரதிகளுக்கு ஊக்கம் அளித்தார்.

ஸ்வாமியினுடைய தமிழ் பேசும் அடியார்களின் நலனைப் பெரிய அளவில் கவனிப்பவர்களாக விளங்குகிறார்கள் தமிழ்நாடு சத்யசாயி ட்ரஸ்டினர். ஸ்வாமியின் அருளுரைகளை முழுமையாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரிக்கும் ஒரு அரிய இடமாக அது இருந்து வருகிறது. தெலுங்கில் ஸ்வாமி செய்யும் உரைகளை அவற்றின் தத்துவம் சிறிதும் குறையாது இனிய தெள்ளிய நடையில் தமிழாக்கம் செய்து உடனுக்குடன் கொடுத்துதவும். அங்குள்ள அறிவாளரின் தொண்டு மிகவும் போற்றுதற்குரியது. இந்தச் சனாதன சாரதி சஞ்சிகை மாதந்தோறும் ஸ்வாமியின் உரைகளைத் தாங்கிக் கொண்டு அடியார்கள் வீடுதோறும் சென்று அவ்வவ் வில்லங் களில் ஆனந்தத்தையும் மெய்யறிவையும் சொரிகின்றன. அதனு லன்றோ, இந்த நூலின் தொகுப்பும் லேசாகத் தோன்ற முடிந்தது. ஸ்வாமியின் கருத்தை இவ்விதம் நிறைவேற்றும் அவர்கள் பாக்கிய சாலிகளே. நம் நன்றி என்றும் அவர்களுக்கு உரித்தாகும்.

இந்தத் தொகுப்பு உருவாவதற்குக் கருத்துக்களைப் பிரதி பண்ணித் தந்த எமது அன்பர்களுக்கும் முக்கியமாக எங்கள் மாணவ அன்பருக்கும் தொடக்கத்திலிருந்து திருத்தங்கள் சொல்லி பிரதிகள் சரிபார்த்து, எனது வேலையை மிகவும் சொற்பமாக்கிய எனது மகனுக்கும். சாயியின் திருவருள் உரித்தாகுக.

ஜெய் சாயிராம்.

கொக்குவில்.
ஸ்ரீ லங்கா.
23-11-88.

செ. ஞானசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய் சாயிராம்

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின்

## அருளுரைகளிலிருந்து சிலமுத்துக்கள்

## (1) கடவுள்

### கடவுளை மறுக்கிறவன் தன்னையே மறுக்கிறான்:

கடவுள் எங்கும் இருக்கிறார். "இவரது கால்களும் கைகளும் எங்கும் இருக்கின்றன" என்று கீதை (அத்தியாயம் 11) உறுதியாகக் கூறுகிறது. அதுபோல அவரது கண்களும் தலையும் முகமும் எங்கும் இருக்கின்றன. யாரும் கடவுளை மறுக்கவோ, ஒதுக்கவோ இயலாது. கடவுளை மறுப்பவன் தன்னையே மறுக்கிறான். இறைவனிடம் பற்றுறுதி வளர்த்துக் கொண்டு எல்லாரிடமும் அவர் உறைகிறார் என்பதை அறிய வேண்டும். அத்தகைய பற்றுறுதி உம்மிடம் பணிவு, தைரியம், மரியாதை உணர்வு இவற்றை விதைத்திடும்.

(த. ச. சா. மே 87. ப. 3)

### இவ்வுலகம் என்னும் மாவிற்கு இறைதத்துவமே சர்க்கரை போன்றது;

இவ்வுலகில் இறைவனை நீக்கினால் இன்பம் இல்லை. இவ்வுலகம் மாவு போன்றது. அரிசிமாவோ கோதுமைமாவோ தனித்து ருசியில்லை. அத்துடன் சர்க்கரை சேர்த்துப் பிசைந்தால் ருசி; இவ்வுலகம் என்னும் மாவிற்கு இறை தத்துவமே சர்க்கரை போன்றது. உலக வாழ்வின் உண்மையான சுவை அனுபவிக்க இறையன்பினை வளர்க்க வேண்டுமெனத் தெரிகிறதல்லவா?

(த. ச. சா. எப். 88. ப. 16.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரம்பொருள் ஒன்றே:

முகம்மதியர்கள் அவரை அல்லா என்று அழைத்து வழிபடு கின்றனர். தீவிர கிறிஸ்தவர்கள் அவரை ஜெஹோவா என்று அழைக்கின்றனர். வைணவ மதத்தினர் அவரை மகா விஷ்ணு என்று அழைக்கின்றனர். சைவசமயத்தைச் சார்ந்தவர்கள் அவ ரையே 'சிவா' என்று போற்றி வழிபடுகின்றனர். நாடியவர் களுக்கு எல்லோருக்கும் ஆயுர் ஆரோக்கியத்தையும் சகலவிதமான சௌபாக்கியங்களையும், சுகபோகங்களையும், ஆனந்தத்தையும் அளிக்கவல்ல பரம்பொருள் ஒன்றே! அந்தப் பரம் பொருளையே பலவிதமான பெயர்களாலும் பல சமயங்களைச் சார்ந்தவர்கள் அழைத்து வழிபடுகின்றனர். இந்த உண்மையை நீங்கள் யாவரும் உணரவேண்டும்.

(த. ச. சா. ஜன. 87. ப. 1.)

## தெய்வத்தின் செயலுக்குக் காரணமுண்டு:

தெய்வத்தின் செயல் ஒவ்வொன்றிற்குப் பின்னும் ஒருதகுதி யான காரணம் உண்டு. ஆகவே அவரை வழிபட்டு அவருடைய அருளைப்பெற முயல வேண்டும். உதாரணமாக, சக்குபாயின் கதையை எடுத்துக் கொள்ளுவோம். பண்டரிபுரத்திற்கு போகும் பக்தர்கள் குழுவில் கலந்து கொள்ள சக்குபாய் விரும்பியபோது அதை எளிதாக கிருஷ்ணன் செய்திருக்கலாம். ஆனால் அப்படி செய்யவில்லை. தனது கணவனின் விருப்பத்திற்கு மாறாக அவள் சென்றிருந்தால் அவப்பெயர் வந்திருக்கும். அவளுடைய பக்தி யின் உயர்வை உலகுக்கு உதாரணமாக எடுத்துக்காட்டவே கிருஷ்ணன் சக்குபாய் போல் வேடம் தரித்து, மாமியாரின் தொல்லைகளுக்கு உட்பட்டு அசல் சக்குபாயை பண்டரிபுரம் அனுப்பிவைத்தார். கிருஷ்ணன் ஏன் அப்படிச் செய்தார்? தர் மத்தை நிலைநாட்ட கடவுள் எந்த உருவமும் தாங்கி எவ்விதமான துன்பங்களுக்கும் உட்பட தயாராக உள்ளார். ஒருபுறம் சமூகநீதி காப்பாற்றப்பட வேண்டும். மறுபுறம் தனது பக்தரும் வழிதவறி விடக்கூடாது. இப்படிப்பட்ட நேர்எதிரான நிலைகளை ஒரே சமயத்தில் சமாளிக்க தெய்வசக்தியினால் தான் சாத்தியமாகும்.

(த. ச. சா. 1988, மே. ப. 6)

## தெய்வம் தன்னை நெருங்கியவர்க்கே அனுக்கிரகிக்கிறது:

தெய்வத்தை நெருங்கும் ஒவ்வொரு நபருக்கும் கூட தெய் வீகத் தன்மை கிட்டும் வாய்ப்பு இருக்கிறது. நெருப்பிற்கு ஆகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷணசக்தி இல்லை. ஆனால், தன்னை நெருங்கும் நபர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுத்து, வெப்பத்தை அளிக்கின்றது. தன்னை நெருங்கியவர்களுக்கே வெளிச்சத்தையும் வெப்பத்தையும் நெருப்பு அளிக்கின்றதேயன்றி, தொலைவில் உள்ளவர்களுக்கு அளிப்பதில்லை. அதுபோன்றே தெய்வம் தன்னை நெருங்கியவர்களுக்கு தனது சக்தியையும், தனது அன்பையும், தனது அனுபவசாரத்தையும் அளிக்கின்றது. இத்தகைய தெய்வத்தை இன்று நாம் விசுவாசிப்பதில்லை.

(த. ச. சா. 1986, யூலை. ப: 2)

## இறைவனின் அருளாசியை இடைவிடாது நாடியிருங்கள்:

இறைவனை அன்றுடம் நன்றியுணர்வுடன் இரண்டு அல்லது மூன்று வேளைகள் நினைவுடன் துதிக்க வேண்டும். இது உங்களுக்கு மன நிம்மதியைக் கொடுக்கும். உங்களுடைய உலகாயதமான கடமைகளை விட்டுவிட வேண்டியதில்லை. அவைகளை இறைவன் நாமத்தை எப்போதும் உச்சரித்துக்கொண்டே செய்திடுங்கள். இறைவனின் அருளாசியை இடைவிடாது நாடியிருங்கள். உங்களுடைய அண்டை வீட்டாருடனோ அல்லது வேறு ஜனங்களிடமோ அதிகமாக அவர்களுடைய விஷயங்களில் உங்களை விடுவித்துக் கொள்ள முடியாத அளவிற்கு இணைத்துக்கொண்டு விடாதீர்கள். உங்களைச் சுற்றியுள்ள இயற்கையின் எழிலையும், நிலத்திலும் வானிலும் காணப்படும் இயற்கையின் வனப்புமிக்க காட்சிகளையும் கண்டு களித்து ஆனந்தம் கொள்வதிலேயே உங்கள் நேரத்தைப் போக்குவது நலம். உதாரணமாக, பச்சைப் பசேலென்று விளைந்துள்ள பயிரினங்களும், பூத்துக்குலுங்கும் மலர்ச்செடிகளும் இதமான சுகமளிக்கும் மெல்லிய தென்றலும், காணும்போதே மனதைக் கொள்ளை கொள்ளும் கார்மேகங்களும், எவ்விதக் கவலையுமின்றி சுதந்திரமாகத் திரியும் பறவை இனங்களின் இனிய ஒலியும் தன்னை மறக்கச் செய்து எல்லையில்லா இன்பம் அளிப்பவை. இதைவிட சிறந்த அனுபவம் வேறு எதுவுமில்லை.

(த. ச. சா. 1986, ஜன. பின் அட்டை)

## கடவுளை அடைய மூன்று நேரான பாதைகள்:

கடவுளையடைய மூன்று பாதைகள் உள்ளன. முதலாவது பாதை நாம் செய்யும் செயல்கள் யாவையும் கடவுளுக்கே அர்ப்பணமாக கடவுளின் களிப்பைக்கருதியே கடமையுணர்வுடன் செய்தல், இரண்டாவது செய்யும் கர்மங்களுக்கான பலனை நாடும் இச்சையைத் துறந்து விடுதல், மூன்றாவது தியானத்தின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளிடம் ஐக்கியமடைந்து விடுதல். எல்லாச் செயல்களையும் தெய்வத்திற்கு அர்ப்பணமாகச் செய்தல் செய்பவருக்கு ஞானத்தை அளித்திடும். செயல்களுக்கான பலனை எதிர்நோக்கும் விருப்பத்தைத் துறந்து விடுவதால் மன அமைதி பெறலாம். தியானம் உள்ளத்தில் பரிபூரணமான சாந்தியைத் தரவல்லது.

(த. ச. சா. மாச். 1987, பின் அட்டை)

### இறைவனை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அழைப்பதில் அர்த்தமில்லை:

''எங்கும் வியாபித்துள்ளவர்'' என்றால் ஒரு இடத்தில் இருந்து மற்ற இடத்தில் இல்லாமல் இருக்கமுடியாது. ஆகவே ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ''போக்குவரத்து''க்கே இடமில்லை! இதை நன்கு புரிந்துகொள்ள முயலுங்கள். ''ஈஸ்வர: ஸர்வபூதானாம்'' என்றபடி எல்லா உயிரினங்களிலும் இருப்பவர் ஈசனென்றால் அவர் இல்லாத இடமே இல்லை என்று பொருள்படும். ஆகவே, அவரை ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அழைப்பதில் அர்த்தமே இல்லை. நமக்குள்ளேயே இறைவன் உள்ளாரெனும் உண்மையை உணரவேண்டும்.

(த. ச. சா. 1988 யூலை. ப. 2)

## (2) மனிதன்

### மனிதன் தெய்வீகமானவனே!

மனிதன் தெய்வீகமானவனே என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன், நம்புங்கள். தெய்வத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் புனித பணி புரிந்திடவே இவ்வுலகில் பிறவி எடுத்துள்ளான் மனிதன். தாழ்ந்தவன் என்றோ, பலஹீனமானவனென்றோ பாபி என்றோ மனிதனைக் கருதுவது தவறு. அப்படிக் கருதுவதே மகத்தான பாபச் செயலாகும். ஒவ்வொருவரும் தனது பிறப்புரிமையான சாந்தியை அடைந்தே தீரவேண்டும். அமைதியின்மை(அசாந்தி) என்பது மனிதனின் இயல்புக்கு மாறானது. அவனது உண்மை இயல்பு ''சாந்தி'' யேயாகும். தனது பாரம்பரிய இயல்பான சாந்தியை திரும்பப்பெற மனிதன் பற்பல வழிகளில் முயற்சி செய்து வருகிறான். செல்வம் சேர்ப்பதிலும் உடல்நலத்தை சீராக பாதுகாப்பதிலும், கல்வியறிவில் அதிக தேர்ச்சி பெறுவதிலும், நுண்கலைகளில் தேர்ந்த அனுபவம் பெறுவதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளைச் செய்கிறான். ஆனால் இவையாவும் அடிப்படையான வையல்ல. இந்தவழிமுறைகளையெல்லாம் சிறப்பாக நிறைவேற்றினாலும் மூன்று அடிப்படைத் தேவைகள் நிறைவேறாமல் நின்றுவிடுகின்றன. சத்தியத்தையும் ஞானஒளியையும் அமரத்துவத்தையும் அடைதலென்பவையே அவை. சத், ஜோதி, அம்ருதம் இவை மூன்றும் பெறுவதில் வெற்றி கண்டால் மட்டுமே சாந்தி நிலைத்திருக்கும். ("அசதோமா சத்கமய; தமஸோ மா ஜ்யோதிர்கமய; மிருத்யோமா அம்ருதம் கமய" என்ற உபநிடத வாக்கியம் இதையே விளக்குகின்றது.

(த. ச. சா. 1988, ஏப். பின் அட்டை)

## மனிதத்துவம் பவித்திரமானது:

மனிதத்துவமென்றாலே பவித்திரமானதென்று பொருள். "ஜந்துனாம் நரஜன்மதுர்லபம்" எல்லாப்பிறவிகளிலும் கிடைத்தற்கரிய பிறவி மனிதப்பிறவி. இதை நாம் வீணாக்கக் கூடாது. துன்மார்க்கத்தில் செல்லலாகாது. பரோபகாரம் செய்வதே புண்ணியம் என்பதை மனதில் எப்போதும் கொள்ளவேண்டும். பிறருக்கு உபகாரம் ஏதும் செய்யமுடியாமற்போனாலும் அபகாரமாவது செய்யாமலிருக்க வேண்டும். இதுவே உபகாரமென்று சில சமயங்களில் கருதப்படும். இப்படிப்பட்ட நீதிநெறி புகட்டும் பாட்டுக்கள் எத்தனையோ லக்ஷக்கணக்கில் பெரியோர்கள் வழங்கியுள்ளனர். அவைகளில் நாம் சிலவற்றையாவது ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும்.

(த. ச. சா 1988 யூலை, ப: 8)

## மனிதன் இந்தச் சரீரம் மட்டுமன்று:

மனிதன் எனப்படுவது இந்தச்சரீரம் மட்டுமன்றி அதனுள் உள்ள ஆசைகளும் உணர்வுகளும் நிறைந்த உள்ளமும், சித்தமும், அகங்காரமும் எல்லாம் சேர்ந்ததேயாகும். மனிதப்பிறவி எடுத்ததின் குறிக்கோளை அடைய ஒவ்வொருவரும் தனக்குள்ளே இருக்கும் " ஆத்மா " வை உணர முற்பட வேண்டும். இந்தச் சரீரம் நன்கு வளர்ந்து நல்ல உடல் நலத்துடன் ஒருவர் இருக்க வேண்டுமாயின் " சாத்துவிக " உணவு உட்கொள்ள வேண்டும். இரண்டாவதாக நல்ல எண்ணங்கள் உள்ளத்தில் உருவாக வேண்டும். மூன்றாவதாக இந்த பௌதிக உடலின் உதவியுடன் நல்லகாரியங்கள் செய்திடவேண்டும். ஆகவே நல்லவராய் நலமுடனிருப்பதென்பது சரீரத்தை மட்டும் நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் பேணிக் காப்பதல்ல. எண்ணங்களும் செயல்களும் கூட நல்லவைகளாக இருத்தல் வேண்டும்.

(த. ச. சா. 1986. மார்ச். ப. 11)

## மனிதன் தெய்வத்தின் அம்சம் என்ற நம்பிக்கையின்றி எவ்வித சாதனையும் பயன்தராது:

மனிதன் தனக்குள்ளிருக்கும் தெய்வத்தை உணர வேண்டுமெனில் அதற்குரிய பிரயாசையை மேற்கொள்ள வேண்டும். இவையே விசாரணை, சாதனை, பக்தி என்ற வழி முறைகளாகும். இப்படிப்பட்ட முறையான சரியான நடவடிக்கைகளால்தான் தெய்வத்துவத்தை உணர முடியும். இதற்கு அடிப்படைத்தேவையானது நம்முள் தெய்வம் இருக்கிறது நாம் தெய்வத்தின் அம்சமே என்ற நம்பிக்கைதான். இந்த நம்பிக்கையின்றி எவ்வளவு சாதனைகள், மற்றும் பிரயாசைகள் செய்தாலும் எவ்வித பயனுமிருக்காது.

(த. ச. சா. செப். 1986 ப: 2)

## மனிதனின் கடமை சமூகசேவை செய்து மெய்ப்பொருளை உணர்தலாகும்:

மனிதனின் முதற்கடமை ஆண்டவனின் கருணைநிரம்பிய பிரேமையை தானும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்துவதுவேயாகும். புனித மனிதப்பிறவி எடுத்ததின் நோக்கம் சுயநலம் காக்கவும் சுயதேவையை பூர்த்தி செய்து கொள்ளவுமல்ல. சமூகசேவை செய்வதற்கே இப்புனிதப்பிறவி அளிக்கப்பட்டுள்ளது. சுயநலமற்ற சமூகசேவை செய்வதே மனிதனுக்கு ஆத்மதிருப்தியை அளிப்பதுடன் பிறவிப்பெரும்பயனை மெய்ப்பொருளுணர்தலையும் பெறச்செய்யும்.

(த. ச. சா–1988, ஒகஸ்ட். ப:1)

## மனிதர் தெய்வத்துவத்தைத் தமது மட்டத்திற்குத் தள்ளுகிறார்கள்:

கடவுளையும் மனிதரைப் போல் அவருக்கு மனைவி மக்கள் எல்லாம் இருப்பதாக விவரித்து வருவது மிக்க மதியீனமான செயல். கடவுள் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கும் பொருட்டு மாயையைச் சதிபதியாக ஆக்கியதை மனிதர்களின் தாம்பத்திய சேர்க்கைக்கு ஒப்பாகக் கருதுவது அறிவீனமே. சிருஷ்டிப்பதற்குப் பகவானுக்குச் சதிபதி தேவையா? தனது சங்கல்பத்தினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையுமே சிருஷ்டி செய்து விடலாமே. மனிதர்கள் அஞ்ஞானத்தினால் தெய்வத்தை தமது மட்டத்திற்குத் தாழ்த்தி அந்த அனுபவத்தில் மகிழ்கிறார்கள்.

(த. ச. சா. செப். 1986. ப. 8, 9)

## மனிதன் தன்னை உயர்த்திக்கொள்ள வழியுண்டு:

எப்படிப்பட்ட கொடூரமான சூழ்நிலையில் பிறந்திருந்தாலும் அப்பியாசத்தினாலும், தான் சேரும் நபர்களின் தொடர்பினாலும் மனிதன் மிக நல்லவனாக குணசீலனாக வாழ வாய்ப்புண்டு. சத்சங்கத்தில் சேர்வதினாலும், நல்ல புராண இதிகாசங்களை கேட்பதாலும், தெய்வ பக்தியில் ஈடுபடுதலினாலும் மனிதன் தன்னைச் சிறந்தவனாக உயர்த்திக்கொள்ள வழியுண்டு. இதற்கு புலன்களை கட்டுப்படுத்துதல் மிக அவசியமாகும்.

(த. ச. சா. 1988. ஓகஸ்ட். ப. 10)

## நான் மனிதன் என்பது சரீர அமைப்பில் மாத்திரமா?

நான் மனிதன், மனிதன் என்று உங்களுடைய சரீர அமைப்பைக் கொண்டு பெருமையாகக் கூறிக்கொள்கிறீர்கள். இதுசரியல்ல. குணத்தில், நடத்தையில், பண்பில் மனிதராக விளங்கவேண்டும். அதுவே உங்களை உண்மையான மனிதரெனக் கருதும் தகுதியை உங்களுக்களிக்கும்.

பச்சைநிறமான பறவைகள் யாவும் கிளியாகிவிடுமா? மலர்களின் மீதுள்ள புழுக்கள் மிருகங்களாகிவிடுமா? புலித்தோலைப் போர்த்திக் கொண்டுவிட்டால் கழுதை புலியாகிவிடுமா? பன்றி, உருவத்தில் மிகப்பெரியதாயினும் யானையாகிவிடுமா? ஆகவே உருவத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு மனிதரென ஒருவரைக் கருதமுடியாது. செய்கைகளினால் மனிதத்துவத்தை நிரூபிக்க வேண்டும். செயலாற்றும் வாய்ப்பு உங்களுக்குக் கிட்டும்போது இதை நழுவ விடக்கூடாது. உலகவிஷயங்களைப்பற்றி நீங்கள் படித்துக் கற்றுக் கொள்ளும் போது ஆன்மீக அறிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

(த. ச. சா. செப். 88 ப. 3.)

## சரீரம் மனிதப்பிறவியின் குறிக்கோளை அடைவதற்கே:

சரீரத்தினாலேயே மனிதன் மனிதன் எனக் கருதப்படுகின்றான். நன்னெறியுடன் வாழ்க்கை வாழ்வதற்குச் சரீரம் இன்றியமையாதது. மனிதனுக்குச் சரீரம் அளிக்கப்பட்டுள்ளது எதற்காக வெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப் பிறவியின் குறிக்கோளேயடைவதற்கே. இதற்கான முயற்சியாகப் பெரியோர்களே வணங்கிப் பணிவதும், பெற்ருேருக்கு சேவை செய்தலும், கடவுள் வழிபாடு செய்வதும் விதிக்கப்பட்டுள்ளன. சாஸ்திரங்களேயும் மற்றும் சான்ருேர்களின் வாழ்க்கைகளேயும் கசடறக்கற்று அதன்படி நடந்து எல்லோரும் இன்புற்றிருக்கும்படி தமது வாழ்க்கையை அர்ப்பணித்துச் சமுதாயத் தொண்டாற்றுவதும் வாழ்வைப் புனிதப்படுத்த வல்லவை. இப்படி சுயநலமற்ற மக்கட்சேவை செய்தால் அனேவரும் அன்புடன் பாராட்டும் வாய்ப்புக் கிட்டுவது திண்ணம்.

(த. ச. சா. மே 86 பக் 1)

# (3) தேகம்

## தேகம் கர்மத்தின் சின்னம்:

நாம் சரீரத்தால் செய்யும் பணிகளே 'கர்மா' என்று நினேக்கிருேம். கீதையில் விளக்கப்படுவது என்னவென்ருல் தேகமே கர்மத்தின் சின்னம், அது கர்மத்தால் விளேந்தது என்பதே. சந்நியாசியாயினும் சம்சாரியாயினும் கர்மத்திஞலேயே இந்தத் தேகத்தைப் பெறுகிருன். கர்மஸ்வரூபமான இந்தத் தேகத்தில் ஆத்மாவைக் காணவேண்டும். ஆத்மாவில் எல்லா உயிரினங்களேயும் காணலாம்.

(த. ச. சா. மாச். 1987 ப. 9)

## தேக உணர்வுள்ளவரை பிரம்மத்தை உணர முடியாது:

தேக உணர்வு உள்ளவரை பிரம்மத்தை உணர முடியாது. இதைச் சிறுகச், சிறுகக் குறைத்துக் கொண்டே வந்து. தெய்வத்தின் மீது பற்றுதலே வளர்த்துக்கொண்டே வரவேண்டும். அன்பை முழுமையாக அர்ப்பண உணர்வுடன் தெய்வத்தின் மீதே செலுத்த வேண்டும்.

த்வமேவ மாதாச பிதாத்வமேவ
த்வமேவ பந்துஸ்ச ஸகாத்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம்த்வமேவ
த்வமேவ சர்வம் மமதேவதேவா.

தெய்வமே மாதா, பிதா, பந்து, சகா மற்றும் செல்வம் எல்லாமாக உணரும் தத்துவம், திட நம்பிக்கையுடன் பின்பற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றப்படவேண்டும். அப்பொழுதுதான் பேரானந்தத்தை அனுபவிக்க முடியும்.

(த. ச. சா. பிப். 1987 ப. 20)

### இந்த உடல் இறைவன் கோயில்:

நாம் எதைச் செய்தாலும் லௌகீக கர்மங்களாகப் பாவிக்காமல், தெய்வீக கர்மங்களாக விசுவாசிக்க வேண்டியது மிகமிக அவசியமானதாகும். நாம் செயலாற்றும் செயல்களனைத்தும் கூட தெய்வார்ப்பண பாவனையோடு செயலாற்றக் கூடியவைகளாக இருத்தல் வேண்டும். (Work should be transformed into worship) இந்த உடல் இறைவனின் கோயில். இறைவன் நம் உள்ளும், புறமும், முன்னும், பின்னும், எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார். ஆகவே, ஆனந்தத்தோடு இறைவன் மீது அன்பு செலுத்திக் கொண்டிருந்தால் அந்த அன்பே பரதத்துவமாக மாறிவிடுகின்றது.

(த. ச. சா. 1986, யூலை. ப. 5)

## (4) குரு

### தாய், தந்தை, குரு, தெய்வம்:

நாம் உலக வழக்கில் தாய், தந்தை, குரு, தெய்வம் என்ற வரிசையில் கூறப்படுவதைச் கேட்கிறோம். இந்த வரிசைக்கென்று ஒரு சிறப்பு உள்ளது. குழந்தை பிறந்ததும் அதனைத் தாய் தான் காண்கிறாள். அக்குழந்தையைத் தந்தைக்கு எடுத்துக் காட்டுகின்றார். தந்தை, குருவினிடம் மகனை இட்டுச் செல்கின்றார். குரு, மாணவனை இறைத் தன்மைக்குக் கூட்டிச் செல்கின்றார். இந்த நான்கு சொற்களின் உட்பொருளை ஒவ்வொருவரும் இவ்வாறு உணர்தல் வேண்டும்.

(த. ச. சா. ஜூன் 87, ப. 1)

### தனது புத்தி சாதுர்யத்தினால் பகவானை அடைய இயலாது:

தனது புத்தி சாதுர்யத்தினாலோ, ஆற்றல்களினாலோ, சாமர்த்தியத்தினாலோ பகவானை உணர்ந்து கொள்ள இயலாது. நம்பிக்கை என்பது ஒன்றே. இதில் குருட்டுநம்பிக்கை, விழிப்பு நம்பிக்கை என்று இரண்டு வகை கிடையாது. நம்பிக்கைக்கு காரணமோ தத்துவமோ இல்லை. நம்பிக்கையும் ஆத்மதத்துவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரண காரியங்களுக்கப்பாற்பட்டவையே. இவைகளுக்குக் காரணம் காணமுயல்வது (அறியாமை) மூர்க்கத்தனமென்றே கூறலாம்.

(த. ச. சா. 1986, மார்ச். ப. 7)

**இக்காலத்திலும் சில மகனீயர்கள் உலக நலனைக் காப்பாற்றுகிறார்கள்:**

இக்காலத்திலும் உலக நலமே இம்மாதிரியான சில மகனீயர்களின் சக்தியினால்தான் காப்பாற்றப்பட்டு வருகிறது. ஆகவே இப்படிப்பட்ட பெரியோர்களின் பொறுப்பு மிகவும் முக்கியமானதாகும். இப்படி வழிகாட்டும் நிலையிலுள்ள பெரியோர்கள் அதற்கான பொறுப்பையும் கடமையாக ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

(த. ச. சா. ஏப். 1987 ப. 13)

**குருவுக்குச் செய்யும் உபகாரம் அவருடைய கருத்தைப் பரப்புவது:**

குருவென்பவர் ஒரு விலையில்லா மாணிக்கம் போன்றவர். உயர்ந்த விலை மதிப்புள்ள ரத்தினங்களைத் தெருவீதியில் எவரும் எடுத்துத் திரியமாட்டார்கள். அவைகளை இரும்புப் பெட்டியில் வைத்து மிகவும் பத்திரமாகவே பாதுகாப்பார்கள். ஆகவே இந்த மதிப்பு மிக்க குரு உபதேசமெனும் நவரத்தினம் போன்றதை உங்கள் இதய பீடத்தில் பாதுகாப்பாக வைத்திருந்து அதில் உள்ள முத்தான கருத்துக்களை எல்லோருக்கும் எடுத்துக் கூறினால் அதுவே நீங்கள் குருவிற்குச் செய்யும் பெரும் உபகாரமாகும்.

(த. ச. சா. ஏப். 1987 ப. 17)

## (5) பிரேமை

**கடவுளின் அன்புக்கு பாத்திரமாக விரும்பினால் பிறரிடம் அன்புகாட்டுவதுதான் ஒருவழி:**

உன்னுடைய மோக்ஷத்தையும் விடுதலையையும் ஆனந்தத்தையுமே நாடுவது சுயநலமேயாகும். 'சுவார்த்தம்' எனும் சுயநலத்தை தியாகம் செய்து ''பரார்த்தம்'' எனும் பிறர் நலனைக் கோரும் மனிதரே உண்மையான மனிதர். பிறரை நேசிப்பவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளால் நேசிக்கப்படுவார். ஆ க வே கடவுளின் அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமாக விரும்பினுல் பிறரிடம் அன்புகாட்டு வதுதான் ஓரேவழி. இது இல்லாவிட்டால் கடவுளின் பிரேமையை நீங்கள் பெறமுடியாது. சென்றதை எல்லாம் மறந்து வருங் காலத்தைப்பற்றிய கற்பனைகளைத் தவிர்த்து, தற்காலத்தில் செய்ய வேண்டிய பணிகளை செவ்வனே செய்யப் பிறரிடம் அன்பு காட்டி அவர்களுக்கு உங்களாலான உதவியைச் செய்து சேவைப் பணியைப் பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்யுங்கள்.

(த. ச. சா, 1985, டிச. ப. 19)

**பிரேமையை பெருக்க வேண்டும்:**

பிரேமை என்பது எங்கேயோ இருப்பதாக எண்ணவேண் டாம். அது ஒவ்வொரு மனிதருக்குள்ளும் உள்ளது. இந்தப் பிரேமை உணர்வை கண்டு கொண்டு அதை பெருக்கிக் கொள்ள முயல வேண்டும். இந்த ''பிரேமை'' யை தன்னிடமிருந்து தனது வீட்டிலுள்ளோருக்கும், வீட்டிலிருந்து கிராமத்திலும் பரப்ப வேண்டும். கிராமத்திலிருந்து நகரத்திற்கும், மாநிலத்திற் கும்,தேசத்திற்கும் மற்றும் அகில உலகிற்கும் இதைப் பரப்பவேண் டும். ''பிரேமை'' யே லக்ஷியமாகக் கொள்ள வேண்டும். 'விசுவ பிரேமை' அதாவது உலகெங்கும் வியாபித்துள்ள அன்பின் பெருக்கை உணர வேண்டும். அப்போதுதான் தனி ஒருவரின் பிரேமையை புரிந்து கொள்ள இயலும். அதையே தெய்வமாகப் பாவிக்க வேண்டும்.

(த. ச. சா. 1986, ஜன. ப. 7)

**பிரேமை உள்ளவர்களுக்கு ஒரு தீங்கும் வராது:**

பிரேமை நிறைந்த உள்ளமுள்ளவரிடம் எப்படிப்பட்ட விரோதியாயினும் எந்தத்தீங்கும் செய்ய முடியாது. ஆகையால், இப்படிப்பட்ட சமத்துவ ஒருமைப்பாட்டு உணர்வைப் பெற முயலவேண்டும். தெய்வத்துவத்தை போஷிக்க வேண்டும். இதுவே மனிதனின் முக்கிய இலட்சியமாகும். கிறிஸ்துவர், முஸ் லீம், இந்து, புத்தமதத்தினர், ஜொராஷ்டிரியர் போன்ற எந்த விதமான பேதங்களும் பாராட்டக் கூடாது. எல்லா மதங்களும் சத்தியம், தர்மம் இவையே முக்கியமெனப் போதிக்கின்றன.

(த. ச. சா. பிப்பி. 1987 ப. 20)

**பிரேமையே வேண்டியது:**

பிரேமைக்காகவே பிரேமையை வளர்க்க வேண்டும். அதுவே தெய்வத்துவம்; அதுவே ஆனந்தம். இது நம்முள்ளேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. வேறு எங்கும் தேடவேண்டியதில்லை. தேடுவது மதியீனம். உங்கள் பார்வையை வெளி உலகத்திலிருந்து உட்புறமாகத் திருப்புங்கள். ஒவ்வாரு செயலையும் பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்யுங்கள். இதுவே பெரிய கல்வி. இந்த ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும். உங்களுக்குள்ளேயிருக்கும் ஆத்மானந்தத்தை உணரவேண்டும். பிரேமையை வளர்ப்பதே வாழும் வழியாகக் கொள்ள வேண்டும். இதை விட்டுப் பூஜை முதலியவைகளைச் செய்து வருவதிலும் யாத்திரைப் பயணங்கள் செய்வதிலும் எந்தப் பயனுமில்லை. இந்தப் பிரேம பக்தியே நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த வழி.

(த. ச. சா. நவம். 1986 ப. 20)

## பிரேமை வளரும் விதம்:

எல்லா மதங்களின் சாரமும் குறிக்கோளும் ''பிரேமை'' ஒன்றே. இந்தப் பிரேம தத்துவத்தையே வளர்க்க வேண்டும். பிறரிடம் குற்றங்களை காண்பதைத் தவிர்த்துத் தன்னிடம் உள்ள ஏதாவது ஒரு குற்றத்தையாவது உணர்ந்து திருத்திக்கொள்ள வேண்டும். இந்தப் படைப்பே திவ்யத்துவ சக்தியான சைதன்யத்துடன் இணைந்து தெய்வம் ஆகிறது. Matter + Invisible Power = God. படைக்கப்பட்ட பொருளுடன் காண்பதற்கியலாத நிலவும் சக்தியை சேர்த்தால் அதுவே தெய்வம் எனலாம். தெய்வம் அன்பு வடிவமே, இந்தப் பிரபஞ்சமும் அன்பு வடிவமே. நமது பார்வை கூட அன்புடன் கூடியதே. ஏதோ ஒரு வேறுபாட்டுணர்வினல் அது மாறுதலாக தோன்றுகிறது. ஆனல் அடிப்படையில் யாவரும் அன்பு மயமானவர்களே. நாம் அணியும் கண்ணுடியின் நிறத்தின்படி யாவும் நிறம்மாறித் தோன்றுவது போல், கோபம் கொண்டபோது அன்புநிலை மாறுகின்றது. இயல்பு எப்போதும் அன்பே. பிரேமை திருஷ்டியை வளர்க்க வேண்டும். நாம் உள்ளத்தை பிரேமை நிறைந்ததாகச் செய்து விட்டால், நமது பார்வையும் (திருஷ்டியும்) பிரேமை நிறைந்ததாக எல்லாமே பிரேமை மயமாகக் காணப்படும். ஆகவே உள்ளத்தில் பிரேமையை வளர்ப்பதே முக்கியமாகும்.

(த. ச. சா. 1988, ஓகஸ்ட். ப. 7, 8)

## உங்களிடம் பிரேமையை வளர்க்கவே வந்துள்ளேன்:

உங்கள் உள்ளங்களில் ஒளி விளக்கை ஏற்றி வைப்பதற்கெனவே நான் வந்துள்ளேன். எந்த ஒரு பிரிவினருக்காகவோ, மதத்தினருக்காகவோ, மற்றும் குறிப்பிட்ட போதனைக்கு விளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர விளக்கம் அளிக்கவோ வரவில்லை. எனக்கு சீடர்களையோ பக்தர்களையோ தேடிக்கொள்ளவும் எந்தத்திட்டமும் எனக்கில்லை. உங்களுக்கு பொதுவான பிரேமை வழியே யாவருக்கும் பொருந்தும். பிரேமை தத்துவத்தையும், பிரேமையை கடைப்பிடிக்க வேண்டியது ஒவ்வொரு மனிதரின் கடமை எனவும் விளக்கி அதன்படி வாழ்ந்து காட்டுவதே என் நோக்கம். எல்லா இதயங்களும் ஒரே இறைவனால்தான் இயங்குகின்றன. எல்லா மதங்களும் அந்த ஒரே இறைவனையே புகழ்ந்து போற்றுகின்றன. எல்லா மொழிகளிலும் எல்லா உருவங்களிலும் பெயர்களிலும் பலரும் வழிபடுவது அந்த ஒரே இறைவனைத்தான். அவரை வழிபடுவது பிரேமையின் பிணைப்பினாலே சாத்தியமாகும். எத்தேசத்தினரும் எம்மதத்தினரும், எக்குலத்தினரும், எவ்வினத்தினரும் சகோதர உணர்வுடன் பிரேமையை வளர்த்துக் கொள்ளுங்கள். இதுவே எனது அன்புச் செய்தி.

*(த. ச. சா. 1988, ஒகஸ்ட். பின் அட்டை)*

# (6) பக்தி

**ஆறுவகையான பக்தி:**

மனிதப்பிறவிக்குக் காரணமாயிருப்பது அவரவர் செய்த கர்மமே என்பது தெளிவாகிறது. நற்செயலில் ஈடுபட்டால் நற்பிறவி கிட்டும். தீய செயல்களில் ஈடுபட்டால் அதற்கேற்ற பிறவியே கிட்டும். பிறவியின் தன்மையே ஒருவரின் விருப்பு வெறுப்புகளைத் தீர்மானிக்கிறது. நற்குடிப்பிறந்தோர் இறைவனிடம் ஈடுபாடு கொண்டு தெய்வீக வாழ்க்கையே வாழ முற்படுவர். தெய்வத்தை உணர்வதற்காகவே ஏக்கம் கொண்டு, தெய்வத்தையே வழிபட்டு, தெய்வ சிந்தனையிலேயே காலம் கழிப்பர். அப்படிப்பட்டவர் ஆறுவகை பக்தியில் ஏதாவது ஒருவகை பக்தியை தீவிரமாக தமது வாழ்நாளில் பின்பற்றி வருவர். சாந்தம் (அமைதி), சத்யம், (நட்பு) தாஸ்யம் (தாசனெனும் உணர்வு), வாத்சல்யம் (தாயன்பு), அனுராகம் (காதல் போன்ற உணர்வு), மதுரம் (தன்னை மறந்து பரவசம் அடையும் நிலை), பீஷ்மர், அர்ஜுனன், ஹனுமான், யசோதா, கோபிகைகள், ராதை முதலியவர்களை மேற்கூறிய ஆறுவகை பக்திகளுக்கும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

*(த ச. சா. 1988 ஏப். ப. 9)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துவைத பாவனையை விட்ட பிறகே பக்தி வளரும்:**

'பக்தி' என்றால் பயங்கலந்த மரியாதையுடன், வணங்குதல் என்று தான் கருதி வந்துள்ளனர். ஆனால் அது உண்மையான பக்தியாகாது, பகவானின் பிரதிபிம்பமே மனிதன் எனும் உண்மையை உணர்ந்து வழிபடுவதே பக்தியின் அடிப்படையாகும். பரமாத்மாவின் அம்சமே ஜீவாத்மா என்று உணருதல் வேண்டும். பகவான் வேறு பக்தன் வேறு என்ற கருத்திற்கு இடமே இருக்கலாகாது. இப்படிப்பட்ட கருத்து மனதில் இருந்தால் அவர் உண்மையான தெய்வ பக்தராக முடியாது. அதனால் தான், பஜனை, தியானம், யோகம், தவம் முதலிய பயிற்சிகளை மேற்கொண்டு படிப்படியாக இரட்டை பாவத்திலிருந்து விடுபட்டு, பிறகே உண்மையான 'பக்தி' வழியை நாட முடியும்; பேதமுள்ளவன் பக்தனாகமுடியாது.

(த. ச. சா. 1986 செப். ப. 1)

**பக்தி என்பது பஜனையும் வழிபாடுகளும் செய்வது மட்டுமல்ல:**

பக்தி என்ற பதம் ''பஜ்'' (பூஜித்தல்) என்ற மூலத்திலிருந்து வந்துள்ளது. அன்புடன் எப்போதும் தெய்வ சிந்தனையில் ஈடுபட்டு, அவருடைய நாமத்தை உச்சரித்து, அவரை வழிபாடு செய்து, அவருக்காக தவம் செய்தலே ''பக்தி'' என்ற நியமத்தின் சிறப்பாகும். மனிதனுக்குச் சேவை செய்தலே அவரிடம் கொண்டுள்ள பக்திக்கு எடுத்துக்காட்டாக விளங்கும். தெய்வீகத் தொண்டிற்கு ஈடுஇணையானது வேறில்லை. இதனால் அடைய முடியாததும் எதுவுமில்லை. ''பக்தி'' என்பது பஜனையும் வழிபாடுகளும் செய்வது மட்டுமல்ல. தற்காலத்தில் இந்த வழிபாடுகளும் கூட ஒருவிதமான சுயநல நோக்கத்திலேயே செய்யப்படுகின்றன. உண்மையான பக்தி என்பது எந்தவிதமான சுயநலத் தன்மையும் இல்லாததே. வெளிப்பார்வைக்கு எல்லோருமே பணிவுடனும், பயபக்தியுடனும் பூஜை செய்பவர்களாகவே தோன்றுவர். ஆனால் உள்ளே அவர்களுடைய இதயத்தில் தூய்மை இல்லை.

(த. ச. சா. 1988, ஏப். ப. 2)

**'உலகம் விஷ்ணு சொரூபம்' என்று வாழ்பவரே பக்தர்:**

சகஸ்ரசீர்ஷோ புருஷ சகஸ்ராக்ஷ சகஸ்ரபாத் உலகில் மரங்கள், கொடிகள், ஜீவராசிகள் எல்லாமே பகவானின் உருவங்களே. ''விஸ்வம் விஷ்ணுஸ்வரூபம்'' உலகமே விஷ்ணுவின் வடிவமே எனும் உண்மையை அறிந்து வாழ்ந்து வருபவரே பக்தர். அப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பட்ட பக்தர் எப்போதும் எல்லாமே ஈசனின் உருவமெனும் திடநம்பிக்கையுடனே 'சோஹம்' என்று ஸ்மரித்துக் கொண்டே இருப்பர். இப்புனிதமான இறைபக்தியினால் உள்ளத் தூய்மை பெற்று அவர் எப்போதும் இறை உணர்வுடனேயே வாழ்ந்து வருவார். இப்படி தன்னையே மறந்து எப்போதும் இறைவனைப் பற்றியே சிந்தனை செய்து வரும் பக்தர் மோக்ஷத்தைப் பற்றிக் கூட நினைக்கமாட்டார்.

(த. ச. சா. 1986, ஜன. ப. 2)

## (7) தியானம்

**அனைவருடைய இறைத்தன்மையை நேசிப்பதே உண்மையான தியானம்:**

தியானம் என்றால் பத்மாசனம் போட்டுக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டு கைகளை நீட்டிக்கொண்டு உட்கார்ந்து கொள்வதா? இல்லை. இல்லை. தியானத்திற்கு ஒரு நெறி என்பதேயில்லை. மனதை இறைவன் மீது நிலைபெறச் செய்வதே உண்மையான தியானம். வாழ்க்கை முழுவதும் தியானத்தோடு கூடியதே! எங்கெங்கோ பறந்து செல்லும் மனதை பரமாத்மாவின் பக்கம் திருப்புவதே உண்மையான தியானம். அனைவரிடத்துள்ள இறைத் தன்மையை நேசிப்பதே உண்மையான தியானம்.

(த. ச. சா. 1988 மே ப. 9, 10)

**ஏகாந்தத் தியானத்திலும் ஆசைகளை விடுவதுமேல்:**

தியானம் என்பது ஒரு விஷயத்தை மட்டும் சார்ந்தது ஆகாது. இது எல்லாவற்றிலும் சம்பந்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயலிலும் இதைக் கடைப்பிடிக்கலாம். இன்னும் சிலர் 'ஏகாந்த'த்தில் அமர்ந்து தியானம் செய்தல் சிறப்பானதென்பர். 'ஏகாந்தம்' என்றால் என்ன? தனியறையில் தனியாக இருப்பது தான் ஏகாந்தமா என்றால் அது இல்லை என்றே கூறலாம். இதன் உண்மையான பொருளை அறியாதவர்கள் சிலர் எங்கோ கானகத்திற்கோ, ரிஷிகேசம் போன்ற தபோவனங்களுக்கோ சென்று தனிமையில் காலம் கழிக்க வேண்டுமென விரும்புகின்றனர். 'ஏகாந்தம்' என்பது மனதை அமைதிப்படுத்துதலேயாகும். கானகத்தில் இருந்தாலும் தனி இடத்தில் அமர்ந்திருந்தாலும் மனது பிரபஞ்சமெங்கும் சஞ்சாரம் செய்தால் அது எப்படி ஏகாந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும்? எண்ண அலைகளை அடக்குவதே ஏகாந்தம். (ஆசைகளை) விருப்பங்களைத் தவிர்த்தலே சமாதிநிலை என்று கூறப்பட்டுள்ளது.
(த. ச. சா. ஏப். 1987 ப. 6)

**பஜனை, தியானம், பூஜை இவையால் மோக்ஷம் பெற இயலாது. சேவையாலே முடியும்:**

பஜனை, தியானம், பூஜை இவைகளினால் மோக்ஷம் பெற முடியாது. இவைகள் மனதைக் கட்டுப்படுத்தும் வழிவகைகளே யாகும். அவைகள் எண்ணங்களைத் தூய்மையாக்க உதவுகின்றன. அதன் பிறகு கடவுளை நாடும் மோக்ஷ சாதனையில் ஈடுபட வேண்டும். இவைகள் யாவும் பேரானந்த நிலையடைய வகுக்கப்படும் பாதையே. பாதையை செப்பனிட்டபின் பயணத்தைத் தொடங்க வேண்டும். இந்தப் பயணமே சமுதாய சேவை. இந்தச் சேவை செய்யும் போதே ஒவ்வொரு உயிர்வாழும் ஜந்துவிலும் ஒரே தெய்வம் உள்ளது என்றும், இவையாவும் ஒரே தெய்வத்தின் பல்வேறு உருவங்கள் என்றும் உணர்ந்து செயல்படவேண்டும்,
(த. ச. சா. 1985 டிச. ப. 17, 18)

## (8) கர்மம்

**நற்குணம் படைத்தவர் என்றால் அவர் செயலினால்தான்:**

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், காலம், ஆத்மா, மனஸ் இவை யாவும் தெய்வ ஸ்வரூபமே. மேலும் இவைகள் தத்துவரீதியாக நிரூபணம் செய்யப்படத் தக்கவை. நல்லது, கெட்டது என்பதைச் செயல் வடிவிலேயே நாம் நிரூபிக்க இயலும். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அப்படியே தர்மத்திற்கும் மோக்ஷத்திற்கும் கூட செயல் வடிவில் "பலிதம்" உண்டு. ஒருவரை "நற்குணம் படைத்தவர்" என்று நாம் குறிப்பிட்டால், அவர் புரிந்த செயல்களின் மூலமே இப்படிக் குறிப்பிடப்படும் தகுதியை அவர் பெறுகிறார் என்பது மறுக்க முடியாத உண்மையல்லவா? ஒருவர் "சாத்வீக உள்ளம்" கொண்டவர் என்று நாம் குறிப்பிடும் போது, அவர் செய்த செயல்கள் மூலம்தான் இதை நாம் குறிப்பிட முடிகிறது. ஒருவரின் தன்மைகளை நாம் புரிந்து கொள்வது அவரது செயல்களினால்தான் சாத்தியமாகிறது என்பதில் ஐயமில்லை. நற்பணிகள் செய்பவரை நல்ல குணமுடையவர் என்றும், தீச்செயல்கள் செய்பவரை தீய குணமுடையவரென்றும் குறிப்பிடுகிறோம். ஆகவே ஒருவர் நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரா, கெட்டவரா என்பது அவரது செய்கையினாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

(த, ச. சா. 1988, பெப். ப. 2)

**ஒவ்வொரு கர்மமும் தாழ்ந்த ஆசைகளின் அழுக்கினை விலக்கி மனத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும்:**

கர்மம் என்பது ஊக்கமுடைமை, செய்கை, செயல் ஆகும். வேதம் மத சம்பந்தமான, பிரார்த்தனை சம்பந்தமான, சமூக சம்பந்தமான சடங்குகளை வலியுறுத்துகிறது. இவற்றின் நோக்கம், சுயலாபம், சுயநலம் கருதியல்ல. சுயநலம் கருதிய செயல்கள் பறவைகளுக்கும், மிருகங்களுக்குமே உகந்தவை. தேர்ந்தெடுக்கவும், கடந்த காலத்தில் நடந்தவைகளிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு எதிர்காலத்திற்குத் தயார் செய்து கொள்ளவும், மனிதனுக்கு அறிவு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிவின் துணைக்கொண்டு அவன் செய்யும் ஒவ்வொரு கர்மமும் தாழ்ந்த ஆசைகளின் அழுக்கினை விலக்கி மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

(த. ச. சா. 1987, மே. ப. 1)

**தனக்குமட்டும் முக்தி கோருவது தர்மமல்ல:**

முக்தி கோருவதுகூட ஒருவகை சுயநலமே. தனக்கு மட்டும் முக்திகோருவது தர்மமல்ல, பிறரின் முக்தியைக் கோருவதே மனிதரின் கடமை. எல்லோரும் நற்கதி பெற வேண்டுமெனும் குறிக்கோளுடன் சாதனை செய்வதே உண்மையான தியாகமாகும் இவ்வகையான தியாகத்தினால்தான் அமரத்துவம் அடைய முடியும்.

(த. ச. சா. 1987, ஏப். ப. 18)

**உங்கள் செயல்களைக் கடவுள் பார்த்துக்கொண்டிருக்கிறார்**

முக்கியமாக உணர வேண்டியது என்னவெனில், ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு என்றும் காரணமின்றி எந்த விளைவுகளும் ஏற்படுவதில்லை என்பதுமே. காரணம் புரிந்த பின் அப்படிப்பட்ட காரியங்களை தவிர்க்கவும். நற்பாதிப்புகள் விளைவிக்கும் காரியங்களையே செய்யவும். முனைந்தால் நற்பயன் கிட்டும். உங்களது செயல்களை எவரும் பார்க்கவில்லை என்று எண்ணாதீர்கள். கடவுள் எப்போதும் எல்லாச் செயல்களையும் கட்டாயமாகப் பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்பதை மற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதீர்கள். எந்த நெருக்கடியான கட்டத்திலும் எந்த நேரத்திலும் நல்ல வழியிலேயே செயலாற்ற வேண்டும். நற் செய்கைகளே செய்ய வேண்டும்.

(த. ச. சா. 1988, மே. ப. 4)

## ஜென்மம், கன்மம், தர்மம், பிரம்மம்:

மனிதவாழ்க்கை எனும் மாளிகை ஜன்மம், கர்மம், தர்மம், பிரம்மம் எனும் நான்கு சுவர்களின் மீதே எழுப்பப்பட்டதாகும். [அதாவது பிறப்பு, செய்யும் செயல்கள், கடமைகள், பிரம்மம் என்பவை] இவை நான்கும் ஒன்றுக்கொன்று இணைந்து நெருங்கிய தொடர்பு கொண்டவையே. பிறவி எதற்காக? செயல்கள் ஆற்றிடவே. செயல்கள் எப்படி ஆற்றப்பட வேண்டும்? அறநெறிப்படியே (தர்மத்தை சார்ந்து) செயல் புரிதல் வேண்டும். இப்படி அறநெறிப்படி செய்யப்படும் செயல்களால் தான் பிரம்மத்தை அதாவது தெய்வத்தை உணர முடியும்.

(த. ச. சா. 1988. மே. ப. 1)

## நாம் செயலாற்றலில் கவனமாயிருக்க வேண்டும்:

ஒருவரின் பழக்கவழக்கங்களும் கூட செயலாற்றுதலின் விளைவே. ஒருவரின் பழக்க வழக்கங்களில் இருந்து தான் அவருடைய நடத்தை கணிக்கப்படுகிறது. ஒருவரின் நடத்தையே வருங்காலத்தில் அவரது நிலையை தீர்மானிக்கிறது. ஆகவே நாம் செயலாற்றுவதில் மிகவும் கவனமாக இருத்தல் அத்தியாவசியமானது.

(த. ச. சா. 1988. மே. ப. 1)

## எந்த இன்னலையும் பூர்வ கர்மத்தின் விளைவே என்று எண்ண வேண்டும்:

எந்த உருவத்தில் எப்பொழுது கர்மத்தின் விளைவுகள் ஒரு மனிதனை பாதிக்கும் என்று சொல்ல இயலாது. தனது கொம்புகளின் வலிமையாலும், பெரிய உருவத்தாலும், அகங்காரம் கொண்ட ஒரு பசு கண நேரத்தில் மூக்கணாங் கயிற்றினால் கட்டப்பட்டு, கட்டுப்படுத்தப்படுகிறது. இது அதன் கர்மத்தின் விளைவே என்பதில் ஐயமில்லை. ஆகவே, எந்த இன்னல் வந்திடினும் அதை பூர்வ கர்மத்தின் விளைவாகவே கருதிச் சகித்துக் கொள்ள வேண்டும். ஆனால் இதன் பாதிப்புகள் ஆண்டவன் அருளினால் வெகுவாகக் குறைய வழியுண்டு.

(த. ச. சா. 1988. மே. ப. 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (9) தர்மம்

**கேள்வி:** பகவத்கீதையில் "கொல்பவனும் கொல்லப்படுபவனும் எவரும் இல்லை" என்று கூறப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் அர்ஜுனனை எதிரிகளைப் போரில் கொல்லும்படி ஏவுகிறார் கிருஷ்ணன். இதை மேற்கோளாகக் கொண்டு எவரும், தனக்கு எதிரியாகக் கருதுபவரை கொன்று விடலாமா? இது நியாயமாகுமா?

**பகவான் பதில்:** பகவத்கீதை எல்லோரும் தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறுகிறது. அர்ஜுனன் ராஜவம்சத்தில் உதித்தவனாதலால் தவறு செய்பவர்களைத் தண்டிக்கும் கடமை அவனுக்கு இருந்தது. அப்படித் தண்டித்தலால் தர்மத்தை நிலை நாட்டவேண்டியது அரசனின் தலையாய கடமை. ஆனால் ஆத்மீக தத்துவ போதனையினால் ஆன்மாவின் அழிவற்ற தன்மையையும் சரீரத்தின் நிலையற்ற தன்மையையும் விவேகத்துடன் உணர்ந்து தன்னுடைய கடமையை மேலும் சிறப்பாகவும் பற்றற்ற தன்மையுடனும் அவனால் செய்ய முடிந்தது. ஆன்மீக அறிவு முதிர்ச்சி பெற்றவன் தவறான வழியில் சென்று தர்மத்திற்கு விரோதமான காரியங்களை ஒருபோதும் செய்யமாட்டான். அறநெறிப்படி நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் எப்போதும் தவறாமல் கடைப்பிடிப்பான்.

(த. ச. சா. 88 செப். ப. 16)

## கையினால் செய்பவை மாத்திரம் செயலல்ல:

செயலாற்றுதலின் முக்கியத்துவத்தை உணர்ந்து நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் புனிதமாகவும் தூய்மையாகவும் இருக்கச் செய்யுங்கள். உங்கள் கைகளினால் செய்பவை மட்டுமே செயல்கள் என்று எண்ணாதீர்கள். காதினால் கேட்பதும், கண்ணினால் காண்பதும், நாவினால் பேசுவதும், மனதினால் எண்ணுவதும் யாவும் தூய்மையாக இருத்தல் வேண்டும். உண்ணும் உணவு மட்டுமின்றி உங்கள் ஐம்புலன்களாலும் நுகர்பவை யாவும் புனிதமாக இருத்தல் வேண்டும். அப்போது தான் சாத்வீகமான நிலை இருக்கும். பக்தி என்பது பஜனை செய்வதிலும் சுவாமியை தரிசிப்பதிலும் மட்டும் அடங்கியதல்ல. உங்கள் ஒவ்வொரு எண்ணமும் செயலும் பக்தி நிறைந்திருக்க வேண்டும். எல்லாச் செயல்களையும் தர்மத்தின் அடிப்படையில் தர்மத்தில் ஊறியவைகளாக, செய்திடல் வேண்டும். தெய்வார்ப்பணமாக செய்வதே தர்மச் செயல். (த. ச. சா. 1988 மே. ப. 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (10) எண்ணங்கள்

**தீய எண்ணத்தைப்போக்க நல்லெண்ணத்தை வளர்ப்பதைவிட வேறு வழிகிடையாது:**

மகாபாரதத்தில், கௌரவர்கள் பாண்டவர்களின் மீது தீய எண்ணங்களை வளர்த்துக்கொண்டேவந்தனர். இவைகள் ஓரளவிற்கே பாண்டவர்களைத் துன்புறுத்தின. ஆனுல் கௌரவர்களை அடியோடு அழித்துவிட்டன. ஆகவே, தீய எண்ணங்கள் யார் மீது ஒருவர் கொண்டாலும் அதனுல் அவர் சிறிதளவே பாதிக்கப்படலாம். ஆனுல் இந்த எண்ணத்தைக் கொண்டவர் அடியோடு நாசமடையநேரும். நல்ல எண்ணங்களை வளர்த்தால் அது அவர்களுக்கும் நன்மை பயப்பதோடு எல்லோருக்குமே நல்லதாக சமுதாயத்துக்கே நலனுக உருவாகும். ஆகவே மனதில் ஒரு எண்ணம் தோன்ற ஆரம்பித்ததும் அது நல்ல எண்ணமா, அல்லவா, என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இது நன்மையே அளிக்கக் கூடியதா பிறருக்கு நன்மை பயக்கக்கூடியதா என்று பகுத்தறிதல் வேண்டும். அது தீயதாயின் அதை உடனே நெஞ்சிலிருந்து அகற்றிவிட வேண்டும்; தீய எண்ணங்களைப் போக்க நல்லெண்ணங்களை வளர்ப்பதைத் தவிர வேறு எந்த வழியும் கிடையாது.

*(த. ச. சா. 1986 செப். ப. 12)*

**தீய எண்ணங்கள் தலை காட்டும்போது அவற்றை முளையிலே கிள்ளி எறியவேண்டும்:**

நமது தீய எண்ணங்களை வெளியிட நமக்கே வெட்கமாயிருக்கும். அவைகள் வெளிப்பட்டால் பிறர் முன்னிலையில் நாம் அவமான உணர்வடைவோம், அவைகளை மறைக்க முயல்வது அபாயகரமானது. ஆகவே கெட்ட எண்ணம் தலைகாட்டும் போது, அதை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். தீய எண்ணங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. வாழ்நாள் பூராவும் நம்மைப் பாதிக்கக் கூடியவை. இன்று நாம் நாடெங்கும் காணும் கலவரங்களுக்கும் நாச வேலைகளுக்கும் அமைதியின்மைக்கும் காரணம் இந்தத் தீய எண்ணங்களே!

*(த. ச. சா. 1986 செப். ப. 13, 14)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்களின் கசப்பான அனுபவம் நீங்கள் விதைத்த விதைகளினுல் கிட்டியவையே:**

எண்ணங்கள் ஆகாயத்தைவிட விசாலமானவை. எல்லாச் சக்திகளேயும் விட அதிகமான சக்தி கொண்டது. மின்சக்தியை விடவும் மிக நுணுக்கமானது. அவைகளை நாம் நன்ருகக் காண முடியாவிட்டாலும் அதன் பலன்களை அனுபவிப்பதிலிருந்து தப்ப முடியாது. நல்லெண்ணங்களை வளர்ப்பதுதான் இன்று மிகவும் உயர்ந்த கல்விப் போதனையாகும். நமது எண்ணங்களுக் கேற் பவே நாம் பலன்களை அனுபவிக்கிருேம் என்ற உண்மையை உணர வேண்டும். நாம் நச்சு விதைகளை விதைத்துவிட்டு அதி லிருந்து இனியகனிகளைப் பெற வேண்டுமென எதிர்பார்க்கிருேம். இப்படிப்பட்ட நச்சை விதைத்து அதனுல் எதிர்பார்த்த நற்பலன் கள் கிட்டவில்லையே என்று பிறரை நிந்திக்கமுற்படுவதுடன் கடவுளேயும் குறைகூறத் தயங்குவதில்லை. உங்களுக்குக் கிடைக் கும் கசப்பான அனுபவங்களெனும் கனிகள் நீங்கள் விதைத்த விதைகளினுல் கிட்டியவையே என்பதை மறந்து அந்தக் கசப்பான அனுபவத்தைக் கொடுத்ததற்காகக் கடவுளேயும் நிந்திக்க முற்படு வது எவ்வளவு மதியீனம்! நல்ல விதைகளை விதைத்தால் நல்ல பலன்களைப் பெறலாம். (தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற முதுமொழியை நினைவுகொள்ளலாம்).

(த. ச. சா. 1986 செப். ப. 15, 16)

**அனுவசியமான எண்ணங்களை நீக்கிவிட்டால் நல்லெண் ணம் தோன்ற வாய்ப்பிருக்கும்:**

மனித வாழ்க்கை சிறப்பானது. புனிதத்தன்மை வாய்ந்தது. இதை இந்த வாழ்க்கையில் இனி எப்போது உணர முடியும். மனதில் தோன்றும் எண்ணங்கள் புனிதமானவையாக இருத்தல் வேண்டும். உள்ளத்தில் பற்பல கோரிக்கைகளைக் குறித்த பேராசை எண்ணங்கள் நிறைந்திருந்தால் எப்படிக் கடவுளை வழிபட முடியும்? எப்படி நற்பயனை எதிர்பார்க்க முடியும். ஒன்று மில்லாத பாத்திரத்தில் ஏதாவது நிரப்ப முடியும். ஏற்கனவே நிரம்பியிருந்தால் அதில் வேறு என்ன வைக்க முடியும்? உள்ளத் தில் ஆசைகள் நிறைந்திருந்தால் அதில் இறைவனை நினைக்க இடமேது? ஆகவே முதலில் அனுவசியமான எண்ணங்களை மனத் திலிருந்து அகற்றிவிட வேண்டும். அப்போதுதான் அதில் நல்லெண் ணங்கள் தோன்ற வாய்ப்பிருக்கும்.

(த. ச. சா. 88 செப். ப. 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (11) மனம்

**மனதின் இயக்கமே எல்லாம்:**

கண், காது, நாக்கு இவைகளின் செயலாற்றல் மனிதனுல் தான் சாத்தியமாகிறது. மனதே இவைகளுக்கு ஆதார சக்தி. விழிப்பு நிலையில், கண் பார்க்கிறது. காது கேட்கிறது. நா பேசுகிறது. கனவு நிலையில், கண், காது, நாக்கு இயங்குவதில்லை. அப்போது மனதே இவைகளின் செயல்களைச் செய்கிறது, கனவில் காண்பதும், கேட்பதும், பேசுவதும் மனதின் இயக்கத்தினுலேயே நிகழ்கின்றது. ஆகவே எல்லாப்புலன் உறுப்புகளின் பணியையும் உள்ளிருந்து இயக்குவிப்பது மனதே என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

(த. ச. சா. 1988. ஏப். ப, 5)

**மனது மாயத் தோற்றம்:**

ஒவ்வொருவரும் மனதை ஒரு மாயத் தோற்றம் எனவே கருதவேண்டும். இது வெகு விரைவில் மாறிவிடும் தன்மை கொண்டது. காலத்துக்கேற்ப சூழ்நிலைக்கேற்ப பலவித மாற்றங்களைக் கொள்ளவல்லது. இது புலன்களை இச்சைப்படி செயல் படச் செய்யும் வல்லமை பெற்றது. இலாப நஷ்டங்களையும், சுகதுக்கங்களையும் இன்பத்துன்பங்களையும் நிந்தனைகளையும் போற்றுதல்களையும் அனுபவிப்பது மனதேயன்றி ஆத்மாவல்ல. இவையெல்லாம் மனதின் கற்பனையே. இந்த மனதின் தத்துவத்தை நன்கு புரிந்து கொண்டு விட்டால் 'ஆத்மா' வை உணர்வது எளிதாகும். எல்லாப் பொருட்களும் 'ஆத்மா' வே எனும் 'அத்வைத' உணர்வு பெற வேண்டும்.

(த. ச. சா. 1987. ஏப். ப. 4)

**''மனோ மூலம் இதம் ஜெகத்'':**

மிகச் சிறிய நுட்பமான இந்த மனதில் இவ்வளவு பிரமாண்டமான காட்சிகள், எண்ணற்ற உருவங்கள், அனுபவங்கள் யாவும் பதிந்து விடுவது எப்படிச் சாத்தியமாகிறது? ஒரு பெரிய மலையை மனத்தினுள் அடக்கி வைக்க இடம் உள்ளதா? இல்லையே. எப்படி இவைகள் பதிகின்றன? இதுவே மனோ சக்தி ''மனோ மூலம் இதம் ஜெகத்'' என்றபடி இந்த உலகமே மனதை அடிப்படையாகக் கொண்டது. இந்தப் பிரபஞ்சத்தின் ஒரு துளி பாகமாகவே உள்ள மனித உடலினுள் மிகவும் நுணுக்கமாயுள்ள இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் இந்தப் பிரபஞ்சமே அடங்கி விடுகிறது. பிரபஞ்சத்தின் பிரமாண்டமான அளவில் மனிதன் எவ்வளவு சிறியவன் என்பதை எண்ணிப் பார்த்தால் பணிவுத் தன்மை தானே வந்து விடும்.

(த. ச. சா. 88. செப். ப. 13)

**மனதை கடவுள் பக்கம் திருப்புதல்:**

இதயமே பூட்டு. மனதே சாவி. மனதை தெய்வத்திடம் திருப்பினால் இதயத்தில் பற்றற்ற தன்மை வளரும். வெளி உலகப் பொருட்களின் பக்கம் மனதை திருப்பினால், பற்றுதல் தான் வளரும். ஆகவே, பிரகிருதிப்பக்கம் மனதை திருப்பினால் பந்தத்தில் கட்டுண்டு விடுவீர்கள். பகவானின் பக்கம் திருப்பினால் விடுபடுவீர்கள். அதுவே எல்லையற்ற நித்தியானந்த நிலையை கொடுக்கும். ''மனதை முடித்து விடல்'' என்பது தெய்வத்தின் பக்கம் திருப்புதல் என்றே பொருள் படும். உங்களுடைய ஒவ்வொரு செய்கையும் தெய்வத்திற்கே அர்ப்பணமாக செய்துவிட வேண்டும். அப்போது மிகவும் எளிதாக எல்லாமே இன்பமயமாக ஆகிவிடும்.

(த. ச. சா. 1988. யூன். ப. 13)

**மனதிலிருந்து எப்படிக் கட்டளைகள் எழுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்:**

ஒவ்வொருவரும் முதலில் முக்கியமாக ஆற்ற வேண்டிய கடமை என்னவெனில் இந்த மனது எப்படி உருப்பெறுகிறது. அது எப்படி மற்ற இந்திரியங்களைத் தனது இஷ்டப்படி இயங்க வைக்கிறது என்பதை நன்கு ஆய்ந்து தெரிந்து கொள்ளவேண்டியதே. மனது எப்படி வேலை செய்கிறது, அது எப்படிப்பட்ட கட்டளையிடும் சக்திவாய்ந்தது, எவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்த வல்லது என்பதை நன்றாய்ப் புரிந்து கொண்டால்தான் மனிதன் பயனுள்ள ஆனந்தமயமானதான வாழ்க்கை வாழ்ந்திட முடியும். ஒரு மனிதன் தனது மனதிலிருந்து எப்படிக் கட்டளைகள் எழுகின்றன என்பதைத் தெரிந்து கொண்டால் தான் தனக்குள்ளே இருக்கும் அளவிலாச் சக்தியை நல்ல முறையில் அவன் பயன் படுத்த முடியும்.

(த. ச. சா. 1986. செப். ப. 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காற்றைக் கையால் பிடிக்க முயலுவது போன்றதே மனதை அடக்குவது:**

காற்றைக் கையால் பிடித்து அடக்கி வைக்க முயற்சி செய்வதைப் போன்றதே மனதை அடக்க முயல்வதும். எல்லையற்ற தூரங்களையும் எட்டிப் பிடித்து இயங்கும் மனதை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? எண்ணங்களின் குவியலே மனம் என்று தெரிந்த பின், எண்ணங்களை ஒழிப்பது தான் அதைக் கட்டுப் படுத்தும் வழி என்பது தெளிவாகிறது. எண்ணங்கள் எழுவது ஆசைகளினாலேயே. ஆகவே, ஆசைகள் அலைமோதிக் கொண்டிருக்கும் வரை ''வைராக்கியம்'' கிட்டாது.

(த. ச. சா. 88. செ. ப. 13)

## (12) ஞானம்

**தானே அந்த ஞானம்:**

ஜீவனுக்கு அஞ்ஞானம் அகலாமல் 'தானே இறைவன்' என்கிற பாவனை ஏற்படாது. இறைவனின் சொரூபம் ஞானம். அது சுயம் ஜோதி பிரகாசம். அந்தப் பிரகாசமே 'தான்' என்றும் அந்த ஞானமே 'தான்' என்றும் எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருந்தால் தான் அத்வைதம் கைகூடும். பொருளைத் தென்படச் செய்வது வெளிச்சம். பகலில் சூரிய பிரகாசத்தினாலும், இரவில் சந்திர ஒளியாலும், நட்சத்திரங்களின் பிரகாசத்தாலும் விளக்கின் வெளிச்சத்தினாலும் பொருள்களைப் பார்க்கின்றோம். இது, சூரிய பிரகாசம் என்றும், இது சந்திரனின் ஒளி என்றும், இது விளக்கின் வெளிச்சம் என்றும் நாம் கண்களின் வாயிலாக அறிந்து கொள்கிறோம். உறக்க நிலையில் கண்கள் மூடிக்கொண்டுள்ளன. ஆனால் கனவில் எல்லாப் பொருள்களையும் பகலில் பார்த்ததைப் போன்றே பார்க்கிறோம். ஆனால், இவைகளைப் பார்ப்பவர் யார்? அனுபவிப்பவர் யார்? புத்தி தன்னுடைய தேஜோமயமான ஞானத்தினால் பொருட்களைப் பார்க்கின்றது. ஆனால், உறக்க நிலையில் அந்தப் புத்தியும் கூட இல்லையல்லவா! எனினும் ஆனந்தத்தை அனுபவிக்கிறோம். இந்த ஆனந்தத்தை அனுபவிப்பவர் யார்? அதுவே ஆத்மா. ''இந்த ஆத்மாவே நான், நானே ஆத்மா'' என்கிற உண்மையை குறிப்பறிந்து கொள்ள வேண்டும். ஆத்மாவின் வாயிலாக புத்தியையும் புத்தியின் வாயிலாக கண்களையும், கண்களின் வாயிலாக பொருட்களையும் நாம் குறிப்பறிந்து கொள்கிறோம்.

**(த. ச. சா. 1988, மே. ப. 7)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (13) அத்வைதம்

**இன்றுமுதல் "அத்வைதம்" என்ற இலட்சியத்தை கொள்ளவேண்டும்.**

என்னுடைய 60 ஆவது பிறந்த நாளிலிருந்து அத்வைதத்தையே உபதேசிக்க முனைந்து இருக்கிறேன். கர்ம, உபாசனை இரண்டும் 60 ஆண்டுவரை உபதேசித்தாயிற்று. கர்மமே ஆரம்பப்பள்ளிப்படிப்பு போன்றது. ஞானமே கல்லூரிப் படிப்பு. கல்லூரிப் படிப்பில் அடிஎடுத்து வைக்க வேண்டிய நீங்கள் இன்னமும் ஆரம்பப்பள்ளி நிலையிலேயே இருந்தால் என்ன பயன்? எவ்வளவு நாட்கள் A, B, C, D. என்று அக்ஷரங்களைக் கற்பதிலேயே இருப்பது? ஆன்மீகசாதனையில் கர்ம, உபாசனைக் கட்டங்களைத் தாண்டி "அத்வைத ஞானம்" எனும் கட்டத்திற்கு வரவேண்டும். இன்று முதல் நீங்கள் இந்த "அத்வைத மதம்" பற்றி கற்றுக் கொள்வதையே இலட்சியமாகக் கொள்ள வேண்டும்.

(த. ச. சா. 1988, பெப். ப. 17)

**அத்வைதம்:**

சுவாமி பேச்சுக்கள் அத்வைதத்தோடு கூடியவைகளாக இருக்கின்றன. ஏனெனில் துவைதம் எதுவும் இங்கு இல்லை. அதாவது மற்றொன்று எதுவுமில்லை இங்கு. "ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம" உள்ளது ஒன்றே! எவ்வளவு விதமாகக் கூறினாலும் அவ்விடத்திற்கே வந்து சேர்ந்தாக வேண்டும். உலக சம்பந்தமான விஷயங்களில் பரிசீலனை செய்யும் பொழுது அதற்கு ஒரு கர்த்தா, கர்மம், கிரியை என மூன்று இருக்கின்றன. சுவாமிக்கு மட்டும் இங்கு கர்த்தா, கர்மம், கிரியை இம் மூன்றும் ஒன்றே! குழந்தைகளுக்கு சொல்லும் பொழுது மட்டும் கர்த்தா, கர்மம், கிரியை இவைகளனைத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும். அதையும் கூட அர்த்தம் செய்து கொள்ள முடியாத மூர்க்கர்கள் (கீழ்மக்கள்) இருக்கிறார்கள்! சுவாமி எவ்வளவு மார்க்கங்களில் பிரயாணம் செய்த போதிலும் அத்வைத கம்மியத்திற்கு மட்டுமே போய்ச்சேர்கிறார். "என்வாழ்க்கையே என் செய்தி" அதை நீங்கள் அனுசரித்து அத்வைதத்தை (இரண்டன்மையை) அர்த்தம் செய்து கொள்ளுங்கள்! அப்பொழுது உலகம் முழுவதையும் தூய்மைப்படுத்தியவர்கள் ஆகிவிடுகிறீர்கள். அத்வைத தத்துவத்தை அர்த்தம் செய்து கொண்டகணமே விருப்பு வெறுப்புகள் மாயமாய் மறைந்து விடுகின்றன. அகங்காரத்தை அகற்றிக் கொள்ள அத்வைதத்தை அனுசரித்தல் வேண்டும்.

4 (த. ச. சா. 1988, மே. ப. 13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (14) 'I' நான்

**'நான்':**

இந்த ''நான்'' என்பது உண்மையில் யார்? இது என்குடை என்றால் அது வேறு ''நான்'' வேறு என்று புரிகிறதல்லவா? அதேபோல் இது என் ''தேகம்'' என்கிற போதும் தேகம் வேறு, ''நான்'' வேறு என்று தானே பொருள்படும். இந்த சின்ன விஷயத்தைக்கூட சரிவரப்புரிந்து கொள்ளாமல் இருப்பது விந்தையே.

(த. ச. சா. 1988, யூலை. ப. 4)

**'I' நான் என்றதன் உண்மை:**

இந்த ''I'' எங்கிருந்து வருகிறது? இப்போது இங்கே வீற்றிருக்கும் **I. J. Naidu** என்பவர் யார் என்று கேட்டால் ''I'' என்ற பதிலே அவரிடமிருந்து வரும். வைஸ்சான்ஸ்ஸலர் சராஃப் யாரென்றால் அவரும் ''I'' என்பார். ரிஜிஸ்டிரார் சக்கரவர்த்தி யாரென்றால் அவரும் ''I'' என்பார். கண்ட்ரோலர் நஞ்சுண்டையாவும் ''I'' என்பார். இப்படியாக எவரைக் கேட்டாலும் ''I'' என்றே பதில் வரும். இவர்களின் பெயர்களும், உருவங்களும், செய்யும் பணிகளும் வெவ்வேறாக இருப்பினும் என்னுடைய கேள்விக்கு எல்லோரும் கொடுக்கும் பதில் ''I'' என்பதே. இந்த ''I'' என்பது எங்கும் வியாபித்துள்ளது. இது காலதேச வர்த்தமானங்களுக்கப்பாற்பட்டது. ஒருவர் எந்தத் தேசத்திலிருந்தாலும் எந்த இடத்திலிருந்தாலும் ''I'' என்றே தான் கூறுவார். இதில் மாற்றமே இருக்காது. இதுவே ஆத்மதத்துவம், இது வளருவதுமில்லை, குறைவதுமில்லை. இதுவே மனித மேம்பாடு என்பதை உணருங்கள்.

(த. ச. சா. 1988, ஒகஸ்ட். ப. 11)

**முதன்முதல் சிருஷ்டிக்கப்பட்டது இந்த 'நான்':**

'நான்' 'நான்' எனப்படும் இந்த ஆத்ம தத்துவம் எங்கும் நிறைந்துள்ளது. ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து முதல் முதலில் தோன்றிய பெயர் என்னவென்று கண்டுகொள்ள முயன்றால் முதல் முதலில் தோன்றியது 'நான்' (I) என்பதே என்று புலப்படும். இது பிரணவமான 'ஓம்' காரத்திற்கும் முன்பே கூட இருந்ததாகும். முதன் முதலில் சிருஷ்டிக்கப்பட்டது இந்த 'நான்' என்பதே. இந்தப் பதத்தின் உண்மையான பொருளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் உணர்ந்தால் அவரே மெய்யறிவு பெற்றவரெனப்படுவார். இந்த 'நான்' என்பதே எல்லா இடங்களிலும் நீக்கமற இருப்பது. உருவங்களும், பெயர்களும், சித்தாந்தங்களும் வெவ்வேருக இருப்பினும் எல்லோரிடமும் இருந்து 'நான்' என்ற பொதுவான பதில் வருகிறதல்லவா? பெயர்கள், உருவங்கள், வாழும் பிரதேசங்கள், மற்றும் அவர்களின் உணர்வுகள், பணிகள், தன்மைகள், ஆற்றல்கள், சந்தர்ப்பச் சூழ்நிலைகள் யாவும் வேறுபட்டிருக்கலாம். இருப்பினும் இந்த 'நான்' என்பது யாவருக்கும் சமமானதே. மனதில் வீழ்ந்திடும் மாயத்தோற்றங்களே இந்த வேறுபாடுகளுக்குக் காரணமெனலாம்.

*(த. ச. சா. 1987 ஏப். ப. 3)*

# (15) பிரம்மம்

## பிரம்மம் எட்டு விதமாய் விளங்குகிறது:

பிரம்ம தத்துவத்தை விளக்குவதே வேதம். இந்தப் பிரபஞ்சமனைத்தும் வேதத்தைச் சார்ந்தே இயங்குகிறது. சத்தியத்தின் வடிவமே வேதம். இது எட்டுவிதமான வழிகளில் பிரகாசிக்கிறது. (1) சப்த பிரம்மமயி (எங்கும் நிறைந்த நாதப் பிரம்மமாக விளங்குவது). (2) சராசரமயி (ஒரே நிலையில் அசையாமலிருக்கும் பொருட்கள் மற்றும் நகர்ந்து கொண்டேயிருக்கும் பொருட்கள், (தாவர சங்கமப் பொருட்கள்,) எல்லாவற்றிலும் பரவியுள்ளது). (3) ஜ்யோதிர்மயி (எங்கும் ஊடுருவும் ஒளிமயம்). (4) வாங்மயி (பேசும் சொற்களில் பிரதிபலிப்பவை). (5) நித்யானந்தமயி (நிலையான ஆனந்தத்தை அளிப்பவை). (6) பராத்பரமயி (எல்லா இடங்களிலும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் காரணமாயிருக்கும் தன்மை). (7) மாயாமயி (மாயையாகத் தோற்றமளிக்கும் தன்மை). (8) ஸ்ரீமயி (சகலவித சௌபாக்கியங்களும் கொண்ட தன்மை).

*(த. ச. சா. 1986, யூன். ப. 2)*

## வேற்றுமையான உருவங்களிடையே ஒற்றுமை காண்பதே பிரம்ம ஞானம்:

எல்லோரும் தெய்வத்தின் குழந்தைகள். மனித குல நாயகன் அந்தத் தெய்வமே. பெயர்களிலும் உருவங்களிலும் வேறுபட்ட வகையில் பலவிதமான பழக்க வழக்கங்களும் மதப்பற்றுக்களும் ஏற்பட்டிருந்தாலும் எல்லோருக்கும் அப்பனை தெய்வம் ஒன்றே என்பதில் ஐயமேதுமில்லை. இதை அறிவது தான் "பிரம்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்'' அல்லது மெய்ப்பொருளறிவு எனலாம். இந்த அறிவைப் பெறுவது சாத்திரங்களைப் படிப்பதாலோ விவாதங்களில் ஈடுபடுவதாலோ சாத்தியமாகாது. ஒவ்வொரு ஜீவியும் பிரம்மத்தின் உருவமே என்ற உண்மையை உணரவேண்டும். வேற்றுமையான உருவங்களிலுள்ள இந்த அடிப்படை ஒற்றுமையைக் காண்பதே பிரம்ம ஞானம்.

*(த. ச. சா. 1988, மார்ச். ப. 6)*

# (16) நான் யார்?

**நான் யார் என்பதற்குப் பதில் காணும் வரை சாதனை தொடரவேண்டும்:**

*பஜனை, பூஜை, தியானம் இவை யாவும் மனதை ஒருமுகப் படுத்தும் தற்காலிக வழிமுறைகளேயன்றி நிரந்தரமான இலட்சியத்தைப் பெற்றுத்தர வல்லவையாகமாட்டா. 'நான் யார்' 'நான் யார்' என்று கேட்டுக் கொண்டேயிருத்தல் வேண்டும். இதற்குப் பதில் காணும் வரை சாதனை தொடர வேண்டும். என் உடல், என்மனது, என்புத்தி, என்உடைமை என்று கூறிக் கொண்டே போனுல் 'நான்' என்பது 'எது' என்று தேடுவதில் நாட்டம் அதிகமாகும். இவையாவும் இந்தத் தேகத்தைக் குறிப் பவையே. அப்படியானுல் அந்த உண்மையான 'நான்' என்பது எது? தேகம் ஜடம், ஜடப்பொருள். எப்படி இது சாசுவதமான பொருளை உணரமுடியும்? தன்னை எவராவது நிந்தித்தாலும் திட்டினுலும் அல்லது போற்றினுலும் அது யாரைக் குறிப்பிடுகிறது என்று ஆராய்ந்து பார்த்தால் அது தேகத்திற்கே யல்லவா உரியது. இதனுல் பாதிக்கப்படவேண்டியது தேகமே. அந்தத் தேகத்திற்குரியது 'நான்' அல்ல என்று விவேகத்துடன் வாதிக்க வேண்டும். ஆகவே இந்த நிந்தனையும் பாராட்டும் தன்னை எவ் வகையிலும் பாதிக்காது என்ற பக்குவம் பெற வேண்டும். தேகம் எப்படி மற்றொரு தேகத்தைத் தூஷிக்க முடியும்? இது சாத்திய மற்றதல்லவா? ஆத்மா மற்றொரு ஆத்மாவைத் தூஷிக்குமா? இது சாத்தியமேயில்லை. ஏனெனில் ஆத்மா ஒன்றே. எங்கும் வியாபித் திருப்பது ஒரே ஆத்மஸ்வரூபம்.*

*(த. ச. சா. 1987, ஏப். ப. 8)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (17) ஆத்ம தத்துவம்

**ஆத்ம தத்துவம்:**

விழிப்பு நிலையில் அனைத்தையும் பார்க்கிறோம். அனைத்தையும் அனுபவிக்கிறோம். கனவு நிலையில் விழிப்பு நிலையில் பார்த்த காட்சிகளேயன்றி பார்க்காத காட்சிகளும் கூட வருகின்றன. அனுபவிக்கின்றோம். கனவு நிலையில் இல்லாத ஆனந்தத்தை உறக்க நிலையில் அனுபவிக்கின்றோம். விழிப்புநிலை, கனவுநிலை, உறக்கநிலை இம் மூன்று நிலைகளும் வெவ்வேறானவைகளாக இருக்கின்றன. ஆனால், இந்த மூன்று காலங்களிலும் அனுபவிக்கும் ''நான்'' மட்டும் உண்மை. அதுவே ஆத்மா! சர்க்கரையை தண்ணீரில் போடுகின்றோம். அது கரைந்து தண்ணீரில் எல்லா இடங்களிலும் வியாபிக்கின்றது. நாம் கண்களால் பார்த்து, கையினால் எடுத்துப் போடப்பட்ட சர்க்கரை தண்ணீரில் கரைந்து விடுகிறது, கரைந்த பிறகு சர்க்கரை கண்களுக்குத் தென்படுவதில்லை. கைகளுக்கும் கிடைப்பதில்லை. நாக்கின் மீது தண்ணீர்த் துளிகளை வைத்தால் இனிக்கிறது. எல்லா இடங்களிலும் வியாபித்த அந்த இனிப்பே சத்தியம். அதுவே ஆத்மா! கண்களுக்கு தென்படமாட்டாது. கைகளுக்கும் கிடைக்கமாட்டாது. ஆகவே, குணங்களற்றது; நிறைவோடு கூடியது. இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பதனால் அவர் பிரபு! ஊகங்களுக்கும் சொற்களுக்கும் நேரடி சான்றுகளுக்கும் அகப்படாதவர் ஆனதினால், அவர் அறியப்படாதவர். இறைவனின் ஒவ்வொரு பெயரின் உட்பொருள்கள் ஒப்பற்றவைகளாகும். அனைத்துப் பெயர்களும் இறைவனுடையவைகளே! ஒருமைப்பாட்டை நிரூபிக்கக் கூடியவைகளே. இறைவன் ஒருவனே! அனைவரும் இறைவன் அம்சமே! ''நான்'' ''என்னுடையது'' என்கிற அகங்கார மமகாரங்களை அகற்றி, தன்னைத்தானே அறிந்து கொள்வதே இறைத்தன்மையை அறிந்து கொள்வதாகும். அகங்கார மமகாரங்களை அகற்றிக் கொள்ளும்பொழுதுதான் நமக்கு அந்தத்தத்துவம் அர்த்தமாகின்றது. தேகத்துவத்தை அர்ப்பணம் செய்ய வேண்டும்; மானசிக தத்துவத்தை அர்ப்பணம் செய்யவேண்டும்; பாவனை தத்துவத்தை அர்ப்பணம் செய்ய வேண்டும், செயலாற்றும் பணியின் பயனை அர்ப்பணம் செய்ய வேண்டும். அப்பொழுது மிகுந்திருப்பது ஒன்று மட்டுமே! தாயும் நீயே; தந்தையும் நீயே; நண்பனும் நீயே; சுற்றமும் நீயே; தாய் தந்தையர், நண்பர்கள், சுற்றத்தவர்கள் இவர்களனைவரும் என்றைக்காவது ஒரு நாள் இவ்வுலகை விட்டுச் செல்லக் கூடியவர்களே! ஆனால் ''நீ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது மட்டும் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. அனைத்திலும் உள்ள அந்த ''நான்'' என்பதே சத்தியம்! அந்த ''நான்'' (I) தத்துவத்தை குறிப்பறிந்து கொள்ள வேண்டும். நான் யார்? நான் யார்? என இடையறுது கேட்டுக் கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் ''I'' என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஓர் எழுத்து ஐ (I) க்கு ''நான்'' என்பது பொருளாகும். மூன்றெழுத்து ''ஐ'' (eye) க்கு ''கண்'' என்பது பொருளாகும். ஓர் எழுத்து ''I'' ''நான்'' ஆத்மா, நான் எம். ஏ. பரீட்சையில் தேர்ச்சியடைந்து விட்டேன்; நான் பி. ஹெச். டி. படித்துக் கொண்டிருக்கிறேன்; நான் பிராமணன்; நான் க்ஷத்திரியன்; நான் வைசியன்; நான் இளைஞன்; நான் வயோதிகன் இந்த விதமாக பாவிப்பது தேகதத்துவம். ''நான்'' என்கின்ற நபர் இவைகளில் எதுவுமே அல்ல. இளைஞன் அல்ல; வயோதிகன் அல்ல; பிராமணன் அல்ல; சூத்திரன் அல்ல; அவனுக்கு வயது வேறுபாடில்லை; குலவேறுபாடில்லை; எந்த வேறுபாடும் இல்லை. அந்த நான் என்பதை இலட்சியத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அதுவே எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது. எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஏகத்வத்தை (ஒரு பொருளாயிருக்கும் தன்மையை) க் குறிப்பறிந்து கொள்வதே உண்மையான ஆத்ம தத்துவம்.

*(த, ச. சா. 1988. மே. ப. 12)*

**'அஹம்' உருவத்தோடு சேரும்போதுதான் அஹங்காரம் ஏற்படுகிறது:**

'அஹம்' என்றால் 'நான்' என்று பொருள், 'அஹம்' என்பது 'ஆ' காரத்துடன் அதாவது உருவத்துடன் இணைந்து விட்டால் அகங்காரம் வந்து விடுகிறது. 'அஹம்' என்பது அருவ நிலை. அதுவே உருவத்துடன் சேரும் போதுதான் அதை இனம் காண முடிகிறது. அஹம் என்பது ஆத்மாவையே குறிக்கும். இது உருவத்துடனே சேர்ந்துவிடும் போதுதான் 'அகங்காரம்' ஏற்படுகின்றது.

*(த. ச. சா. 1987. எப். ப, 4)*

**நீறுபூத்த நெருப்புப்போல் ஆத்மா மறைந்திருக்கிறது:**

தேகமென்பது பிணிகளும் துன்பங்களும் நிறைந்த கூடை போன்றது. அழுகிப்போகும் காய்கறிகள் போன்றதே. இதுபவ சாகரமென்னும் சம்சாரக் கடலைத் தாண்ட உதவ முடியாது. இப்படிப்பட்ட சாசுவதமில்லாத, அழிந்து நசித்துப் போகக்கூடிய நீர்க்குமிழி போன்ற தேகத்திற்காக அதிகப்பாடுபடுகிறான் மனிதன், நிலையான உயர்ந்ததான ஆத்மதத்துவத்தை அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முயற்சி செய்வதில்லை. இது மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியன் போலவும், நீறுபூத்துள்ள நெருப்புப் போலவும், இமைகளால் மூடப்பட்ட கண்கள் போலவும், பாசியினுல் மூடப்பட்ட நீர் போலவும், விருப்பு வெறுப்பெனும் (ராகத்வேஷம்) திரையினுல் மூடப்பட்டுள்ளது. மேகங்கள் மறைந்ததுமே சூரியனைப் பார்க்கிறோம், மேலுள்ள நீற்றினை நீக்கினுல்தான் நெருப்புப் புலப்படுகிறது. அதேபோல் ராகத்வேஷமெனும் போர்வையை விலக்கினுல்தான் ஆத்மாவை உணரமுடியும்.

(த. ச. சா. 1987 மாச். ப. 2)

### ஆத்ம மார்க்கம் இலகு. ஆனல் சிரத்தையின்மைதான் குறை:

ஆன்மீக சாதனையைவிட எளிதான மார்க்கம் உலகில் வேறு எதுவும் இல்லை. சிரத்தைக்குறைவுதான் இதை ஒரு அசாதாரண மான செயற்கரிய சாதனையாக தோற்றுவிக்கிறது. ''ஸ்ரத்தாவான் லபதே ஞானம்'' என்பது கீதை வாக்கியம். சிரத்தையுடன் முயன்றால்தான் ஞானம் பெற முடியும். அவ்வப்பொழுது 'நானே சச்சிதானந்த ஸ்வரூபன்'' என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதை மறந்து விடுவதால்தான் ஆபத்தான விளைவுகள் நிகழ்கின்றன. நம்முடைய ஒவ்வொரு செயலும் எண்ணமும் இந்தச் சச்சிதானந்தத்தையே சார்ந்துள்ளது என்பதை மறந்து விடக்கூடாது. ஆகவேதான் மனிதன் எப்போதும் ஆனந்தத்தையே கோரிவருகிறுன்.

(த. ச. சா. 1988, பெப். ப. 13)

### ஆத்ம சாந்தி பெறுவது எங்ஙனம்:

சத்தியமே ஆத்மா, தூய்மையான பிரேமையே ஆத்மா, எல்லாம்வல்ல இறைவனே ஆத்மா; சுயநலமற்ற சேவையே ஆத்மா, இவைகளுக்கு மரியாதை அளிப்பதே சுயமரியாதையாகும். இந்த வகையில் கிட்டும் அமைதியே ''சாந்தி'' என்பது. மற்றவை பயனற்றவை. கடவுள் கருணைக்கடலானவர். சத்தியத்தின் வடிவானவர். பிரேமையே தனது ஸ்வபாவமாக கொண்டவர். அந்தக் கடவுளை இடைவிடாது சித்தத்தில் இருத்தி வருவதே சுயமரியாதை எனக்கருதப்படும். இதைச் சாதிப்பதற்கு, உலகில் செல்வத்திற்கும் பதவிக்கும் கொடுக்கப்படும் மதிப்பையும் மரியாதையையும் துச்சமென ஒதுக்கி, போற்றலையும் தூற்றலையும் ஒருங்கே உதாசீனம் செய்து, புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருட்படுத்தாது, சத்தியத்தின் வடிவமான கடவுளிடமே முழு நம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துச் சாதனையில் ஈடுபட வேண்டும். இதுவே உண்மையான, நிலையான 'ஆத்ம சாந்தி'யை அளிக்கவல்லது.

(த. ச. சா. 1986, பெப். ப. 22)

**தெய்வம் வேறு என்று எண்ணுபவர் மெய்யறிவற்றவரே! ஆத்மாவே இலக்கு:**

ஜபம், யக்ஞம், தியானம், யாகம் எல்லாம் 'கடவுள் வேறு ஆத்மா வேறு' என்று வேற்றுமை கருதுபவர்களால் செய்யப் படுபவையேயாகும். தெய்வம் வேறுதான் என்று கருதுபவர்கள் மெய்யறிவற்றவர்களே. தெய்வத்திற்கும் இதயம் உண்டு. அந்த இதயமே ஆத்மா. ஆத்மாவை வேறாகக் கருதுபவர்கள் தெய்வத் திற்கு இதயமில்லையென்று கருதுபவர்களே எனலாம். எவ்வளவு சாத்திரங்களைக் கற்றறிந்திருப்பினும் எத்தனையோ மகான்களைத் தரிசனம் செய்திருந்தும் தன்னுடைய உண்மை ஸ்வரூபத்தை அறியாதவர்கள் மூடர்களெனவே கருதப்படத்தக்கவர்கள். ஆத் மாவை இலக்காகக் கொள்ளாமலிருப்பதால்நான் இந்த உலகமே இலக்காகத் தோன்றி நமது நாட்டம் முழுமையும் இந்த உலகின் மீதே ஊன்றிவிடுகிறது. ஆத்மாவையே நமது இலட்சியமாகக் கருதினால் இந்த உலகத்தின் மீதான நாட்டம் மறைந்துவிடும்.

(த. ச. சா. 1987 ஏப். ப. 2)

**ஆத்மாவைத் தேடும்போது தனது கடமைகளை விடத் தேவையில்லை:**

எக்காலத்திலும் தேகத்தின் மீதும் ரூப நாமங்கள் மீதுமே நாட்டமுற்றிருந்தால் இவைகளுக்கப்பாற்பட்ட பரம்பொருளை நாடுவது எப்போது? இதனால் ஒருவர் தனது கடமைகளை விட்டு விட வேண்டுமென்று கருதலாகாது. செய்யவேண்டிய பணிகளைச் செவ்வனே செய்து கொண்டே ஆத்மதத்துவத்தின் மீது நாட் டத்தை வளர்க்க வேண்டும். செய்யத் தூண்டுவது ஆத்மாவே, செய்வதும் ஆத்மார்ப்பணமே, இலக்கும் ஆத்மாவை உணர்தலே என்ற மனோபாவத்துடன் பணிகளைத் தொடர வேண்டும்.

(த. ச. சா. 1987 ஏப். ப. 8)

## (18) மதங்கள்

**பிறமதங்களில் பேதம் காணலாகாது:**

எல்லா மதங்களின் சாரமும் ஒற்றுமையேயன்றி வேற்றுமை யல்ல. 'ஏகத்துவம்' அதாவது 'இறைவன் ஒருவனே' என்பதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான கருத்து. எல்லா மதங்களின் இலட்சியமும் அந்த இறைவனை அடைதலே என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பகவத்கீதை பாரத தேசத்தினருக்கு மட்டுமின்றி உலகோர் எல்லோருக்குமே பொருந்தும். இது ஏதோ இந்துமத நூல்தானென்றும் இந்துக்களுக்கேதான் இதைப் பின்பற்றத் தகுதியுள்ளதென்றும் கருதுவது தவறு. சாதி, மத, இன, தேச, கால வேறுபாடில்லாமல் எந்த மனிதருக்கும் எக்காலத்துக்கும் பொருத்தமான நூல் பகவத்கீதை. எல்லோருக்கும் இது உயிர் மூச்சாகவே கருதப்பட வேண்டும். குர்ஆன் முஸ்லீம்களுக்கு மட்டுமென்றோ, பைபிள் என்பது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமென்றோ ஜெராஸ்டிரிய மதத்தினருக்கு மட்டும் ஜெண்ட் அவஸ்தா என்றோ சீக்கியர்களுக்கு மட்டுமே கிரந்த் சாகிப் என்றோ வேறுபாட்டுணர்வுகளைப் பெருக்கிக் கொண்டு மதவெறியர்களாகவாழ் நாளை வீணுகக் கழிப்பது வருந்தத்தக்கது.

(த. ச. சா. 1987, ஏப். ப. 11)

### எந்த மதத்தையும் வெறுத்தல் கூடாது:

எந்த மதத்தையும் கூட நாம் இகழ்தல் கூடாது; பகைத்தல் கூடாது; வெறுத்தல் கூடாது. உங்களுக்கு விருப்பமுள்ள மதத்தை நீங்கள் பின்பற்றலாம். தவறில்லை. பிற மதத்தை வெறுக்கும் பக்தி, பக்தியேயல்ல. பகவத்கீதை பக்தியோகத்தில், ''அத்வேஷ்டா ஸர்வபூதாஞம்'' அதாவது எவரையும் பகைத்தல் கூடாது எனப் போதிக்கப்பட்டுள்ளது. அனைத்து உயிரினங்களிலும் குடிகொண்டிருக்கும் இறைவனை நாம் பூஜிக்கவேண்டுமேயன்றி, வெறுத்தல் கூடாது.

(த. ச. சா. 1986, ஜுலை. ப. 4)

## (19) புலன்கள்

### புலன்களைக் கட்டுப்படுத்தல் வேண்டும்:

மனக்கட்டுப்பாடின்றி மனிதன் ஒரு சுணப்பொழுதும் அமைதி காண முடியாது. அமைதியான, ஆனந்தமான வாழ்க்கை வாழ்ந்திட விரும்புகிறவர் புலனுணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். இந்தப் ''புலனடக்கம்'' இல்லாததினுல்தான் மனிதன் இன்று அமைதியற்று இருக்கிறுன். இன்று மனிதன் கவலைகளுக்குட்பட்டு அமைதியை இழந்திருக்கக் காரணம் அவனிடம் குடிகொண்டுள்ள கணக்கற்ற ஆசைகளே. மனிதனின் இந்த மனோநிலைக்கு உலகத்தை குறை கூறுவது சரியல்ல. இதற்கு ''சம்சாரமும்'' அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வாழ்க்கையும் காரணம் என்று கூறுவதும் சரியாகாது. உலகத்துடனும், குடும்பத்துடனும் தனது பற்றுதலினுல் தானே கட்டுண்டு விடுகிருன் மனிதன். இப்படிப்பட்ட பற்றுதலிலிருந்து விடுபட வேண்டுமானுல், வெளிப் பொருள்களினுல் பாதிக்கப் படுவதைக் குறைக்க வேண்டும். அதற்குக் கண், காது, நாக்கு இவை மூன்றையும் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடு படவேண்டும்.

(த. ச. சா. 1988, ஏப். ப. 5, 6)

**புலன்கள் தாமாக இயங்கா:**

மனது எப்படி இயங்குகிறதென்பதை நீங்கள் நன்ருகப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாப் புலன்களையும் இயங்கவைக்கும் சக்திகொண்டது மனது. நீங்கள் தூங்கும்போது கனவில் உங்கள் பெற்ருேர்களையும் மற்ற நண்பர்களையும் காண்கிறீர்களென வைத்துக்கொள்ளுவோம். அவர்களைக்கண்டது உங்கள் கண்களா? இல்லையே. தூங்கும் போது கண்கள் மூடியிருக்கின்றனவே, மேலும் கனவில் பெற்ருேருடனும் மற்ருேருடனும் நீங்கள் பேசிக் கொண்டிருப்பதாகவும் நேர்ந்திடலாம். ஆனுல் நினைவில் உள்ளது போல் உங்கள் வாய்திறந்து நீங்கள் பேசவில்லை. கனவில் பிறர் பேசுவதையும் நீங்கள் கேட்கிறீர்கள். ஆனுல், உங்களது காதுகள் இயங்கவில்லை. நீங்கள் கனவில் பார்ப்பது, கேட்பது, பேசுவது எல்லாமே மனதின் செயலேயன்றி புலன்களால் உணரப்படுவ தல்ல. ஆகவே புலன்கள் தாமாகவே செயல்படக் கூடியவையல்ல. மற்ருெரு சக்திக்குக் கட்டுப்பட்டவையே என்பது தெளிவாகிறது.

(த. ச. சா. 1988, ஏப். ப. 8)

**கண்ணுக்கும் வாய்க்கும் மூடிகள்:**

தெய்வத்தை நாடிச்செல்லும் பாதையில் மனிதன் சிறிது சிறிதாக ஆசைகளைக் குறைத்துக்கொண்டே வரவேண்டும். ஏனெனில் ஆசைகளே அவனது இன்னல்களுக்கு முக்கிய காரணமாகும். ஆசையில்லாமல் மனிதன் உயிர்வாழ்வது கடினம் என்பது உண்மையே. ஆயினும் அவை ஒரு வரையறைக்குள் இருத்தல் வேண்டும். ஆசையை அடக்கினுல் தான் ஆனந்தம் பெற இயலும். புலன்களில் முக்கியமானவை கண்ணும், நாவுமே. இவைகளின் முக்கியத்துவத்தைக் கருதியே அவைகளின் செயலாற்றலைக் கட்டுப் படுத்த வழிமுறைகளை இறைவன் அளித்துள்ளார். இறைவன் மனிதனிடம் கூறுவார் ''ஏ மூட மனிதனே! உன் கண்களையும் வாயையும் மூடுவதற்கு இயற்கையான வசதியை அளித்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளேன்'' காணக்கூடாத காட்சியைத் தவிர்க்க வேண்டுமென்றால் கண்களை எளிதாகவே மூடிக் கொண்டு விடலாம். காதுகளுக்கும் மூக்குக்கும் அம்மாதிரி வசதி இல்லை. நாக்கைக் கட்டுப்படுத்தி மூடிவைக்க உதடுகளை மூடினால் போதும். ஆகவே, கண்களால் காண்பவைகளிலும் நாவினால் பேசுவதிலும் கட்டுப்பாட்டை கடைப்பிடியுங்கள். இவையிரண்டும் கட்டுக்கடங்கிவிட்டால் மீதி எல்லாப்புலன்களுமே தாமே அடங்கிவிடும். கண்டதே காட்சி என எல்லாவற்றையும் கட்டுப்பாடின்றி காணும் கண்களும் எவ்வித வரையறையுமின்றி இஷ்டப்படி பேசும் நாவும் இருக்கும் வரையில் ஒருவனுக்கு வாழ்க்கை விபத்தாகவே முடியும். ஆகவே கண்களால் பார்க்கக்கூடியவைகளையே பார்க்கப் பழக வேண்டும். நல்லவைகளையே கண்டு, நல்லதையே பேசவேண்டும்.

(த. ச. சா. 1988, ஏப். ப. 11)

## (20) நாமம்

**தெய்வத்தின் நாமங்கள் யாவும் சமமே:**

தெய்வத்தின் பற்பல பெயர்களில் ஒரு குறிப்பிட்ட பெயரே சிறந்தது, மற்றவைகளைவிட மகிமை மிக்கது, அதிக பலனளிக்க வல்லது என்று ஏற்றத் தாழ்வைக் கற்பித்துக் கூறலாகாது. ராமன் சிவனைவிடச் சிறந்த தெய்வம் அல்லது சாயி பாபாவே மற்ற எல்லா அவதாரங்களையும் விட மிகச் சிறந்த பூரணாவதாரம் என்றெல்லாம் கூறுவது தெய்வத்தைப் பற்றிச் சரியாய்ப் புரிந்து கொள்ளாததையே சுட்டிக் காட்டும். உதாரணமாக 'ராம்' என்ற பெயரில், ''ஓம்'' ''நமோ நாராயணா'' என்ற விஷ்ணுவின் மந்திரத்தில் உள்ள 'ரா' வும் ''ஓம் நமசிவாய'' என்ற சிவ மந்திரத்திலுள்ள 'ம' வும் இணைந்துள்ளது. ஆகவே 'ராம' என்ற பெயரில் விஷ்ணுவின் குண மேம்பாடுகளும் சிவனின் மேம்பாடுகளும் ஒன்று கூடியுள்ளதை உணர வேண்டும். அது மட்டுமன்றி ''ஹரா'' என்ற சிவனின் பெயரில் இருக்கும் 'ரா' வும் 'உமா' என்ற சக்தியின் பெயரில் உள்ள 'ம' வும் இணைந்துள்ளதாகவும் கொள்ளலாம். ஆகையால் இது 'சிவசக்தி' ஸ்வரூபத்தையும் குறிப்பதாகும். இப்படியாக ஒவ்வொரு பெயரும் பல பெயர்களின் ஒருமைப்பாட்டை உணர்த்தும் பொருள் கொண்டதாக இருக்கும் போது இதில் பிரிவினை மனப்பான்மைக்கு இடமேது?

(த. ச. சா. 87. ஜன. பின் அட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (21) சாதனை

### இன்று செய்யப்படும் சாதனை என்ன?

இன்று செய்யப்படும் சாதனை என்ன? 'புட்டப்பர்த்திக்குப் பத்து முறை சென்று வந்தேனே! என்னுடைய கஷ்டம் தீர வில்லையே' என்று ஓல மிடுகின்றனர். புட்டப்பர்த்திக்குச் சென்று வந்து விட்டால் கஷ்டம் தீர்ந்துவிடுமா? மற்றும் பலர் 'திருப் பதிக்கு எவ்வளவு வேண்டுதல் பிரார்த்தனைகள் செய்து நிறை வேற்றி விட்டேனே இன்னமும் எனக்கு விடிவு காலம் வரவில் லையே' என்று ஏங்குகிறார்கள். இது சரியல்ல. இக்காலத்தில் 'பக்தி' என்பது இம்மாதிரி சிறிய கோரிக்கைகளுக்காகப் பிரார்த் தனை செய்வதே என எண்ணுவது மிகத்தவறு, நீங்கள் கோர வேண்டியது தெய்வத்தையே! தெய்வம் எல்லாவற்றையும் அளிக் கும் வல்லமை கொண்டது, இது வேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை. பொன் கையிலிருந்தால் எந்த ஆபரணம் வேண்டு மானாலும் செய்து கொள்ளலாம். இந்த உண்மையை அறிந்து உனது உள்ளத்தில் உள்ள தெய்வத்தையே கோர வேண்டும். அதுவே உன்னை நீ அறிந்து கொள்வதாகும். அப்படியின்றி நீ தெய்வத்தை ஏமாற்றுவதாக நினைத்தால் உன்னை நீயேதான் ஏமாற்றிக் கொள்கிறாய். இந்த உண்மையை உணர்ந்தால்தான் சைதன்யத்தை அடைய முடியும். அற்பசுகங்களுக்காகவும் சிறிய மதிப்பற்ற பொருள்களுக்காகவும் வேண்டி தெய்வத்தைத் தூர மாக்கிக் கொள்வது சரியல்ல.

(த. ச. சா. 1986. ஒக். ப. 6)

### துவைத பாவனை சாதனை வருந்தத் தக்கது:

எவ்வளவோ பேர்கள் சாதனைகள் செய்து வருவது 'துவைத' பாவத்துடனே என்பது வருந்தத் தக்கது. எத்தனை காலம் தொடர்ந்து செய்தாலும் இரட்டையுணர்வுடன் செய்யும் தவம் தியானம் யாவும் வீணேயாகும். நமது உணர்வைச் சிறிது சிறி தாக மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தப் படைப்பு மொத்த மும் நமது திருஷ்டியைச் சார்ந்ததே. நமது கற்பனையே இந்தப் பிரபஞ்சம் என்பதை உணர வேண்டும். நேத்திரத்திலேயே சாத்திரத்தையும் பார்க்கிறோம். ''விசுவம் விஷ்ணுஸ்வரூபம்'' இந்தப் பிரபஞ்சமே விஷ்ணுமயம் என்பதை மனத்தில் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஜபம், பூசை, யக்ஞம், தானம், தபஸ் இவைகளினால் என்னை அடைந்துவிட முடியாது. ஆயினும் துவைத பாவத்துடன் நீ செயல்படும் வரை இவைகளை விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடக் கூடாது என்றும் கீதையில் 11ஆவது அத்தியாயத்தில் 48, 53 ஸ்லோகங்களில் விளக்கப்பட்டுள்ளது.

(த. ச. சா. 1987, ஏப். ப. 7)

## நடைமுறையில் பின்பற்றுமல் கோடி ஜன்மம் எடுத்தாலும் நாம் ஆன்மீக முன்னேற்றம் காண முடியாது:

நடை முறையில் பின்பற்றுமல் வாயளவில் கூறும் சுலோகங்கள் சோகத்திற்கே காரணமாகும்! ஒரு வார்த்தையை உச்சரிக்கும் போது அதில் அடங்கியுள்ள உட்கருத்தையும் ஒவ்வொரு அக்ஷரத்தின் அர்த்தத்தையும் நன்குணர்ந்து உச்சரித்தல் வேண்டும். அக்ஷரங்களை உச்சரிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறீர்களேயன்றி அவற்றின் உட்கருத்தை அறிந்து கொள்ள முயல்வதில்லை. ஆடம்பரத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இப்படி ஆடம்பரத்தில் நாட்டம் மேலோங்கியிருக்கும்வரை ஆத்ம தத்துவத்திற்கு வெகு தூரத்தில் தான் இருப்பீர்கள். இப்படிப் பட்டவர்கள் கோடி ஜன்மங்கள் எடுத்தால் கூட ஆன்மீக முன்னேற்றம் காணவே முடியாது.

(த. ச. சா. 1986. செப். ப. 6)

## செய்யவேண்டியது பிரசாரமல்ல ஆசாரமே:

பகவத்கீதையைப் பற்றிப் போதிப்பவர்களும் கூட கூட்டத்தினரைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்குப் பிடித்தமானவைகளைக் கூறுகின்றனரேயன்றி சற்றுக் கசப்பாயினும் உண்மையையே கூற வேண்டுமென்ற நியதியைப் பின்பற்றுவதில்லை. இது வருந்தத்தக்கது. கேட்பவர்களின் மனதைக் கவர்ந்து அவர்கள் தம்மைப் புகழ வேண்டுமெனும் நோக்கத்துடன் உபதேசம் செய்கின்றனரேயன்றி உண்மையாகக் கீதையின் தத்துவத்தைப் பின்பற்றித் தெய்வத்துவமடையவேண்டுமெனும் நோக்கம் இல்லை. இது சரியான போதனையில்லை. செய்யவேண்டியது 'பிரசாரம்' அல்ல 'ஆசாரமே' அதாவது பின்பற்றும் நெறியே. தாம் கூறுபவற்றைத் தாமே தம் வாழ்வில் பின்பற்றி வரவேண்டும். அப்படி உண்மையைக் கடைப்பிடிப்பவர்கள்தான் போதிக்கத் தகுதி பெறுபவர். இல்லாவிடில் மனிதர்கள் நம்பிக்கை இழந்து விடுவார்கள். தினமும் லட்சக் கணக்கான பிரதிகள் 'பகவத் கீதை' அச்சாகின்றன. எவ்வளவோ வெளிநாட்டினர் கூட இதைப் படித்துப் பின்பற்றுவதற்கு முயற்சி செய்கின்றனர். ஆனல் 'மனமாற்றம்' நிகழ்வது அரிதாயுள்ளது.

(த. ச. சா. 1986. டிசம். ப. 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகவத்கீதை படித்தால்மட்டும் போதாது:**

பகவத்கீதையைப் படிப்பதால் மட்டும் ஆன்மீக மேன்மை நிலை அடைய முடியாது. அதை அனுசரித்து அதன்படி சாதனை புரிய வேண்டும். அப்போதே தக்க பயன் கிடைக்கும். தெய்வத்தையே நாம் அடைய வேண்டிய இலக்காகக் கொண்டு, அடையும் பாதையாகப் பகவத்கீதையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(த. ச. சா. 1987 ஏப். ப. 12)

**படிக்கின்றோம் பின்பற்றுவதில்லை:**

பகவத்கீதை, பிரம்ம சூத்திரம் முதலிய நூல்களை அலசுகின்றோம். ஆனால் நம்மிடையே இதனால் ஏற்பட்டுள்ள மாறுதல் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால் ஒன்றுமில்லை. எனில் இவைகளைப்படித்து ஆராய்ச்சிகளும் கூட செய்வது யாவும் வீணே எனலாம். இவைகளைப் பின்பற்றி நம்முள் (Evolution) பரிணாம வளர்ச்சி ஏற்படவேண்டும். Super mind என்ற நிலைக்கு முன்னேறவேண்டும். அப்போதுதான், இந்த உலகுக்கும் தெய்வத்திற்கும் உள்ள தொடர்பு ஓரளவாகிலும் நமக்கு புலப்படும். உண்மையில் நாம் யாவரும் சச்சிதானந்த ஸ்வரூபிகளே. அதையே சார்ந்துதான் நாம் உயிர் வாழ்கின்றோம்.

(த. ச. சா. 1988 பெப். ப. 13)

**சாதனை எது?:**

சாதனை என்றால் குறிக்கோளை அடையும் செயல்முறை எனலாம். நாம் ஒரு குறிக்கோளை நிர்ணயம் செய்துகொண்டால், அதை அடையச் சில முயற்சிகள் எடுத்தே ஆகவேண்டும். இது இன்றியமையாததாகும். இதற்கு முதற்கண், குறிக்கோளின் மீது தீவிர பிரேமை தேவையாகும். அதை அடைய வேண்டும் என்ற தீவிர நாட்டம் கொள்ள வேண்டும். அத்துடன் அடைந்து விடுவோம் என்ற நம்பிக்கை (Confidence) கூட இருக்க வேண்டும். பிரேமையும் நம்பிக்கையும் (Devotion and faith) சேர்ந்தால்தான் குறிக்கோளை அடைய தீவிர செயலாக்கத்தை ஊக்குவிக்கும். இதையே (devotion to an ideal) இலட்சியத்தின் மீது கொண்ட ''பக்தி'' எனலாம். குறிக்கோளை அடையும் வழிமுறைகளைப் புரிந்து கொள்வதே ''ஞானம்'' அதை அடைவதற்கு எடுக்கும் முயற்சியே 'கர்மம்'. இப்படி 'பக்தி', 'ஞானம்',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கர்மம்' மூன்றும் சேர்ந்ததே "உபாசனை" எனப்படும். இந்த உபாசனையே சாதனையாகும்.

(த. ச. சா. 1988 ஒகஸ்ட் ப. 2)

## சோகத்தைப் போக்க இயலாத ஸ்லோகங்களால் என்ன பயன்?:

ஒருவர் உலகில் பலவித கலைகளைக் கற்று தேர்ச்சி பெறலாம். 'பண்டிதர்', 'கலைஞர்' எனப் பெயரும் புகழும் பெறலாம். ஆனால் 'ஆத்மஞானம்' இல்லாவிடில் இவருடைய அறிவும் ஆற்றலும் வீணே. உபநிஷத வாக்கியப்படி 'சோக'த்தைப் போக்க இயலாத 'சுலோகங்கள்' எவ்வளவு மனப்பாடம் செய்து திரும்பத் திரும்ப பாடிக்கொண்டிருந்தாலும் என்ன பயன்? இது வாழ்க்கையை வீணடித்ததாகவேயாகும். உலக விஷயங்களைப்பற்றிக் கற்றுக்கொள்ளும் கல்வி ஒருவருடைய ஜீவனோபாயத்திற்கேயன்றி அவருடைய ஆன்மீக முன்னேற்றத்திற்குச் சிறிதும் பயன்படாது. தெய்வத்துவம் பற்றிய ஞானத்தை ஒருவர் அடைந்து விட்டால், மீதி எல்லா வகையான ஞானமும் தாமே அவருக்குக் கிடைத்து விடும்.

(த. ச. சா. 1986 ஒக். ப. 7)

## மனதின் அடிப்படையில் சாதனை செய்வது பெரிய தவறு. ஆத்மாவே அடிப்படை:

உண்மையில் நாம் செய்யும் சாதனைகள் யாவும் மனதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இது மிகப்பெரிய தவறாகும். மனத்தின்மீது நாட்டம் கொண்டு செய்யப்படும் ஆன்மீக சாதனைகள் பயனற்றவையே. சாதனைகள் யாவும் ஆத்மாவையே இலட்சியமாகக் கொண்டு செய்யப்பட வேண்டும். மனத்தினாலோ வாக்கினாலோ ஆத்மாவைப்பற்றிய உணர்வு பெற முடியாது. ஒரு திருடனைக் கண்டுபிடிக்க அவனது உதவியையே நாடுவது சரியாகுமா? மனது திருடன் போன்றது. தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளாது மனது. எப்படி அதைக் கட்டுப்படுத்துவது என்பதே மகத்தான பிரச்சனை. இதற்கு ஒரே வழி நமது பார்வையை அதன் மீது செலுத்துவதைத் தவிர்த்து ஆத்மாவின் மீதே செலுத்த வேண்டும். இது எப்படி சாத்தியமாகுமென வினவலாம். நமது ஊனக்கண்களை வெளியுலகப் பார்வையிலிருந்து உள்ளே நோக்கும்படி செய்யவேண்டுமென்றால் இது சாத்தியமற்றது என்று புலப்படும். நமது பார்வை எப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் வெளியிலே இருக்குமேயன்றி உள்நோக்கி இருக்காது. கண்களின் தன்மையே வெளியுலகைப் பார்ப்பதுதான். அவைகளின் பார்வையை உள்நோக்கிச் செலுத்தவேண்டுமெனில் இது எப்படி இயலும்? வெளி உலகின் மீது பார்வை செலுத்துவதை அல்லது நாட்டம் கொள்வதைத் தவிர்த்து ஆத்மாவின் மீது நாட்டம் கொள்வதுதான் உள்நோக்குப் பார்வையெனப் படும்.

(த. ச. சா. 1987 ஏப். ப. 2, 3)

**அறியாமையை நீக்கவே சாதனை:**

இந்தப் பிரபஞ்சமே விஷ்ணுஸ்வரூபம். பகவான் எங்கும் நிறைந்திருப்பவர். தெய்வத்துவம் இல்லாத இடமே இல்லை. ஆன்மீக சாதனை செய்வது ஆன்மாவை உணர்வதற்கென்றே சொல்வது சரியல்ல. ஆன்மா எப்போதும் உள்ளதே. ஆனால் 'அனாத்மா' என்னும் ஆன்மாவைப்பற்றிய அறியாமையை நீக்கவே சாதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தன்னுடைய உண்மை ஸ்வரூபத்தை மனிதன் மறந்து விடுகிறான். சிற்றின்ப சுகங்களையே ஆனந்தமெனும் தவறான கருத்தில் ஈடுபாடு கொண்டு ''தான் ஆன்மா''வெனும் உண்மையை மறந்து போய்விடுகிறான். சத்தியம் என்பது ஒன்றே.

(த. ச. சா. 1987 ஏப். ப. 1, 2)

## (22) நம்பிக்கை

**நம்பிக்கை வேண்டும்:**

ஒவ்வொன்றிலும் நம்பிக்கை இருத்தல் வேண்டும். சிலர் மூட நம்பிக்கைகள் என்கிறார்கள். நம்பிக்கை இன்றி இந்த உலகத்தில் வேறு எவரால் வாழ முடியும்? காலை விழித்தெழுந்தது முதல் உறங்கச் செல்லும் வரை ஒவ்வொரு வேலையையும் நம்பிக்கையோடு தான் செய்கின்றோம். ஆனால், தெய்வத்தின் மீது தான் நம்பிக்கை இல்லை. ஒரு சித்தாந்தி (சோதிடன்) எழுதிய பஞ்சாங்கத்தை நம்பி தர்ப்பணங்களைச் செய்கிறோம். ஏகாதசி என விரதங்களைக் கடைப்பிடிக்கிறோம். ஆனால், தத் – த்வம் அஸி, பிரஞ்ஞானம் ப்ரஹ்ம, அஹமாத்மாப்ரஹ்ம, அஹம்ப்ரஹ்மாஸ்மி என வேதங்கள் மணி ஓசை போன்று கூறிக் கொண்டு இருந்தால் அதை நம்புவதில்லை, நிலையற்றவைகளை எளிதில் நம்பிவிடுகிறார்கள். என்றென்றைக்கும் நிலையானதை நம்புவதில்லை. இந்தப் பலஹீனத்தை அகற்றிக் கொள்ள வேண்டும்.

(த. ச. சா. 1988. மே. ப. 19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஞ்சாங்கத்தில் நம்பிக்கை, வேதவாக்கில் இல்லை!**

இன்று அமாவாசையென்று பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்கிறீர்கள். அமாவாசை என்பது எங்காவது வானத்தில் எழுதியுள்ளதா? ஏகாதசி உபவாசமென்றால் அன்றுதான் ஏகாதசி என்று எப்படித் தெரிகிறது. ஏதோ ஒரு சித்தாந்தப்படி பஞ்சாங்க விதி முறைகளுக் கேற்ப இது வகுக்கப்பட்டுக் குறிக்கப்பட்டுள்ளது. அதையே நம்பிக்கையுடன் பின்பற்றுகிறீர்கள். ''தத்வமஸி'' ''பிரக்ஞானம் பிரும்மா,'' ''அயமாத்மா பிரும்மா,'' ''அஹம் பிரம்மாஸ்மி'' என்று வேதம் கூறுகிறது. மேற் கூறிய பஞ்சாங்க சித்தாந்தத்தின்படி குறிக்கப்பட்டவற்றை நம்புபவர்கள் எல்லாவற்றிற்கும் மூலாதாரமான வேத பிரமாணத்தை நம்பாமல் இருப்பது சரியா? ''நீயேபிரம்மம் ஆத்மா'' என்று அறுதியிட்டுக் கூறும் வேதவாக்கியத்தை ஏன் நம்பக் கூடாது? தனக்குத் தானே தன்னம்பிக்கையின்றி இந்த உலகத்தில் உயிர் வாழ்வது சாத்தியமல்ல.

(த. ச. சா. 1988. ஜூலை. ப. 10)

# (23) உள்ளம்

**இருதயம் ஒரு பூட்டு, மனம் அதற்குச் சாவி:**

மனத்தை உலகத்தின் பக்கம் திருப்பினால் தனியாகின்றது. இருப்பது ஒரு மனம் – அதைத்திருப்புவதினால்தான் வேறுபாடுகள் தோன்றுகின்றன. ஒரு கதவிற்கு பூட்டுப் போடுகிறோம். அந்தப் பூட்டைப் பூட்டுவதற்கும், திறப்பதற்கும் ஒரு சாவியை வைத்துக் கொண்டுள்ளோம். சாவியைப் பூட்டின் துவாரத்தினுள் நுழைத்து இடது பக்கம் திருப்பினால் பூட்டு பூட்டிக் கொள்கின்றது. வலது பக்கம் திருப்பினால் பூட்டு திறந்து கொள்கின்றது. அதே பூட்டு, அதே சாவி, திருப்புவது மட்டுமே வேறு, இருதயம் ஒரு பூட்டு – உங்கள் மனம் அதற்குச் சாவி, மனம் என்கிற சாவியை இருதயம் எனும் பூட்டினுள் நுழைத்து இறைவன் பக்கம் திருப்பினால் மோக்ஷம்: உங்கள் பக்கம் திருப்பிக் கொண்டால் மோகம். ஆகவே மனதைப் புலனின்பங்களில் ஈடுபடுத்தாமல் இயன்றளவு இறைவன் பக்கம் திருப்பி, பிறகு வாழ்க்கையைப் பயனுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

(த. ச. சா. 1986. ஜூலை. ப. 5,6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்த சுத்தியே முக்கியம்:**

பஜனை, தியானம், பூஜை, சாதனை முதலிய சடங்குகளால் பகவானை அடைந்துவிட முடியாது. ''சித்த சுத்தி'' ஒன்றினால் மட்டுமே இறைவனை அடைவது சாத்தியமாகும்.

(த. ச. சா. 1988. யூலை. ப. 3)

**சித்த சுத்தி பெறுவது எப்படி?**

சர்வேஸ்வரனைப் பற்றித் தெரிந்து கொள்ள முயலும் போது தான் ஆத்ம ஞானத்தை நோக்கி ஒருவர் முன்னேறியதாகும். இந்த மேன்மையான ஞானத்தைப் பெற ஒருவருக்கு முதலில் 'உள்ளத் தூய்மை' முக்கியமாக இருத்தல் வேண்டும். 'சித்த சுத்தி' எனும் 'உள்ளத் தூய்மை' பெறுவது எப்படி? இதற்குப் பற்பல வகையான கேள்விகளும், தான தர்மம், ஜப தியானம் போன்ற சாதனைகளும் செய்தல் வேண்டும். புனிதமான தெய்வத்துவம் நிறைந்துள்ள பெரியோர்களை தரிசனம் செய்து அவர்களுக்குச் சேவை செய்வதிலும் சித்தசுத்திகிட்டும். 'சித்தஸ்ய சுத்தயே கர்ம' என்பது சான்றோர் வாக்கு. சித்த சுத்தியினால் ஞான சித்தி பெறலாம். 'ஞானனேவது கைவல்யம்' இதுவே முக்திக்குச் சிறந்த மார்க்கமாகும். ஆகவே தான் சத்கர்மங்கள் செய்வதும் சத்சங்கத்தில் சேர்ந்து சேவை செய்வதும் மிக அவசியமாகும்.

(த. ச. சா. 1986. ஒக். ப. 8)

# (24) ஆசைகள்

**ஆசையை கடவுள் பக்கம் திருப்பினால் மகாதேவனுகலாம்:**

மனிதனுக்குப் பற்றுதல், ஆசை இவைகளின் பாதிப்பு அதிகமாக ஏற்படுவது இயல்பே. இம்மாதிரிக் குணங்களால் மனிதன் வாட்டி வதைக்கப் படுகிறான். இந்தத் தீவிர பற்றுதலும் ஆசையும் கடவுளின் மீது திருப்பப்பட்டால் மனிதன் ஆனந்தமடைவதுடன் அவன் வாழ்க்கையும் புனிதமாகும். அப்படிப்பட்ட மனிதர் 'மகனீய' ராக ஆவது மட்டுமின்றி 'மகாதேவ்' ராகவே ஆகலாம்.

(த. ச. சா. 1986. ஜன. ப. 1, 2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிப்பொருள்களினுல் பாதிக்கப்படுவதைக் குறைக்க வேண்டும்:**

இன்று மனதின் கவலைகளுக்குட்பட்டு அமைதியை இழந்திருக்கக் காரணம் மனிதனிடம் குடிகொண்டுள்ளகணக்கற்ற ஆசைகளே. மனிதனின் இந்த மனே நிலைக்கு உலகத்தை குறை கூறுவது சரியல்ல. இதற்கு ''சம்சாரமும்'' அதாவது குடும்ப வாழ்க்கையும் காரணம் என்று கூறுவதும் சரியாகாது. உலகத்துடனும் குடும்பத்துடனும் தனது பற்றுதலினுல் தானே கட்டுண்டு விடுகிறுன் மனிதன். இப்படிப்பட்ட பற்றுதலிலிருந்து விடுபட வேண்டுமானுல் வெளிப்பொருட்களினுல் பாதிக்கப்படுவதைக் குறைக்க வேண்டும். அதற்கு கண், காது, நாக்கு இவை மூன்றையும் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

*(த. ச. சா. 1988. ஏப், ப, 6)*

**ஆசைகளேக் குறைக்க வாழ்க்கைப் பயணம் இலேசாகும்:**

ரயில் பயணம் செல்லும் போது ''Less Luggage – More Comfort'' என்ற வாசகம் நீங்கள் பார்த்திருப்பீர்கள். வாழ்க்கைப் பயணத்தில் ''Luggage'' ''மூட்டைகள்'' என்பது ஆசைகளே. ஆசைகளேக் குறைத்துக் கொண்டால் வாழ்க்கைப்பயணத்தை எளிதாக்கிக் கொள்ளலாம். ஒவ்வொருவரின் ஆசைகளும் மேலே பெருகிக் கொண்டே போய் வானேயே எட்டிவிடும் அளவிற்கு நிறைந்து விடுகின்றன. இது மிகவும் வருந்தத் தக்கது. ஆசைகளேக் குறைத்துக் கொண்டே வரவேண்டும். இதற்கு வரையறை வகுக்க வேண்டும்,

*(த. ச. சா. 1988. மார்ச். ப. 13)*

**விலங்குகள் ஆஸ்தியைப் பற்றிக் கவலேப்படுவதில்லே:**

உயிரினங்களில் மனிதப் பிறவியே சாலச் சிறந்தது, கிடைத்தற்கரியது என்று கூறப்பட்டுள்ளது. விலங்குகளேப் பாருங்கள், அவைகளுக்கு ஆஸ்தியைப் பற்றியோ மற்ற உடைமைகளேப் பற்றியோ கவலேயில்லே, அகங்காரமில்லே. மாதச்சம்பளமும், வங்கியில் பணமும் வேண்டுமென்ற ஆசையில்லே, அன்ருடம் உணவு தேடிப் புசித்து உயிர் வாழ்கின்றன. ஆனுல் மனிதர்கள்தான் இக்காலத்தில் பற்பல வகைகளில் பணம் சேர்த்துப் பதவி வெறி பிடித்து அதிகார அகங்காரத்தினுல் அத்து மீறிய செய்கைகளில் ஈடுபடுகின்றனர்.

*(த. ச. சா. 1988. மார்ச். ப. 14)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துக்கம் எங்கிருந்து வருகிறது?:**

'துக்கம்' 'துக்கம்' என்று எப்போதும் கவலையுடன் கூறிக் கொண்டுள்ளனர். 'துக்கம்' என்றால் என்ன? இது எங்கிருந்து வந்தது? இதற்கு உருவம் இல்லை. நமது மனத்தில் ஏற்படும் ஒரு மாய உணர்வே துக்கம். தான் ஆசைப்பட்டது கிட்டவில்லை யெனில் மனதில் ஏமாற்றத்தினால் ஏற்படுவதே துக்கம். இந்த ஆசை எப்படிப்பட்டது. இது உலக விஷயங்கள் சம்பந்தப்பட்ட புலனிச்சை சம்பந்தப்பட்டதேயாகும். இந்த 'மனப்பிராந்தி' யை நீக்க உயர்ந்த நிலையான பிரம்ம நிலையை நாட முற்பட வேண்டும்.

(த. ச. சா. 1987. மாச். ப. 5, 6)

# (25) தூய்மை

**தூய பார்வை:**

தூய்மையான பார்வை தேவை. சாத்வீக உணர்வுகளும் எண்ணங்களும் தோன்ற உங்கள் பார்வையும் நோக்கமும் நல்ல தாயிருத்தல் வேண்டும். படைக்கப்பட்டவை யாவும் (சிருஷ்டி) பார்வையை சார்ந்தே இருக்கும் (திருஷ்டி). தீய நோக்குடன் பார்த்தால்தான் தீய எண்ணங்கள் தோன்றும். உங்களைவிட வய தில் பெரியவர்களான மாதர்களைக் கண்டால் தாயாகக் கருத வேண்டும். வயதில் சிறியவர்களான பெண்களை (சகோதரிக ளாக) தங்கைகளாகக் கருத வேண்டும். இப்படிப்பட்ட எண்ணம் இருந்தால் உங்கள் உணர்வுகளும் தூய்மையாகவே இருக்கும். மாணவர்களுக்குக் குறிப்பாக இதைச் சொல்லவேண்டியுள்ளது. உங்கள் தாயையோ, சகோதரியையோ மற்றவர் ஒருவர் தீய நோக்கோடு பார்த்தால் உங்களுக்கு மனக்கொதிப்பு ஏற்படு மல்லவா? இதை மனதிற் கொண்டு நீங்களும் பிறமாதர்களிடம் தூய்மையான உணர்வு கொள்ள வேண்டும். பிறர் செய்வதை கண்டனம் செய்யும் நீங்கள் அதே தவறைச் செய்யக் கூடாது.

(த. ச. சா. 1986. ஜன. ப. 17)

**தூய உணவு:**

உண்ணும் உணவு தூய்மையானதாயிருத்தல் வேண்டும். சாத்வீக உணவே எல்லோரும் உட்கொள்ள வேண்டும். எந்த உணவு வகையிலும் அளவுக்கு அதிகமான புளிப்போ. கசப்போ, துவர்ப்போ, காரமோ இருத்தல் கூடாது. மீன் வகைகள் மற் றும் மாமிச உணவுகள் ராஜச வகையைச் சார்ந்தவை. இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை விட்டுவிட வேண்டும். நல்ல சாத்வீக உணவும் கூட அதிகமாக உட்கொள்ளலாகாது. சிலர் சாத்வீக உணவு தானே என்று அளவுக்கு மீறி உட்கொண்டு விடுகின்றனர். இது ராஜசிக (ரஜோ குண) உணர்வையே உண்டு பண்ணும். வயிறு நிரம்ப உண்ணுவது சாத்வீகமாகாது, உணவு உட்கொள்ளு முன் வயிறு காலியாக இருப்பது போலவே உட்கொண்ட பின்னும் கூட காலியாயிருப்பது போன்ற உணர்வே இருத்தல் வேண்டும். இதுவே சாத்வீக உணவு முறை. வயிறு புடைக்கும் வரை உணவு உட்கொண்டு எழுந்திருக்கவே திணறிப் போகும் வகையில் புசித்தால் அது தம்மா குணத்தையே அதிகரிக்கும்.

(த. ச. சா. 1986. ஜன. ப. 16)

## பாத்திரம் சுத்தமில்லையானல் எல்லாச் சாதனையும் வீணே:

உதாரணமாக இட்லிக்காகச் சாம்பார் செய்வதாக வைத்துக் கொள்வோம். சாம்பாருக்கு வேண்டிய பதார்த்தங்கள் யாவும் சுத்தமானவையாக தரமுள்ளவையாகக் கவனத்துடன் சேர்த்து நல்ல முறையில் சாம்பாரைத் தயாரித்தும் அது சாப்பிட்டவுடன் குமட்டலை உண்டு பண்ணிவிட்டது. ஏனென்று ஆராய்ந்து பார்த்தால் சாம்பார் தயார் செய்த பாத்திரத்தில் ஈயமில்லை என்று தெரிந்தது. அதே போல் எவ்வளவு நல்ல பணிகள் செய்திடினும் அடிப்படை உள்ளத் தூய்மையில்லையெனில் அவை வீணாகி விடுகின்றன. தியானம் செய்கின்றீர்கள் ஜெபம் செய்கின்றீர்கள். நல்ல இராக தாளத்துடன் சீராகப் பஜனைப் பாடல்கள் பாடுகின்றீர்கள். வழிபாடுகள் செய்கின்றீர்கள். சாம்பாருக்குத் தேவையான பருப்பு, உப்பு, நீர், மிளகாய் இவையெல்லாம் போன்றவைகளாகக் கருதலாம். இவையெல்லாம் சுத்தமாக இருப்பினும் பாத்திரத்தில் 'களாய்' போன்று உள்ளத்தில் 'பிரேமை' இல்லாவிடில் எல்லாம் வீணே.

(த. ச. சா. 1986 டிசம். ப. 6)

## ஆனந்தத்திற்கு உள்ளத்தூய்மை வேண்டும்:

உடல் நலத்திற்கு உடலைத் தூய்மையாய் வைத்திருத்தல் எப்படி முக்கிய தேவையோ அப்படியே ஆனந்தத்திற்கு உள்ளத் தூய்மை தேவையாகும். செய்யும் பணி ஒவ்வொன்றிலும் தூய்மையைக் காத்தலில் கண்ணும் கருத்துமாயிருந்து தெய்வார்ப்பணமாகவே செய்வதால்தான் உள்ளத்தூய்மை அல்லது சித்தசுத்தி பெற இயலும். மனிதன் அகங்கார உணர்வினால் உந்தப்பட்டு ஆடம்பரத்தில் ஈடுபடுவதால் வாழ்க்கையையே வீணடிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பரமும் அகங்காரமும் மேலோங்கியிருக்கும் வரை வாழ்க்கையில் ஆனந்தமும் மகிழ்ச்சியும் தூரமாகவே இருந்துவரும்.

*(த. ச. சா. 1987 ஏப். ப. 1)*

**மூவிதத் தூய்மை:**

தெய்வத்திற்கு மிகுந்த திருப்தியளிக்கும் மூன்று விஷயங்கள் என்னவெனில் பொய்மை பேசாத நாவு, பிறருக்கு இன்னு செய்யாத உடல், பற்றுதலும் வெறுப்புமற்ற தூய்மையான மனம் என்பவையே. இவையே ''திரிகரண சுத்தி'' எனப்படும். எண்ணம், சொல், செயல் மூன்றும் நன்ருயிருத்தல் ஒன்ருயிருத்தலே இந்த மூவிதத் தூய்மையாகும். பிறருக்கு துன்பம் விளைவிப்பது பிறரைப்பற்றி நிந்தனை செய்வது, தீய உணர்வு கொள்வது, இவைகளைத் தவிர்க்கவேண்டும். வாய்மை தவருமல் நாவினைக் காக்கவேண்டுமெனில் மௌனவிரதம் மேற்கொள்வது சரியான வழியாகும்.

*(த. ச. சா. 1988 ஏப். ப. 11)*

# (26) யக்ஞம்

**உணவு உட்கொள்வதில் "யக்ஞம்":**

மந்திரம் யக்ஞம் இவற்ருல் உணவு புனிதமடைய வேண்டும் என்பது முதல்விதி. மந்திரம் என்பது மறைபொருளுள்ள சூத்திரம். அதனை உச்சரிக்கும்போது, பயனுள்ள சக்திகள் உருவாகி உணவாக உட்கொள்ளும் பொருளில் ஊடுருவி நிறையும். யக்ஞம், அதிகமதிப்புள்ள நிலையான ஒன்றினுக்காக மற்ருென்றினைத் துறப்பது, என்ற பொருளில் ''தியாகம்'' என்று மொழிபெயர்க்கப்படுகிறது. உணவு உட்கொள்கையில் யக்ஞத்தை வலியுறுத்துவதன் உள்நோக்கம், உணவில்லாதவர்களுக்கு ஒருபகுதியை அளிக்கவேண்டும், அப்போதுதான் அந்தத்தியாகம் மகிழ்ச்சியையும், ஆரோக்கியத்தையும் நல்கும் என்பதாகும். பகிர்ந்து கொள்ளாத உணவு திருட்டுச் சொத்தாக ஒதுக்கப்பட வேண்டும் என்று கீதை கூறுகிறது.

*(த. ச. சா. 87 ஜுன். ப. 16)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (27) யோகம்

## ஹடயோகம் முதலியன சாதனையாகாது:

''சாதனை'' தூய்மையானதாயிருத்தல் வேண்டும். ஆன்மீக சாதனையே சாத்வீக சாதனை என்பது. சிலர் ''ஹடயோகம்'' அனுஷ்டிக்கின்றனர். சிலர் குண்டலினி சக்தியை வளர்த்து அதனுல் பலனடைய முயலுகின்றனர். மற்றும் சிலர் தீயசக்திகளை உபாசனைசெய்து அதன்மூலம் பிறருக்கு தீங்கு விளைவிக்கின்றனர். இவை யாவும் ''சாதனை'' யாகாது. மனிதன் 'சித்' எனப்படுவான். அதாவது (Consiousness) உணர்வு நிலை. கடவுள் 'சத்' எனப்படுவார். அதாவது ''சாசுவதமான முழுமையான பொருள்'' (Eternal Absolute). இந்த 'சத்'தும் 'சித்'தும் கலந்தால் 'ஆனந்தம்' உண்டாகிறது. இதுவே 'சத்,சித் ஆனந்தம்' எனப்படுவது. இந்த சச்சிதானந்த நிலையை அடைய மேற்கொள்ளப்படும் சாதனை ஒன்றே உண்மையான சாதனை. இந்த 'சத்' என்பது எங்கே உள்ளது? இது தெய்வீகம் எனப்படுவது, எல்லோரிடமும் உள்ளது. ஆகவே ஒவ்வொருவரையும் கடவுளின் அம்சமாகவே கருதி ஒவ்வொருவருக்கும் தொண்டு செய்ய முன்வரவேண்டும். உங்களைச்சேர்ந்த நெருங்கிய உறவினர்களுடன் சாதாரணமாகப் பழகிவருவதில் எந்தத் தவறும் இல்லை. 'சாதனை' செய்யும்போது ஒன்றே பரம்பொருள், அதுவே எல்லாவற்றிலும் பரவியுள்ளது எனும் உண்மையை உணர்ந்து செய்திட வேண்டும். இந்தவகையில் அன்புணர்வைப் பெருக்க வேண்டும். இதைவிட உயர்ந்த சாதனை வேறொன்றும் இல்லை.

(த. ச. சா. 1986 ஜன. ப. 18)

## இராஜ யோகம் எது?:

ஸ்மிருதிகள் கூறுகின்ற இராஜயோகம் என்பது சமுதாய நலனைக் கருதிச் சமுதாய முன்னேற்றத்திற்கான செய்கைகளிலே ஈடுபடுவதே என்று கூறுகின்றன. இந்த விதமான 'தபஸ்' தான் ஜனகமஹாராஜா செய்து வந்தார். கடவுளின் வழிபாடாகவே எல்லாச் செய்கைகளையும் சமுதாய நலனுக்காகச் சுயநலநோக்கம் சிறிதுமின்றிச் செய்து வந்தார். இதுவே உண்மையான இராஜ யோகம். கடவுளைப் பக்தியுடன் துதித்து நித்திய கருமங்களை நீதி நெறிப்படி செய்துவருவதே இராஜயோகமென ஜனகர்நிரூபித்துக் காட்டினுர். வெளி உலக சுகங்கள் அநித்திய மென்ற உணர்வுடன் வெளியுலக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக உணர்விலேயே திளைத்துத் தனது உண்மையான ஸ்வரூபம் ஆன்மாவே என்ற உள்ளுணர்வுடன் பணிபுரிந்து வந்தார்.

(த. ச. சா. 88 செப். ப. 4)

## (28) சேவை

### சேவைப் பணிக்குத் தகுதியுள்ளவர் யார்?

அகங்காரம், ஆடம்பரம், அபிமானம் போன்ற உணர்வுகள் அதிகமாக உள்ளவர்கள் இந்தச் சேவைப் பணிக்குச் சிறிதும் லாயக்கற்றவர்கள். அகங்காரத்தினால் மனித உணர்வையே மதிக்கத் தவறி விடுகிறான் மனிதன். 'அபிமானம்' அதாவது பற்றுதலினால் தன்னுள் மிருக உணர்வை வளர்த்துக் கொள்கிறான். 'ஆடம்பர'த்தினால் மனிதன் தனது உண்மை நிலையை மறந்து போலியாக மாறிவிடுகிறான். அகங்காரமும் ஆடம்பரமும் ஒருவரிடம் மேலோங்கியிருக்கும்வரை அவருக்கு 'ஆத்ம விசுவாசம்' (தன்னம்பிக்கை) கிட்டாது, அப்படிப்பட்டவருக்கு எதிலும் நம்பிக்கை இருக்காது. தன்னிடமே தனக்கு நம்பிக்கையில்லாதவன் எப்படிப் பிறப்பொருட்களிடமோ பிறரிடமோ நம்பிக்கையை வளர்க்க முடியும்? தன்னிடமே நம்பிக்கையின்றிப் பிறரிடமும் நம்பிக்கையின்றி எப்படிச் சேவைப் பணி செய்ய இயலும்? ஆகவே, சேவையில் ஈடுபட முன் வருவோர் முதலில் அகங்கார உணர்வை அறவே ஒழித்துவிட வேண்டும். 'ஆடம்பரத்திற்குச் சமாதி கட்ட வேண்டும்' அதாவது ஆடம்பரத்திற்கே இடம் கொடுக்கலாகாது. 'அபிமானம்' எனும் 'பற்றுதலை' நீக்கிவிட வேண்டும். அகங்காரம் அழிந்தால்தான் பணிவுத்தன்மை உண்டாகும். இந்த 'வினய' மெனும் பணிவுத்தன்மை பெற்றால்தான் தொண்டுப்பணி செய்யத் தகுதி கிடைக்கிறது. ஒவ்வொருவரும் தனக்குள்ளிருக்கும் தெய்வீக சக்தியை உணர வேண்டும். அப்போதுதான் ஒற்றுமையுணர்வு உண்டாகும். வேற்றுமைக்கே இடமிருக்காது. இந்த 'ஏகாத்மபாவம்' அதாவது ஒற்றுமையுணர்வு பெற்றுள்ளோரே சேவைப் பணி செய்யத் தகுதியுள்ளவர்கள். இந்த உணர்வு இல்லாதவர்கள் இப்பணிக்கு அருகதையற்றவர்களே.

(த. ச. சா. 1986. டிசம். ப. 1, 2)

### சேவை ஆனந்தத்தையும் சாந்தியையும் அளிக்கும்:

ஆனந்தத்தை அனுபவிக்க விரும்புவீர்களானால், ஆசையை படிப்படியாக குறைத்துத் தெய்வபக்தியைப் பெருக்கி, சேவைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியில் ஈடுபடுங்கள். எப்போதும் சேவகராகவே இருக்க விரும்புங்கள். தலைவராக இருப்பது ஆனந்தம் அளிக்காது. அகங்காரம் தலை தூக்கிவிடும். பணி புரிவதிலேயே ஆனந்தம் உள்ளது. தலைவரென்பதே ஒரு அடிமை வாழ்க்கை எனலாம். ஆகவே அதற்காக ஆசைப்பட வேண்டாம். சமுதாயத்தில் அதிகமான உதவி தேவையுள்ள அடிமட்டத்தினருக்கும் ஏழை எளியவருக்கும் இயலாதவர்க்கும் சேவை செய்யுங்கள். திக்கற்றவர்களுக்குச் சேவை செய்வதே நாராயண சேவையாகக் கருதப்படவேண்டும், தெய்வத்தை இதயத்தில் நிலைக்கச் செய்து கரங்களினால் பிறருக்குத்தொண்டு செய்யுங்கள். இதுவே ஆனந்தமும் சாந்தியும் அடையும் இரகசியம்.

(ச. ச. சா. 1988. மார்ச். ப. 15)

## சேவையில் தூய்மை:

'சாத்வீக சேவை செய்தல்' சேவை செய்தலில் எது சாத்வீகமானது எது ராஜசிகமானது என்று தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். வெளியே சென்று கிராமங்களுக்குச் சாலை அமைத்தல், கிணறு தோண்டுதல், வீதிகளைச் சுத்தப்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுகிறீர்கள். இவைகளைச் சமூக சேவையாகவே செய்கிறீர்கள். ஆனால் நீங்கள் செய்யும் சேவை உண்மையில் சம்பந்தப்பட்டோருக்குத் திருப்தியையும் ஆனந்தத்தையும் தரவேண்டும். ''சமூகத் தொண்டு'' செய்யும் நோக்கத்துடன் மருத்துவ மனைக்குச் சென்று ஒரு நோயாளியைக் கண்டு உரையாடுகிறீர்கள். இது உண்மையில் தொண்டு, அதாவது சேவை என்று கூற முடியாது. நீங்கள் எவருக்குச் சேவை செய்ய விழைகிறீர்களோ அவரைக் கடவுளின் உருவமெனக் கருத வேண்டும். திக்கற்ற அனாதைகளுக்கும் கவனிப்பின்றிக் கைவிடப்பட்டுத் தவிப்போருக்கும் செய்யும் தொண்டு உண்மையில் கடவுளுக்குச் செய்யும் தொண்டேயாகும்.

(ச. ச, சா. 1986. ஜன. பக். 17)

## பணி செய்வதற்கு ஞானமே அடிப்படையாகும்:

''கர்மம்'' அதாவது, பணி செய்தலுக்கு ''ஞானம்'' அல்லது ''அறிவே'' அடிப்படையாகும். அறிவு பெறுதலுக்கும் ''கர்மம்'' செய்தல் அடிப்படையாகும். இவை இரண்டும் இணைந்தே சேவையாகப் பரிணமிக்கிறது. சித்த சுத்தியுடன் செய்யப்படும் நற்பணியே ''ஆத்மானந்த''த்தைத் தரவல்லது. செய்ய வேண்டிய கடமையைச் செய்தே தீரவேண்டும். நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்துடனே நல்ல முறையிலே பணி செய்தல் வேண்டும். ''இந்தப் பணி'' என்னுல் செய்யப்பட்டது, என்ற அகங்கார உணர்வு கூடாது. இந்தப் பணியினுல் வரும் லாபத்தை அல்லது நற்பயனை நானே பெற வேண்டும் என்று நினைப்பதும் கூடாது. இந்தச் சுயநல உணர்வு மனிதனைப் பற்றுதலில் பிணைத்து விடும்.

(த. ச. சா. 1985, டிச. ப. 15)

## எண்ணத்திலும், செயலிலும் தூய்மையைக்காண ஒரேவழி சேவையே:

''நான் செய்கிறேன்'' என்ற உணர்வை அகற்றி, சுயநல நோக்கத்தை அறவே நீக்கி, ஒருநிலைப்பட்ட மனதுடன் சமுதாய சேவையில் ஈடுபட்டால்தான் தேகியான கடவுளை உணர இயலும். இதுவே சாக்ஷாத்காரம் எனப்படும். மனதில் எள்ளளவும் விருப்பு வெறுப்பிற்கு இடம்கொடுக்கலாகாது. எண்ணத்திலும் செயலிலும் தூய்மை வேண்டும். இதற்கு ஒரேவழி 'சேவை' செய்வது தான்.

(த. ச. சா, 1985 டிச. ப. 18)

## சேவையே ஆத்ம வித்தை:

கர்மயோகத்தின் போதனையின் மற்ளுெரு அம்சம் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே. அதாவது, ஒவ்வொரு மனிதருக்கும் உருவத்தில் வேறுபாடு இருப்பினும் எல்லோருக்குள்ளும் இருக்கும் தெய்வத்துவம் ஒன்றே என்பதைக் காணவேண்டும். சேவையின் மூலமே இதை நன்ருக உணர இயலும். இதைவிட உயர்ந்த சாதனை எதுவுமில்லை. ஆத்யாத்மிக மார்க்கம் வேறு, சேவைமார்க்கம் வேறு, வித்யா மார்க்கம் வேறு என்று பலர் தவருன கருத்துக் கொண்டுள்ளனர். இவை மூன்றும் ஒன்றே எனக் கருதப்படவேண்டும். சேவையே 'ஆத்ம வித்தை'. சேவையின் மூலமே தெய்வானுக்கிரகம் கிடைக்கும். சேவகராயிருந்து தான் எஜமானராகலாம். ''கிங்கர'ரல்லாமல் 'சங்கர'ராக முடியாது'' என்பது பழமொழி. அதேபோல் முதலில் மனிதனுகிப் பிறகுதான் 'தெய்வ'மாகலாம். மனிதருக்குச் சேவை பிரதானமானது. அதிலும்''சமாஜசேவை'' அதாவது சமுதாய சேவையே உயர்ந்த சேவை. சேவையே வாழ்க்கையின் சாரம். அதுவே அளவில்லா ஆனந்தத்தை அளிக்கவல்லது, 'விசுவ பிரேமை' என்பது உடலுக்கு சத்துணவுபோல் உள்ளத்திற்கு ஆன்மீகபலம் அளிப்பதாகும். அதுவே உள்ளத்தில் உவகையையும் அளவிலா ஆனந்தத்தையும் அளிக்க வல்லது.

(த. ச. சா. 1985 டிச. ப. 16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்களைப் பிறர் மதிக்க வேண்டுமென்றால் பிறரை நீங்கள் முதலில் மதிக்க வேண்டும்:**

எவ்வளவு சிறப்பாகச் சமூகசேவை செய்து வந்தாலும், ஆடம்பரத்திற்கோ, அஹங்காரத்திற்கோ சிறிதளவு இடம் கொடுத்தால் உங்கள் செய்கைகள் யாவும் வியர்த்தமாகிவிடும். நீங்கள் பிறருக்குச் சேவை செய்யும்போது பகவானுக்குச் சேவை செய்வதாகவே கருத்தில் கொள்ளவேண்டும். மிகுந்த பணிவுடனும், பக்தியுடனும் சேவை செய்திட வேண்டும். தொண்டு செய்யாத வாழ்க்கை உபயோகமற்றதே. மனித வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேற அன்புடன் பிறர்க்குப் பணி செய்து அதையே இறைவனுக்கு அர்ப்பணமாக்கி மனநிறைவு பெறவேண்டும். தனக்கு ஏதோ ஒரு உபாதை நேரும் போது பிறர் உதவ மாட்டார்களா என்று ஏங்குவதுபோல் யாரேனும் அவதிக்குட்பட்டிருந்தால் நீங்களே விரைந்து சென்று தாமதமின்றி தேவையான உதவியளிக்க வேண்டும். உங்களைப் பிறர் மதிக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், முதலில் நீங்கள் பிறரை மதிக்க முன்வரவேண்டும். பிறரைத் தூஷணை செய்து கொண்டும் நிந்தித்துப்பேசிக்கொண்டு மிருந்தால், பிறரிடமிருந்து நீங்கள் எப்படி மரியாதையை எதிர்பார்க்க முடியும்? பிறர் உங்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறீர்களோ அப்படி முதலில் நீங்கள் பிறரிடம் நடந்து கொள்ள வேண்டும்.

*(த. ச. சா. 1986 மார்ச். ப. 12)*

**யான் அனுபவித்த இன்பத்தை பிறரும் அனுபவிக்கச் செய்வதே மனிதத்துவம்:**

பகவத்கீதையின் சாரமான இந்த பிரம்ம தத்துவத்தை நீங்கள் அனுபவிப்பதுடன் பிறரும் அனுபவிக்கும்படி தூண்ட வேண்டும். சுயநலத்தையே முக்கியமாகக் கருதாமல் 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கூற்றுப்படி தாமனுபவிப்பதைப் பிறரும் அனுபவிக்கும்படி செய்வதே மனிதத்துவம்.

*(த. ச. சா. 1988 யூலை. ப. 10)*

**இயற்கை வளங்கள் பொது உடைமையே:**

இயற்கையின் வளங்கள் உலகில் எல்லோருக்கும் பொதுவானதேயன்றி தனியொருவர் இதற்கு உடைமைகொண்டாட முடியாது. மழை பொழிகிறது, ஆறுகளில் நீர் பாய்கிறது, சூரியஒளி எங்கும் பரவுகிறது, பயிர்கள் செழித்து விளைச்சல் கொடுக்கச் செய்கிறது, நிலவு குளிர்ச்சியை அளிக்கிறது. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ தனிநபருக்கு மட்டுமல்ல. ஒவ்வொருமனிதருக்கும் இதை அனுபவிக்க உரிமை உண்டு. ஒவ்வொருவரும் இயற்கையின் எழிலை அனுபவித்து ஆனந்திக்க அருகதை உள்ளவரே. இது போல் பகவானுடைய அருளையும் எல்லோரும் பெற்று ஆனந்திக்க உரிமை உண்டு.

(த. ச. சா. 1985 டிச ப. 16)

# (29) தியாகம்

## தியாகம் - 'பரோபகாரம் இதம் சரீரம்':

கூடியவரையில் ''தியாகம் செய்ய எல்லோரும் முன்வரவேண்டும்''. ''பரோபகாரார்த்தம் இதம் சரீரம்'' என்பது சான்றோர் வாக்கு. பிறருக்கு உதவிபுரியவே இந்தச் சரீரம் கொடுக்கப்பட்டுள்ளது. 'பரோபகாராய பலம் வஹந்திவிருக்ஷ, பிறருக்கு உதவி புரியவே மரங்கள் பழங்களை அளிக்கின்றன. பசுக்களும் பிறருக்கு பால் கொடுக்கின்றன. பரோபகாரமாகவே நதிகளும் பிறர் தாகம் தீர்த்துக்கொள்ளவுதவுகின்றன. இப்படிச் செடி கொடிகளும், நதிகளும் பசுமாடுகளும் தியாகவுணர்வுடன் பிறருக்கே உதவி புரிகின்றபோது, மனிதன் மட்டும் அப்படிச் செய்யாதது வருந்தத்தக்கதே. இத்தேகம் ஒரு குப்பைத்தொட்டி போன்றதே. இது எந்த நொடியில் அழிந்துவிடுமென்று கூறமுடியாது. ஆகவே, நாளையைப்பற்றியே கவலைப்படுவதில் அர்த்தமில்லை. பின்னோக்கி கடந்தவற்றைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருப்பதுவீணே; தற்காலத்தில் நிகழும் விஷயங்களிலேயே கவனத்தைச் செலுத்த வேண்டும். கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டு காலத்தைக் கவலையுடன் கழிக்காமல் அவ்வப்போது எதிர்நோக்கும் பிரச்சனைகளைச் சந்தித்துச் செயலாற்றுபவரே 'தன்யவான்' என்று சான்றோர்கள் கூறுவர். இதுவே நமது பாரத தேசத்தின் பரம்பரையான பண்பாட்டுச் சிறப்பு. ஒருவர் மனதையும் நோகச் செய்யாமல் எவருக்கும் எண்ணத்தால்கூடத் தீங்கு நினைக்காமல் செயலாற்றும் யுக்தியை நீங்கள் கடைப் பிடிக்க வேண்டும். யுக்தியும் ஒரு யோகமே. இந்த யுக்தி என்பதே அறிவுடன் செயற்படுதல். உங்களுடைய பணத்தையே நீங்கள் **Deposit** செய்திருப்பினும், வங்கியில் நீங்கள் கேட்டவுடன் பணம் தரமாட்டார்கள். செக் (காசோலை) ஒன்றைக் கொடுத்தால்தான் பணம் கிடைக்கும். கடைக்குப் போனால் பணம் கொடுத்தால்தான் ஒரு சிறுபொருள் வாங்கமுடியும். இப்படியே உலக சம்பந்தமான சின்னப் பொருட்களைப் பெறுவதற்கே தியாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுகிறது. அனந்தமான, எங்கும் வியாபித்துள்ள சர்வ வல்லமை பொருந்திய பரம்பொருளான பகவானின் அனுக்கிரஹத்தைப் பெறத் தியாகம் செய்ய வேண்டாமா? அமைதியின்மையைத் தியாகம் செய்தால் சாந்தி அல்லது அமைதி கிட்டும். அநேகத்துவம் என்ற பன்மை உணர்வை தியாகம் செய்தால்தான் ஏகத்துவம் என்ற ஒற்றுமை உணர்வு உண்டாகும். மனிதத்துவமே தியாகத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தத் தியாகம் எனும் சிறந்தபண்பு மனிதர்களிடமின்றி வேறு எங்கும் காண முடியாது.

(த. ச. சா. 1988 யூலை. ப. 6)

## தியாகம் தீய குணங்களை விடுதலே:

'தியாகம்' என்பது தீய குணங்களை விட்டொழித்தலே. இப்படிப்பட்ட தியாகம் யோகத்துக்கு ஈடாகும். தீய குணங்களை அறவே ஒழித்து விட்டால் உள்ளத் தூய்மை ஏற்பட்டு நல்ல எண்ணங்கள் தோன்றி நல்ல செய்கைகள் புரிய வழிவகுக்கும். எல்லாமே ஈஸ்வரார்ப்பணம் என்று தெய்வத்திற்குக் காணிக்கையாகச் செய்யப்படும் மனோபாவம் வளர வேண்டும்.

(த. ச. சா. 1987 மாச். ப. 5)

## தியாகம் அவசியம்:

தியாகத்தினுல்தான் மோக்ஷம் கிட்டவாய்ப்புண்டு என்று வேதம் வலியுறுத்துகிறது. இந்தப் பொருட்களிடம் பற்றுதல் கொள்வதை விடுத்து, பிறருக்கு அளித்து அவர்களுடைய ஆனந்தத்தில் தானும் திளைப்பதே சிறந்ததென்பதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். பெறுவது எவ்வளவு அவசியமாகக் கருதப்படுகிறதோ அவ்வளவு அவசியம் பிறருக்குக் கொடுப்பதுமென்பதை மனிதன் உணரவேண்டும். நாம் உட்கொள்ளும் உணவு ஜீரணமாகிக் கழிபொருள் வெளிவராவிடில் வயிறு கெட்டுவிடும், உட்கொள்ளும் காற்று வெளிவராவிடில் உடம்பு கெட்டுவிடுமல்லவா? இரத்தம் ஓட்டமின்றி ஒரே இடத்தில் தேங்கினுல் கட்டி வந்து விடுகிறது. ஆகையால் 'தியாகம்' என்பது அத்தியாவசியமாகும். இதனுல் இன்பம் வரும். போகத்தினுல் 'ரோக'மே வந்திடும்.

(த. ச. சா. 1986, யூன். ப. 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறருக்கு விடுதலை காட்டும் வழியே சிறந்த தியாகம்:**

ஜபமும் தியானமும் மட்டும் செய்து கொண்டிருப்பதால் தனது சுய முன்னேற்றத்திற்கே வழிகோலுவதாகும். இதுவும் ஒருவகையில் சுயநலமே. பிறருக்கு விடுதலை அடையும் வழிகாட்டும் பணி இதைவிடச் சிறந்ததாகும். அதுவே சிறந்த தியாகம்; அதுவே யோகமெனப்படும். ஆகவே நீங்கள் பிறருக்குச் சேவை செய்து பிரேமை தத்துவத்தின் மகிமையைப் பிறரும் உணரச் செய்தலே செய்ய வேண்டிய முக்கிய பணியாகும். தியாகத்தினால்தான் மோக்ஷம்கிட்டுமென்பது புனித வாக்கு. ஆத்ம யோகம் என்பது இதுவே.

*(த. ச. சா. 1987 மார்ச். ப. 12)*

**பரோபகாரம்:**

'பரோபகாரார்த்தம் இதம் சரீரம்' என்றபடி ஆண்டவனால் அளிக்கப்பட்ட இந்தச்சரீரம் பிறருக்கு உதவுவதற்காகவேயாகும். அப்படிப்பட்ட நெறியைப் பின்பற்றி வாழ்பவர்களின் வாழ்க்கையில் தெய்வீகமணம் வீசிக்கொண்டிருக்கும்.

*(த. ச. சா. 1988 ஓகஸ்ட். ப. 1)*

**உண்மையான தியாகம்:**

தியாகம் என்பது மனித வாழ்க்கையில் முக்கியமான அங்கம் வகிப்பது. என்றோ ஒருநாள் உலக உடைமைகளை மனிதன் விட்டே ஆக வேண்டும். அல்லது அவைகள் அவனைவிட்டு விடுமென்பது திண்ணம். எவருக்கு இந்த 'தியாக' மனப்பான்மை இல்லையோ அவரை உலக வாழ்க்கையே 'தியாகம்' செய்யும் கட்டாய நிலைக்குக் கொண்டுவந்துவிடும். இதை ஒருவரும் தவிர்க்க முடியாது.

எதைத் தியாகம் செய்தல் வேண்டும்? வீடுவாசல், வாகனம், மனைவி மக்கள் இவைகளையா? அல்லது வேறு உடைமைகள் மற்றும் சுற்றத்தாரையும் நண்பர்களையுமா? இல்லை! இல்லை! இல்லை! இவைகளைக்கூட ஒருவர் மன உறுதியுடன் எளிதில் தியாகம் செய்து விடலாம். ஆனால் இது அல்ல உண்மைத் தியாகம் என்பது! அது ஒருவகையான போகத்தையோ ரோகத்தையோ தான் குறிக்கும். உண்மையான தியாகம் ஒருவர் தனது துர்க்குணங்களான காமம், குரோதம் லோபம் இவைகளை விட்டு விடுதலேயாகும்.

*(த. ச. சா. 88 செப். ப. 9)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (30) ஆனந்தம்

## உலக ஆனந்தமும் பிரம்மானந்தமும்:

மனிதன் தனது உலக சம்பந்தமான அற்ப சுக போகங்களுக்காக அயராது பாடுபட்டு வருகிறான். ஆனால் அவன் அனுபவிக்கும் இன்பமும் மகிழ்ச்சியும் ஆனந்தத்தின் பிரதிபலிப்பேயன்றி இவை நிலையான ஆனந்தத்தைத் தருபவையல்ல. இந்தப் பிரதிபிம்ப ஆனந்தம் உண்மையான பேரானந்தத்திற்கும் பிரம்மானந்தத்திற்கும் ஈடாகாது. நித்தியானந்தம், பிரம்மானந்தம் என்ற உண்மையான நிலையான ஆனந்தத்தையே நாடவேண்டும். இந்த உலக விஷயத்தினால் பெறும் ஆனந்தத்தினால் ஆசைகள் அதிகரிக்குமேயன்றிக் குறையா. இவைகள் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே சென்று கடைசியில் மனிதனை மரணத்திற்கே இட்டுச் செல்கின்றன

(த. ச. சா. 1987. மாச். ப. 1)

## உள்ளும் புறமும் ஆனந்தமானவன் ஆனந்தத்தைத் தேடுகிறான்:

உண்மையில் மனிதன் ஆனந்தஸ்வரூபனே. அவன் கோருவதும் ஆனந்தமே சௌக்கியத்துடன் கூடிய நிதியே மனிதனின் இயல்பு. 'சௌக்யபூதி' அதாவது சுகானந்த சாகரமே மனிதனின் உட்பொருள், உள்ளும் புறமும் ஆனந்தமயமான மனிதன் ஆனந்தத்தை நாடுகிறானென்றால் இது எவ்வளவு மதியீனமானது? ஆனந்தம் தனக்குள்ளே இருப்பினும் அற்ப சுகத்தை அளிக்கும் தேகமே தானென்று நினைத்துக் கொண்டுள்ளதால் இப்படி அவதிக்குள்ளாகிறான். ஆனந்தக் களிப்பை இழந்துவிடுகிறான். மனிதனின் குறிக்கோள் தெய்வத்திடம் ஒன்றிவிடுதலேயன்றி மரிப்பதல்ல.

(த. ச, சா. 1987. மாச். ப.2)

## ஆனந்தம் நமக்குள்ளே உள்ளது:

இந்த ஆத்மானந்தத்தின் அம்சமாக நாம் இருப்பினும் உள்நோக்கமின்றி வெளியிலே இதைத் தேடி அலைகிறோம். கஸ்தூரி மான் கானகமெங்கும் சுற்றித் திரிந்து அந்தக் கஸ்தூரி வாசனை எங்கிருந்து வருகிறது என்று தேடிக் கொண்டிருந்தது. களைப்பு மிகுதியால் ஒரு மரத்தினடியில் படுத்து உறங்கியது. அது விழித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கொண்டதும் இந்தக் கஸ்தூரி வாசனை அங்கும் இருப்பதை உணர்ந்து இது எங்கே இருந்து வருகிறது என்று தேட அது கடைசியில் தன்னிடமே இருப்பதை உணர்ந்தது. இதேபோல்தான் மனிதன் தன்னிடமே உள்ள ஆத்மானந்தத்தை வெளியே தேடிக் கொண்டு காலத்தை வீணடிக்கிறான்.

(த. ச. சா– 1987. மார்ச். ப. 4)

## உங்கள் ஆனந்தத்திற்காகக் கடவுளுக்கு ஒரு ரூபத்தையும் நாமத்தையும் ஆசிரயிக்கலாம்:

அண்ட சராசரங்கள் யாவையும் ஆட்டிப் படைக்கும் ஆண்டவனுக்கு நீங்கள் கட்டும் கோவில்கள் போதுமா? நூறு சூரியனுக்கு நிகரான ஒளி வீசும் தெய்வத்துக்கு ஒளி விளக்கு வைக்க முடியுமா? அயனும் ஹரனும் முயன்றும் காண முடியாத அதி சௌந்தர்ய ரூபமுடையவனின் ரூபத்தை யாரால் காணமுடியும்? எல்லாவற்றிலும் நீக்கமற இருப்பவனுக்கு எவரால் குறிப்பிட்ட பெயரிட முடியும்? பிரபஞ்சத்தையே தனது வயிற்றில் அடக்கிய வருக்கு எவரால் உணவு படைக்க முடியும்? நீங்கள் ஏதோ உங்களுடைய ஆனந்தத்திற்காக ஒரு ரூபத்தையும் நாமத்தையும் ஆசிரயிக்கலாம். ஆனால் அவருக்கு எண்ணற்ற உருவங்களும் பெயர்களும் இருக்கின்றன.

(த. ச. சா. 1986. நவம். ப. 5)

## மற்ற உயிரினங்களுக்கு இல்லாதது சிரிக்கும் தன்மை:

மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஒரு ஆற்றல் மனிதனிடம் இருக்கிறது. அதுவே சிரிக்கும் தன்மை. விலங்கினங்களோ, பறவைகளோ, காட்டுமிராண்டிகளோ மனிதர்களைப் போல் சிரிக்க முடியாது. இதற்குக் காரணம் என்னவெனில் மனிதப் பிறவியில் தான் பேரானந்த நிலையை அடையும் தாகம் உள்ளது. இப்படிப்பட்டதொரு சிறப்பாற்றல் படைத்த மனிதன், பேரானந்தத்தையடையும் பிறப்புரிமை பெற்ற மனிதன், ஏன் மகிழ்ச்சியாகக் காணப்படவில்லை, என்ற வினா எழலாம். மனிதனின் செயல்கள் இயல்புக்கு விரோதமாக இருத்தலே இதற்குக் காரணமெனலாம். நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும் அதனால் உங்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்பட வேண்டும். இதைச் செய்வதிலேயே உங்களுக்கு உற்சாகமிருக்க வேண்டும்.

(த. ச சா. 1986. செப். ப. 16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (31) நிகழ் காலம்

## நிகழ் காலமே ஆதாரம்:

நிகழ் காலத்தை மறந்து விடுவதே இன்றைய கொந்தளிப்புகளுக்கு மூலகாரணம். இந்த நிகழ் காலம் முக்காலங்களுக்கும் பாத்தியதை யுடையதாகும். கழிந்த காலத்தின் பரிணாமம் நிகழ் காலத்தில் இருக்கிறது. வரப்போகும் எதிர்காலம்கூட நிகழ்காலத்தின் மீதே ஆதாரப்பட்டிருக்கிறது. நீங்கள் இப்பொழுது சிறந்தவர்களாக இருந்தால், எதிர்காலத்தில் உங்களுடைய வாழ்க்கை மேன்மையானதாகவும், புதுமையானதாகவும் இருக்கும். இன்று தவறுகளைச் செய்தால் வருங்காலத்தில் அதேவழியை பின்பற்ற வேண்டியதாக இருக்கும். ஆகவே, எந்த வேலையைச் செய்தாலும் இதய பூர்வமாகச் செய்தல் வேண்டும். நிகழ்காலத்தில் கடமைகளைப் பொறுப்போடு செயலாற்றக் கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும். கடமையே கடவுள்! வேலையே வழிபாடு! இவ்விரண்டிற்கும் நமது வாழ்க்கையை, நமது கல்விகளை அர்ப்பணம் செய்தல் வேண்டும்.

*(த. ச. சா. 1988. மே. ப. 14)*

## நிகழ் காலம் முக்கியமானது:

வாழ்க்கையில் தெரிந்தோ, தெரியாமலோ தவறுகள் பல செய்து விடுகிறோம். அவைகளை மறந்துவிட வேண்டும். நிகழ் காலத்தையே அனுசரிக்க வேண்டும். இது சாதாரண **Present** அல்ல **Omini Present**. எங்கும் நிறைந்துள்ள இறைவனைப் பற்றிய நினைவிலேயே திளைக்க வேண்டும். கடந்த காலத்தில் செய்த கர்மங்களின் பயனை நிகழ் காலத்தில் அனுபவிக்கிறோம். இப்போது செய்யும் கருமங்களின் பலனை வருங்காலத்தில் அனுபவிக்க நேரும். ஆகவே இந்த நிகழ்காலம் மிகவும் முக்கியமானது.

*(த. ச. சா. 1988. செப். ப. 5)*

## நிகழ்காலத்தையே பிரயோசனப்படுத்துங்கள்:

இளைய சமுதாயம் வருங்காலத்தைப் பற்றிய கலக்கமும் முதியோர்கள் கடந்த காலத்தைப் பற்றிய கலக்கமும் கொண்டுள்ளனர். நிகழ்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை. இதுவே உலகில் அமைதியின்மைக்கு முக்கிய காரணமாகும். கடந்த காலத்தைப் பற்றியோ வருங்காலத்தைப் பற்றியோ சிந்திப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிட்டு இப்போது தற்காலத்தை எப்படி நல்ல முறையில் கழிக்கலாமெனச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் நேரத்தைப் புனிதமான வழியில் பயன் படுத்தும் முயற்சியிலேயே ஈடுபடுதல் வேண்டும். இந்த நிகழ் காலத்தைச் சரியான முறையில் கழிப்பதை தலையாய கடமையாகக் கொண்டு இந்தப் பொன்னான வாய்ப்பை நழுவ விடாமல் சேவையின் மூலம் இறைவனைக் காணும் முயற்சியில் ஈடுபடுங்கள். கடந்த காலத்தில் செய்ததின் பயனை அனுபவிப்பது தற்காலத்திலே, தற்காலத்தில் செய்ததின் பயனை அனுபவிக்கப் போவது வருங் காலத்திலே. ஆகவே கடந்த காலம், எதிர்காலம் இரண்டிற்கும் இணைப்பாயமைவது நிகழ்காலம்! இதை நல்ல வகையில் பயன் படுத்துவது மிகவும் முக்கியமானது.

(த. ச. சா. 1985. டிச. ப. 20)

**காலதேவனின் வாள் தொங்கிக் கொண்டிருக்கிறது:**

வாழ்க்கையின் முதன்மையான இலட்சியத்தை மறந்து, மனிதர்கள் தம் நேரத்தை வீணடிக்கிறார்கள். காலம் மிகவும் அருமையானது. ஒவ்வொரு தலைக்கு மேலும் கால தேவதையின் வாள் தொங்கிக் கொண்டிருக்கிறது. உடைந்த மண் பாண்டத்தின் வழி ஒழுகும் நீர் போலவும், பெரும் பனிக்கட்டி உருகி வரும் நீர் போலவும், வாழ்க்கையின் அளவு வேகமாகக் குறைந்து கொண்டே வருகிறது. தமது வாழ்க்கையின் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு முன்னரே சாவு பலரை எதிர் கொள்கிறது.

(த. ச. சா. 1987. ஜூன். ப. 3)

# (32) உருவ வேற்றுமை

**பேதங்கள் காண்பவன் அந்தகன்:**

அநேகத்துவத்தில் ஏகத்துவம் கண்டு அனுபவிக்க இயலாதவன்தான் அந்தகன் எனப்பட வேண்டும். தனதல்லாததை தனதாகவே பாவித்து அனுபவிப்பவன் அந்தகன். தனது உண்மை நிலையை அறியாமல் இந்தத் தேகமேதான் தனது உண்மை ஸ்வரூபமென்று கருதிவாழ்பவன் அந்தகன். எவன் வாழ்க்கையில் விருப்பு, வெறுப்பு, உணர்வுகளை வளர்த்துக் கொள்கிறானோ அவனே அந்தகன். மெய்ப்பொருள் ஒன்றே என்பதை உணராமல் எல்லாவற்றிலும் பேதங்களைக் காண்பதே இந்தக் குருட்டுத் தன்மைக்கு மூலகாரணம். கண்ணிருந்தும் அருமையான தெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகத்தைக் காணாவிடில் அதனால் என்ன பயன்? செவிகள் இருந்தும் இனிமையான வீணாகானத்தைக் கேட்டு அனுபவிக்காவிடில் என்ன பயன்? கண்பார்வை சக்தி பெற்றிருந்தும் கூட எல்லாவற்றையும் பேதங்களுடனே பார்க்கிறான். கண்ணினால் காண்பது யாவும் அநித்யமான அழியக்கூடிய பொருள்களே. அழியாதது, நிலையானது, என்றும் மாறாதது மெய்ப்பொருளான தெய்வம் ஒன்றே. இந்தச் சத்தியத்தை உணர்ந்தால் எந்த விதமான கலக்கத்திற்கும் இடமில்லை. பார்க்கும் பொருள்யாவும் பரம்பொருளின் வடிவமே எனில், எனது, உனது என்று பாகுபடுத்திக்கூற இடமேது. இது தவறான கருத்தேயல்லவா? தனது, மற்றவருடையது என்ற வேறுபாட்டுணர்வே எல்லாவிதமான துக்கங்களுக்கும் மூலகாரணம்.

(த. ச. சா. 1988 மார்ச். ப. 10)

### தான் வேறு தெய்வம் வேறு என்று எண்ணுபவரிடத்துத்தான் வேற்றுமை உணர்வு வளர்ந்திருக்கும்:

'ஈச்வர; ஸர்வ பூதானாம்' எல்லா இடங்களிலும் எல்லா உயிர்களிலும் ஈசுவரன் உளான் என்று போதிக்கும் கீதையைப் படித்தபின் வேறு இடத்தில் ஈசுவரனை நாடிச் செல்வது ஏன்? உங்கள் இதயத்தையே பிருந்தாவனமாகவும் அதில் உறையும் ஆத்மாவே கிருஷ்ணனாகவும் உங்கள் எண்ணங்களே கோபிகைகளாகவும் கருதி வழிபடுவதே உண்மையான கீதையைப் பின்பற்றும் வழியாகும். ஒவ்வொருவர் இதயத்திலும் இறைவன் வீற்றிருக்கிறான் என்று பிறருக்குப் போதிப்பவர் தம்மைப் பாதிக்கும் விஷயம் ஏதாவது வரும்போது மட்டும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார். தனக்கொரு நீதி பிறருக்கொரு நீதி என்ற மனோபாவம் வேற்றுமையுணர்வை வளர்க்கிறது. தான் வேறு தெய்வம் வேறு என்று கருதும் மனிதரிடத்தில் தான் இம்மாதிரி வேற்றுமையுணர்வு நிறைந்திருக்கும்.

(த. ச. சா. 1986 டிசம். ப. 13)

## (33) சத்யம்

### சத்ய தர்ம உருவான இறைவனை சத்ய தர்மத்தாலேயே காண முடியும்:

உங்கள் உள்ளங்களில் இருந்து சாதி, மத, பேத உணர்வுகளை அடியோடு அகற்றிவிடுங்கள். தெய்வத்தின் மீது நம்பிக்கையை ஆழமாகப் பதியவைக்க முயலுங்கள். அணுசக்தியெனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையற்ற தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள், பற்றற்ற தன்மையை வளர்த்துப் பேரானந்த நிலையை அடைய முயலுங்கள். இவைகளே மூன்று குணங்களையும் கடந்து அப்பாற்பட்ட நிலையை அடையும் வழிகளாகும். எப்படி சூரியனையும், சந்திரனையும் அவர்களது ஒளியின் உதவியாலேயே காண்கிறோமோ எப்படி ஒரு விளக்கைக் கூட அதன் ஒளியினாலேயே காண்கிறோமோ அப்படியே சத்தியத்தின் உருவானதும் தர்மத்தின் உருவானதுமான தெய்வத்தை சத்தியம், தர்மம் இவைகளினாலேயே காண இயலும். ஆகவே சத்தியம், தர்மம், பிரேமை இவைகளின் முக்கியத்துவத்தை மனதில் உறுதியாகக் கொண்டு சுயநல நோக்கமற்ற சேவையை பிறருக்குச் செய்வதால் உங்கள் வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொள்ளுங்கள்.

(த. ச. சா. 1988 மார்ச். ப. 8)

# (34) அஞ்ஞானம்

**மாயை என்றால் என்ன?:**

மாயை என்றால் என்ன? உண்மையல்ல என்பதே பொருள். அதாவது, இல்லாமல் இருக்கும் ஒன்று இருப்பதுபோல் காணப் படுவதே மாயை. உண்மையாக இருப்பதை இல்லாதது போலும், இல்லாததை இருப்பது போலும் உணர வைப்பது இந்த மாயையின் விளைவே. இதையே 'அக்ஞானம்' அறியாமை என்றும் குறிப்பிடுவர். அக்ஞானம் என்பது உண்மையை உங்களிடமிருந்து மறைத்து இல்லாததை இருப்பதாகக் கருதச் செய்கிறது. பொய்யை உண்மையாகத் தோற்றுவிக்கிறது.

(த. ச. சா. 88 செப். ப. 11)

**அநித்தியம் - பொருள்:**

கர்வங்களினால் மனிதன் தன்னுடைய உண்மை நிலையை மறந்து விடுகிறான். ஆத்ம பலத்தில் நம்பிக்கை இழந்து விடுகிறான். ஒரு சிறிய பறவை கூடத்தான் வீற்றிருக்கும் கிளை ஆடினால் பயப்படுவதில்லை. ஏனென்றால் ஏதாவது நேர்ந்தால் பறந்துவிடலாம் என்ற தன் இறக்கைகள் மீதுள்ள நம்பிக்கையே அதற்குத் தைரியமளிக்கிறது. ஆனால் மனிதன் மற்றப் பொருட்கள் மீது ஆசையை வளர்த்துக்கொண்டு தனது ஆத்ம பலத்தில் நம்பிக்கை இழந்திருக்கிறான். மனிதனின் பீதிக்கு இதுவே காரணம். ஒரு மரப்பொந்தில் வசிக்கும் பறவை, ஏதோ ஒரு விபத்து நேர்ந்தால் பறந்து சென்று விடுகிறது. ஆனால் மனிதனுடைய நிலை என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு சேதமடைந்தால் வெளியில் வந்து கூக்குரலிடுகிருன். ''என் உடைமைகள், துணிமணிகள், பீரோக்கள், எல்லாம் போய்விட்டனவே'' என்று கூப்பாடுபோட்டுக்கதறுகிருன். ஆனல் இவன் இறக்கும்போது இவனுக்காக யார் கூக்குரலிடுவார்கள்? அவன் உடலை வீட்டுக்குள் கூட வைக்க மாட்டார்கள்! பாங்கில் உள்ள பணம் அவன் கூட வராது, பிடி மண்கூட வராது. ('காதற்ற ஊசியும் வராது கடைவழிக்கே' என்ற பட்டினத்தாரின் வரிகளை இங்கே நினைவு கூரலாம்.) தனக்கு இவை எல்லாம் சொந்த மென்று மனிதன் நினைத்திருக்கிருன். இவை உண்மையில் அவனுடைய உடைமைகளானுல் அவன் கூடவே வரவேண்டுமல்லவா? ஆகவே நமக்குச் சொந்தமில்லாததைப்பற்றிச் சொந்தமெனத் தவருன கருத்தில் மயங்கி இருக்கிருேம்! அனாவசியமாகக் கவலைப் படுகிருேம்! வேதம் இவைகளை 'அநித்தியம்' 'அசுகம்' 'நிலையற்றவை – சுகமளிக்கும் தன்மையற்றவை' என்று குறிப்பிடுகிறது.

(த. ச. சா 1986 மே. ப. 4)

## நிலையில்லாத சிற்றின்பத்திற்குக் கடவுளை நாடுவது சரியல்ல:

உங்களது சிறிய கோரிக்கைகளுக்கும் உலக சம்பந்தமான நிலையில்லாத சிற்றின்ப சுகங்களுக்குமாகக் கடவுளை நாடுவது சரியல்ல. தெய்வத்துவம் பெறுவதற்கே தெய்வத்தை வழிபட வேண்டும். உங்களது மற்றக் கோரிக்கைகளைப் பற்றிய எண்ணங்களை அறவேவிட்டுவிட வேண்டும். பிரேமையே தெய்வம். தெய்வமே பிரேமைமயம். ஆகவே பிரேமைக்காகவே தெய்வப் பிரேமையை வளர்த்துக் கொள்ளுங்கள். இதுவே உண்மையான பக்தியாகும்.

(த. ச. சா. 1986 செப். ப. 9)

## துவைதம் துக்கம்:

இன்று மனிதன் 'துவைதம்' எனும் இரட்டை மனப்பான்மையிலேயே உழன்று கொண்டுள்ளான். இது மனிதனைத் துயரத்திற்கே இட்டுச் செல்லும். ஆனந்தத்திற்குத் தூரமாக்கிவிடும். 'ஏகத்துவம்' எனும் 'அத்வைதமே' ஆனந்தத்திற்கு வழிவகுப்பதாகும்.

(த. ச. சா. 1988 ஓகஸ்ட். ப 2)

# (35) சந்நியாசம்

## சந்நியாசம் அஹங்காரத்தைத் துறப்பதே:

'சந்நியாசம்' என்ருல், சர்வ சங்க பரித்யாகம் என்று சுருதி. சமுதாயத்தின் தொடர்பையே அறவே விட்டுவிட வேண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று அர்த்தமில்லை. சமுதாயத்தில் நுழைந்து வேலை செய்ய வேண்டும். அகங்காரத்தைத்தான் துறக்கவேண்டும். நான், எனது என்ற உணர்வை அறவே அகற்ற வேண்டும். சமுதாயத்திடம் சேராமல் ஏகாங்கியாகத் தனிமையில் தவம் செய்வதென்பது சாதுக்களின் உண்மையான தர்மமாகாது. நல்ல காரியங்களை எடுத்துக் கொள்ளும் போது அதற்கான உதவிகளும் அதற்குத் தாமே வந்து சேரும் என்பதில் ஐயமில்லை. தெய்வம் உங்கள் துணையாக இருக்கும் போது, எதையும் பற்றிக் கவலை கொள்ளத் தேவையே இல்லை.

(த. ச. சா. 1987. மாச். ப. 13)

### தபஸ் எது?:

அநேகம் பேர்கள் 'தபஸ்' செய்கிறோமென்று கூறுவர். 'தபஸ்' என்றால் என்ன? ஏதோ பலவகைத் தேகப்பயிற்சி சார்பான ஆசனங்களைச் செய்து, தலை கீழாக நின்று துதிப்பதுதான் 'தபஸ்' என்று பலர் தவறாக எண்ணம் கொண்டுள்ளனர். கல் போன்ற கடினமான மனத்தை இளகிய மனதாகக் கருணையும் அன்பும் நிறைந்ததாக மாற்றுவதே உண்மையான தபஸ் எனப்படும். திக்கற்றுத் தவிப்போரையும் ஏழ்மையில் வாடுவோரையும் கண்டு நமது மனம் அப்படியே கரைந்து உருக வேண்டும். இதுவே 'தபஸ்' ஸின் மேன்மை. எத்தனையோ வகையில் உடலை வாட்டி ஆசனப்பயிற்சிகள் செய்வது மட்டும் சாதனையாகாது.

(த. ச. சா. 1987. ஏப். ப. 6)

### சாது தத்துவத்திற்கு வெளிவேடம் வேண்டியதில்லை:

எல்லோருமே சாதுக்கள் தான். சாதுத்துவம் என்பது எல்லோரிடமும் உள்ளது. அந்த உண்மையை உணர்ந்து அதன்படி நடப்பவரே "சாது" வெனக் குறிப்பிடத் தகுதி பெறுவர். வெளி வேடம் அவசியம் இல்லை. உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தித் தூய்மையாக்குவதே முக்கியமானது. இராவணன் கூட சந்நியாசி வேடம் தரித்தான். பிறர் மனைவியைக் களவாடினான். இது சாது தர்மமாகுமா? துர்க்குணத்தை விட்டொழிப்பவரேதான் சாதுவெனப்படலாம். பற்பல ஆன்மீகப் பயிற்சிகள், ஜபதபங்கள், வேத பாராயணம் செய்தல் மற்றும் எல்லாப் பயிற்சிகளும் இதயத்திலுள்ள தீயகுணங்களை நீக்காவிடில் வீணானவையே ஆகும்.

(த. ச. சா. 1988. பெப். ப. 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (36) சுயகட்டுப்பாடு

**சுயகட்டுப்பாடும் ஒழுங்கும் மிகவும் அவசியம்:**

குறிப்பிட்ட காலத்தில், தியானம், வழிபாடுகள் மற்றப் பணிகள் யாவும் கிரமப்படி செய்து வரவேண்டும். இந்தத் தின சரி கடமைகளைக் காலந்தவறுயல் செய்து வருவது மிகவும் அவசிய மான கட்டுப்பாட்டுப் பயிற்சியாகும். காலையில் தியானம், வழி பாடு தவறுமல் குறித்த நேரத்தில் செய்துவர வேண்டும். மனித சரீரமே ஒரு நியதிக்குட்பட்டது. ஆகவே, சுய கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் கட்டாயமாக அனுசரிக்கப்பட வேண்டும்.

*(த. ச. சா. 1988, ஏப் ப. 3)*

**சகனம் - சகிப்புத் தன்மை:**

''பரோபகாரார்த்தம் இதம் சரீரம்'' என்றபடி அநேகத் துவத்தில் ஏகத்துவம் கண்டு, அதாவது வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, பிறருக்கு உதவுவதையே குறிக்கோளாகக் கொண்டு வாழவே இந்தப் பிறவி நமக்களிக்கப்பட்டுள்ளது என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். 'சகனம்' அல்லது பொறுமை நமது இயல்பே. இதுவே தெய்வத்துவத்துக்கு வழி வகுப்பது. இந்தச் சகிப்புத் தன்மையே இல்லையெனில் மனித வாழ்விற்கு அர்த்தமுமில்லை. முன்னேற்றமுமில்லை. பாரத கலாசாரத்தில் இந்தக் குணம் மிக உயர்ந்த ஸ்தானம் வகிக்கிறது.

*(த. ச. சா, 1987. பிப்பி. ப. 3)*

# (37) வைராக்கியம்

**வைராக்கியம்:**

'வைராக்கிய' மென்றால் எல்லாவற்றையும் துறந்து கானகம் செல்ல வேண்டுமென்று அர்த்தமில்லை. நீங்கள் இருக்கும் இடத் திலேயே எந்தநிலையில் இருப்பினும், எல்லாப்பொருட்களின் உட்கருத்தையும் நன்குணர்ந்து கொண்டு வெளிப்புற அம்சத்தைச் சார்ந்த ஆசையைத் துறக்க வேண்டும். அதாவது விவேகத்தின் உதவியால் எதைக்கொள்ள வேண்டும் எதை ஒதிக்கிடவேண்டு மென்று தெரிந்து கொண்டு செயல்படவேண்டும். ஒவ்வொரு பொருளிலும் தெய்வத்துவத்தைக்கண்டு அதை அனுபவிக் வேண்டும். இதுவே வைராக்கியம். இதுவே மனிதனின் உயர்ந்த தன்மையைக்குறிக்கும்.

*(த. ச. சா. 88. செ. ப. 14)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன் பற்றுதலோடு அனுபவித்தவற்றைப் பற்றுதலின்றி அனுபவிப்பதே வைராக்கியம்:**

ஆன்மா என்பது பரதத்துவத்திலும் ஜடத்திலும் மாறுதலற்றிருப்பதேயாகும். இந்தஆன்மாவின் ஏகத்துவத்தைப்புரிந்துகொள்ள வேண்டும். அதுவே ''வைராக்கியம்'' எனப்படும். பொருட்களைத் துறந்துவிடுவது வைராக்கியமாகாது. முன்புஎந்தப்பொருளைப்பற்றுதலுடன் அனுபவித்தோமோ அவைகளையே பற்றுதலின்றி அனுபவிப்பது தான் வைராக்கியம்.

(த. ச. சா. 88. செப். ப. 12)

**அதிகமானபற்று ராகம் ரோகமாவது போல்:**

''வைராக்கியம்'' என்பது விட்டுக்கொடுப்பதையே குறிக்கும். இதன் பொருள் 'ராக'த்திற்கு எதிரானதென்பதே, அதாவது, பற்றுதலுக்கு நேர் எதிரானதே வைராக்கியம். 'ராக' என்பது சரீரத்திடம் பற்றுதல் வைப்பதேயாகும். பற்றுதல் தனது குடும்பத்தினரிடமும் நண்பர்களிடமும் கொள்வதில் தவறில்லை. பெற்றோரிடம் பற்றுதலுடன் மரியாதைகலந்த அன்பும், சகோதர சகோதரிகளிடம் பாசத்துடன் அன்பு காட்டுதலும் மிகவும் அவசியமானதே. தேகத்தையும் நலமாக வைத்திருக்க வேண்டியதும் முக்கியமே. இவைகள் நல்ல வகையான பற்றுதல்களே. ஆயினும் இதற்கு ஒரு வரையறைவேண்டும். இது எப்படியென்றால் ஒருசங்கீதவித்வான் இசைக்கச்சேரியில் ஒரு 'ராக'த்தை ஆலாபனம் செய்வதிலேயே அளவுக்குமீறிய அதிக நேரம் எடுத்துக்கொண்டால் அது 'ரோக'மாகவே ஆகிவிடும். ஆலாபனை செய்வதிலேயே காலத்தைக் கடத்தி சாகித்தியத்தைக் குறைத்து விட்டால் சங்கீதத்தின் தன்மை கெட்டுவிடும். பதமாகச் சமைப்பதற்குத் தேவைப்படும் அளவுக்கே மிதமாக அடுப்பை எரிக்கவேண்டும். உணவில் தேவையான அளவிற்கே உப்பைச்சேர்க்கவேண்டும். அதிகமாகிவிட்டால் உப்புக் கரித்து உணவுப்பண்டமே புசிப்பதற்கு அருகதையற்றதாக ஆகிவிடும்.

(த. ச. சா. 88. செப். ப. 10)

## (38) பாபம்

**ஏதோ சில தீமைகள் இழைத்து விட்டால் நமக்கு ஏற்படக்கூடிய தீய விளைவுகள் 100 கோடி மடங்கு:**

நாம் பிறரைப்பற்றி தீய எண்ணங்களும் அவர்களுக்குத் தீங்கிழைக்கும் நோக்கத்தையும் வளர்த்துக் கொண்டால், இம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரித் திட்டமிடுதல் எளிதாகத் தோற்றினாலும் கூட இதனால் விளையும் தீமைகளைத் தாங்கிக் கொள்ள நம்மால் இயலாது. இம்மாதிரி எண்ணங்களால் உந்தப்பட்டு ஏதோ சில சிறு தீமைகளை அவர்களுக்கு இழைத்து விட்டால், இதனால் நமக்கு ஏற்படக் கூடிய தீய விளைவுகள் நூறு கோடி மடங்கு அதிகமானவை என்பதை நாம் உணர வேண்டும். இந்த மாபெரும் உண்மையை நாம் முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். நாம் பிறருக்குத் தீமை செய்தால் அது மிகப்பெரிய அளவில் நம்மைப் பன் மடங்காகத் திருப்பித் தாக்குவது தப்பாது. இது இயற்கை நியதி என்பதை ஒருக்காலும் மறக்கலாகாது. பாலூட்டி வளர்த்த வரையும் தன்னிடம் அண்டுபவரையும் பாம்பு ஒரே மாதிரித் தான் தீண்டும். அதே போல் தீய எண்ணங்களை வளர்ப்போருக்கு அந்த எண்ணங்களே அவர்களது அழிவுக்கும் காரணமாகி விடும்.

(த. ச. சா. 1986, செப். ப. 12)

## குருக்ஷேத்திர யுத்தம் - பாபமில்லை:

''தர்மராஜாவே! நீ எண்ணிக்கையைப் பார்க்கிறாய். நான் கொள்கைகளையே முக்கியமாகக் கவனிக்கிறேன். ஒரு கோடி புழுக்களும் ஒரு சிங்கத்திற்கு ஈடாகுமா?'' என்றார் கிருஷ்ணர். குருக்ஷேத்திரமென்பது சரீரத்திற்கு ஒப்பானது. குரு என்றால் பணி செய்தல் என்றே பொருள்படும். கர்மம் செய்யும் கருவியே சரீரம். செயல் நிகழும் பூமி அதுவேயாதலால் அதை க்ஷேத்திரமென்று குறிப்பிடுவர். உடலின் முதுகுப்புறத்தில் ஒரு இரத்தத்தடை ஏற்பட்டால் அது உடல்பூராகவும் பரவிவிடும் வாய்ப்பு உள்ளது. ஆனால் கைகளிலோ கால்களிலோ ஏற்பட்டால் கையையோ காலையோ துண்டித்து எடுத்து விடுவதன் மூலம் அதை மேலும் பரவவிடாமல் தடுக்கலாம். முதுகுப்புறமிருந்தால் என்ன செய்வது? பெரிய அளவில் அறுவை சிகிச்சை தேவைப்படும். கௌரவர்களின் துர்க்குணங்கள் உடலில் தோன்றும் புற்று நோய் போன்றதாக விளங்கின. இதை அப்படியே விட்டுவிட்டால் தேசம் மொத்தமும் நாசமாகும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணர்போல் இந்த மகாபாரதப் போரை நிகழ்த்திவைத்தேன்; அர்ஜுனனை எனக்கு உதவியாக வைத்து இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்தேன்.

(த. ச. சா. 1988 மே, ப:5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறரைத் தூஷிப்பது தெய்வத்தைத் தூஷிப்பதே:**

*பிறரைத் தூஷிக்கும் போது அவர்களும் தெய்வத்தின் உருவங்களே என்பதை நினைவு கொள்ளுங்கள். யாரை தூஷிக்கிறீர்கள்? சிந்தித்துப்பாருங்கள்! தெய்வத்தையேதான் தூஷிக்கிறீர்களென்று புலப்படும். ''ஏகோ அஸி சர்வபூதாந்தராத்மா'' என்றபடி எல்லா உயிரினங்களுக்குள்ளும் உறைவது ஒரே ''ஆத்மா'', அதுவே பரமாத்மாவின் பிம்பம் என்பதை உணருங்கள். இப்படிப்பட்ட உணர்வுடன் தர்மப்பாதையை வளர்க்க வேண்டும். சந்நியாசியாயினும் சம்சாரியாயினும் அது அவரவர் பாவனைகளைப் பொறுத்ததேயாகும்.*

*(த. ச. சா. 1988. பெப்: ப :5)*

# (39) தெய்வப்ரீதி, பாபப்பீதி, சமுதாயநீதி

**முதன்முதலில் 'தெய்வப்ரீதி' வளரவேண்டும்:**

*முதன்முதலில் 'தெய்வப்ரீதி' வளரவேண்டும். உலகில் அக்கிரமங்களையும் அநீதிகளையும் போக்கி தர்மத்தை நிலை நாட்டவே அவ்வப்போது ஆண்டவன் அவதரிக்கிறார் என்பது சாத்திரங்களின் கூற்று. இதைச் சரியான முறையில் கூற வேண்டுமானால், ஆண்டவனின் அவதார நோக்கம் ''பிரேமை'' யை எல்லோருக்கும் போதித்து, மக்களிடையே அன்பின் மேன்மையை எடுத்துக்காட்டி அவர்களை நன்குணரச்செய்து அன்பையே உயிர் மூச்சாகக் கொள்ளச் செய்வதே எனலாம். பிரேமை பெருகினால் துக்கம், பாவம், பயம் யாவும் நாசமாகிவிடும். தெய்வப்பிரீதி என்பது பிரேமையின் வடிவான தெய்வத்தின்மீது பிரேமையை எப்பொழுதும் பொழிவதே; இதுவே 'பக்தி' எனப்படும். ஆகவே முக்கியமாக தெய்வப்பிரீதி வளர்க்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட தெய்வபக்தி வளர்ந்தால் பாவச்செயல் செய்ய அச்சம் (பயம்) உண்டாகும். இதுவே 'பாபப்பீதி' என்னும் இரண்டாவது நியதி. எவரும் தீய செயல்களில் ஈடுபடாவிடில் அதாவது பாபச்செயல்கள் செய்யாமலிருந்தால் சமுதாயத்தில் ஒழுக்கநெறி நிலவும். ஆகவே மூன்றாவது நியதியான 'சமுதாயநீதி' கடைப்பிடிக்கப்படும். இந்த மூன்று நியதிகளான தெய்வப்பிரீதி, பாபப்பீதி, சமுதாயநீதி என்பவைகளை மும்மூர்த்திகளாக யாவரும் போற்றிக் காக்க வேண்டும்.*

*(த. ச. சா. 88 ஆகஸ். ப. 2)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெய்வப்பிரீதி, பாபப்பீதி, சமூகநீதி:**

என்றும் அழியா இந்தச் சத்திய வஸ்துவான பரம்பொருள் மேல் அன்பு கொள்ள வேண்டும். அதுவே தெய்வப்பிரீதி. தெய்வப்பிரீதி இருந்தால் மனிதன் பாபம் புரிய அஞ்சுவான். அதுவே பாபப்பீதி. ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் தெய்வத்திடம் அன்பும், பாவம் புரிய அச்சமும் கொண்டுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் நடத்தை தர்மவழியில் தானே இருக்கும்! அந்த சமுதாயத்தில் நீதி நிலவவே செய்யும். அதுவே சங்க நீதி (Morality in Society) அல்லவா? தெய்வப்பிரீதியும் பாபப்பீதியுமே சங்க நீதிக்கு வழி. உலக அமைதிக்கு இது ஒன்றே அடிப்படையாகும்.

*(த. ச. சா, 1988 ஏப். ப. 13)*

**'தேவுடுன்னாடு' இறைவன் இருக்கிறான்:**

இந்தக் குரு பௌர்ணமி தினத்தில் உங்களுக்கு அஷ்டாக்ஷர மந்திரம் எதுவும் நான் உபதேசிக்க விரும்பவில்லை. எந்தவித மந்திரோபதேசமும் செய்ய விரும்பவில்லை. பகவத்கீதையோ, உபநிடதமோ, பிரம்ம சூத்திரமோ போன்ற எந்தவித தத்துவ உபதேசமும் செய்யப் போவதில்லை. தேவுடுன்னாடு என்ற தெலுங்கு வார்த்தையில் ஐந்து அக்ஷரங்கள் உள்ளன. ''இறைவன் இருக்கிறான்'' என்பதே இதன் பொருள்.

லக்ஷக் கணக்கான நக்ஷத்திர மண்டலங்களையும் சூரிய சந்திரர்களையும் இயங்கச் செய்து உலகுக்கு ஒளி வீசிப் பிரகாசித்து உயிர் வாழத் தேவையான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம் இவைகளை ஒழுங்காக இயக்கி பிரபஞ்சத்தையே ஒரு ஒழுங்கு முறையில் இயங்க வைக்கும் மூலாதார சக்தியான தெய்வம் இருக்கிறதென்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த மந்திரத்தை, தெய்வம் இருக்கிறதெனும் உண்மையை, அடித்துக்கூற முற்படுங்கள். எங்குச் சென்றாலும் இதை மறவாமல் இருங்கள். எவ்வித எதிர்ப்புச் சக்திகள் வந்தாலும் முழு நம்பிக்கையுடன் 'தெய்வம் உள்ளது' என்ற மந்திரத்தைத் தைரியமாய், எவ்வித தயக்கமுமின்றி உச்சரித்து வாருங்கள். ராம மந்திரம், கிருஷ்ண மந்திரம், சிவமந்திரம் எல்லாவற்றையும் விடவும் எவ்வித தந்திர சக்திகளையும் விடவும் இந்தத் 'தெய்வம் உள்ளது' எனும் மந்திரம் மிகவும் சக்தி வாய்ந்தது.

இந்த உலகில் எவர் நல்லெண்ணத்தைக் கொண்டுள்ளார்களோ அவர்களே தெய்வத்துவத்தை அடையத் தகுதி பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்கள். இப்படிப்பட்ட நிலையை நீங்கள் அடைய விரும்பினால் இந்தத் "தேவுடுன்னாடு" தெய்வம் உள்ளது என்ற பஞ்சாட்சர மந்திரத்தை இடைவிடாது உச்சரித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். பிரம்மத்தை உணர்பவன் பிரம்ம மாகிறான். அதே போல் "தெய்வம் உள்ளது" என்று இடைவிடாது சொல்லிக் கொண்டே இருந்தால் தானே தெய்வமெனும் உணர்வு கிட்டு வது சாத்தியமாகும்.

*(த. ச.சா. 1986. ஆகஸ்ட். ப. 7, 8)*

# (40) நாவு

## நாவினைப் புனிதமாக்குங்கள்:

புனிதமான செயல்களைச் செய்வதற்கு நாவினைப் பயன்படுத்த வேண்டும். இனிமையான, புனிதமான விஷயங்களையே பேச வேண்டும். தனது பேச்சினால் மற்றவர்களுக்கு வலியும் துன்பமும் அளிக்கலாகாது. மற்றவர்களைத் தூற்றுவது பாவம். இறைவன் ஒவ்வொருவரின் உள்ளும் உறைகின்றார். மற்றவர்களைத் தூற்றுப வன் உண்மையில் இறைவனையே தூற்றுகிறான். இந்த நாவு செய்யும் பாவங்கள் நால்வகையாகும். பொய் சொல்லுதல், புறங்கூறுதல், தூற்றுதல், அரட்டை பேசுதல் இந்த நான்கு பாவங்கள் புரியாமல் இருந்தால் நாவு புனிதமடையும்.

*(த. ச. சா. 87 ஜுன். ப. 4)*

## மீண்டும் மீண்டும் கேட்கத்தூண்டும் விதத்தில் பேச்சு இருத்தல் வேண்டும்:

சத்தியத்தையே கடைப்பிடித்து அன்புமிக்க வார்த்தைகளை, இதமான இனிய சொற்களையே பேசவேண்டும். இதனால் பேசும் ஆற்றல் புனிதமடையும். பேச்சில் கடுமையும், வெறுப்புணர்வும் தவிர்க்கப்பட வேண்டும். இன்சொல்லே பிறருக்கு இன்பமூட்டும் வகையில் அன்பு நிறைந்த உள்ளத்தின் பிரதிபலிப்பாகப் பேச வேண்டும். மீண்டும் மீண்டும் கேட்கத்தூண்டும் வகையில் பேச்சு அமையவேண்டும். நாம் பேசுவதைக்கேட்பவர்கள் திரும் பத் திரும்ப நினைவுகூறி மகிழ்ச்சியடையும் வகையில் நம் பேச்சு இருத்தல் வேண்டும்.

*(த. ச. சா. 86 மே. ப. 1)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (41) பஞ்சகோசங்கள்

**பஞ்ச கோசங்களும் தொழிற்பாடும்:**

அன்னமய கோசமென்பது மூன்று முக்கிய உணர்வுகளான பசி, தாகம், தூக்கம் இவைகளைக் கொண்டது. பிராணமயமும் மூச்சை உள்ளிழுப்பது, வெளிவிடுவது, மற்றும் அசையும் தன்மை என்ற மூன்று சிறப்பு இயல்புகளைக் கொண்டது. மனோமயமென்பதும் சங்கல்பம் (எண்ணம்) விகல்பம் (எண்ணமற்ற தன்மை) மற்றும் மனனம் (உள்நோக்கி சிந்தித்தல்) என்ற மூன்று இயல்புகளைக் கொண்டது. விஞ்ஞானமய கோசமென்பது மேதாசக்தி (அறிவாற்றல்), விவேகசக்தி (பகுத்தறியும் சக்தி) மற்றும் விஞ்ஞானசக்தி (ஞானம்) என்ற மூன்று இயல்புகளைக் கொண்டது. ஆனந்தமய கோசத்தின் மூன்று இயல்புகள் முறையே பிரியம் (அபிமானம்), மோதம் (மகிழ்ச்சி), பிரமோதம் (பேரானந்தநிலை) என்பவையாகும். ஒவ்வொருவரும் இந்த மூன்று உணர்வுகளையும் அனுபவிக்க விரும்புவர்.

(த. ச. சா. 1988, ஏப். ப. 7)

# (42) புருஷ அதமனும் புருஷோத்தமனும்

**புருஷ அதமனும், புருஷோத்தமனும்:**

இரண்டு விதமான மனிதர்கள் இருக்கிறார்கள். ஒருவன் புருஷாதமன் (கீழ்த்தரமான மனிதன்). மற்றொருவன் புருஷோத்தமன். (உத்தமமான மனிதன்). பிறரிடமிருந்து பெற்றுக் கொள்வது, வாங்கிக் கொள்வது, பிறகு அதை மறுப்பது, எவரிடமிருந்து உபகாரம் பெறுகின்றானோ அவர்களுக்கு அபகாரம் செய்வது இவையே புருஷாதமனின் லட்சணம். ஆனால் புருஷோத்தமனின் தத்துவம் அத்தகையது அல்ல. இதற்கு முற்றிலும் நேர்மாறானதாகும். கொடுப்பதே புருஷோத்தமனின் இயல்பு. ஒருமுறை வாக்களித்தபிறகு, எவ்வளவுதான் இடையூறுகளுக்கும், கொடுமைகளுக்கும், நிந்தனைகளுக்கும் இலக்கான போதிலும் சொன்ன சொல்லைக் காப்பாற்றக் கூடியவன் புருஷோத்தமன். நம்பியவர்களைக் காப்பாற்றி, அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றி அவர்களுக்குத் தகுதியான உதவிகளைச் செய்து கொண்டு அவர்களுக்கு உறுதுணையாக இருப்பதே புருஷோத்தமனின் பிரதான குணம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகாரம் செய்வது புருஷோத்தமனின் லட்சணம். செய்த உப காரத்திற்கு அபகாரம் செய்வது புருஷாதமனின் லட்சணம்.

(த. ச. சா. 1986 யூலை ப. 1)

# (43) பஜனை

## பஜனை அபஸ்வரமாக இருக்கலாகாது:

நமது எல்லாச் சேவையையும்விட இந்தப் பஜனை எல்லோரை யும் ஈர்க்கும். எல்லோரும் இதில் கலந்து கொண்டு பாடுவதால் இதயத்தில் ஆனந்தமும் அமைதியும் நிலைத்திருக்கும். ஒற்றுமை உணர்வு வளரும். தெய்வத்துவம் காணலாம். ஆகவே பஜனை செய்யும் பணியை அதிகமாக விஸ்தரிக்க வேண்டும். இதில் குறிப்பாக மகளிர் அதிகமாக ஈடுபட வேண்டும். பஜனைப்பாடல் பயிற்சி அளிக்க வேண்டும். இதை ஏன் நான் வற்புறுத்திக் கூற வேண்டி உள்ளதென்றால் சில இடங்களில் பஜனைப் பாடல்கள் பாடுவது அபஸ்வரமாக காதுகளைப் பொத்திக் கொள்ளத் தூண் டும் வகையில் உள்ளன. உள்ளத்தை உருக்கி இதயத்தைக் கனிய வைக்கும் வகையில் ஸுஸ்வரமாக பஜனைப் பாடல்கள் பாடப்பட வேண்டும். பஜனை பாடுவது இதயத்தை பிளப்பது ஆகவும் மன தில் வேதனையை உண்டு பண்ணுவதாகவும் இருக்கக் கூடாது.

(த. ச. சா. 1988, பெ. ப. 20)

## பூஜையறையில் மட்டும் இறை உணர்வு:

பூஜை அறையில் மட்டுமே இந்த இறையுணர்வுடன் வழி பாடு செய்கின்றனர், பிரார்த்தனை செய்கின்றனர். அந்த அறையை விட்டு வெளியே வந்ததும் எல்லோரிடமும் குறிப்பாக பணியாட்களிடம் கோபம் கொண்டு கடுமையான தகாத வார்த் தைகளால் ஏசுவதும், மற்றவரின் மனம் புண்படும்படி பேசுவ தும் பிறருக்குத் துன்பம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதும் தான் இவர்கள் தயங்காமல் செய்யும் பணிகள். இது பக்திக்கும் ஞானத்திற்கும் யோகத்திற்கும் உகந்ததல்ல. 'சததம் யோகினும்' என்றபடி எப்பொழுதுமே சாந்தமும், பிரேமையும் நிறைந்திருத்தல் வேண்டும்.

(த. ச. சா. 1986. நவம். ப. 13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (44) சித்துக்கள்

**சித்துக்களைப் பெறும் சாதனைகள் கேடாக முடியும்:**

மனித குலத்தின் பொது நன்மைக்காகவே நான் முக்கியமாக அறிவிக்க வேண்டியது என்னவெனில், எந்த ஒரு ஆன்மீக சாதனையோ அல்லது துறவறம் பெறுதலோ, மதச்சடங்குகள் செய்தலோ மனித சக்திக்கப்பாற்பட்ட சில சித்துக்களைப் பெறும் நோக்கத்துடன் செய்யப்படுவது அற்பத்தனமான செயலாகவே கருதப்பட வேண்டும். இதற்கு இராவணனையே உதாரணமாகக் கொள்ளலாம். எவ்வளவு சிறப்பான யாகங்களும் மற்ற தெய்வீகச் சடங்குகளும் செய்தாலும் எத்தனையோ தவமிருந்து அற்புத சக்திகள் பெற்றாலும், தன்னுடைய அசுரத்தனமான காம இச்சைகளையும் தீய உணர்வுகளையும் விடாமல் தொடர்ந்ததால் அவன் அவப்பெயருடன் அழிவடைய நேர்ந்தது. இது மனித குலத்திற்குப் பாடம் புகட்டுவதாகவே கொள்ள வேண்டும்.

(த. ச. சா. 1987. பிப். பின் அட்.)

# (45) முக்குணங்கள்

**தமோகுணத்தவர்:**

தமோ குணம் என்பது ''மூர்க்கத்துவம்'' அதாவது ''மதியீனத்தால் ஏற்படும் பிடிவாத குணம்'' எனலாம். எதற்கெடுத்தாலும் அர்த்தமற்ற வாதங்களையும் கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பிக் கொண்டு வீண்பொழுது போக்குவது இந்தத் தமோகுணத்தின் பிடியில் உள்ளவர்களின் இயல்பு.

(த. ச. சா. 1988. மார்ச். ப. 4)

**ரஜோ குணத்தவர்:**

தாங்கள் விரும்பியது கிட்டிவிட்டால் அளவுக்கு மீறிய ஆனந்தமடைவதும் அதனால் அகங்கார உணர்வு தலைக்கேறி கர்வமடைதலும், விரும்பியது நிறைவேறாதுவிடிலோ கோபமும் வெறுப்புணர்வும் அடைதலும் ரஜோ குணமுடையோரின் இயல்பாகும். ஆகவே இப்படிப்பட்டவர்களுக்கு விருப்பம் நிறைவேறினாலும் நிறைவேறாது விடினும் விளைவுகள் விபரீதமாகவே இருக்கும். ரஜோகுணம் மனிதர்களை வெறியர்களாக தீய குணமுடையவர்களாக மாற்றிவிடுகிறது.

(த. ச. சா. 19 8. மார்ச். ப. 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குணங்களையும் செயல்களையும் பொறுத்தே 'பிராம்மணர்':

பிராம்மணரென்பவர் சாத்திரங்களை நன்கு கற்றறிந்து அதைப் பிறருக்கும் செம்மையான முறையில் எடுத்துக் கூறும் தகுதி பெற்றவர் என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன். சுயநலம் சிறிதுமின்றி, வேத சாஸ்திரங்களைக் கசடறக் கற்று. அதன்படி வாழ்க்கை வாழ்பவர்கள்தான் பிராம்மணர்கள் என குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தத் தகுதிகளை எக்குலத்தில் பிறந்தவராயினும் முயன்று பெற வாய்ப்புள்ளது. பிறவி எடுத்த குலத்தைப் பொறுத்து வகுக்கப்பட்டதல்ல இது. குணங்களையும் செய்கைகளையும் பொறுத்தே பிராம்மணரென கருதப்படுவாரேயன்றி பிறந்த குலத்தைப் பொறுத்ததல்ல.

(த. ச. சா. 1988. மார்ச். ப. 5)

## மும்மூர்த்திகளும் குணங்களே:

பிரம்மா. விஷ்ணு. மகேஸ்வரன் என்பவர்கள் உடல் பூண்டவர்களல்ல. இவர்கள் மூன்று குணங்களின் தெய்வீக வடிவங்களே என்பதை உணர வேண்டும். பிரம்மா என்றால் நான்கு முகங்களுடன் கூடிய உருவமாகவும் இவர் சிருஷ்டிக்கும் கடவுளாகவும் புராணங்கள் விவரித்துள்ளன. உண்மையில் மும் மூர்த்திகளும் குண வடிவங்களே.

(த. ச, சா. 1988. ஒகஸ்ட். ப. 3)

## நல்லதும் தீயதும் நமது செயல்களிலிருந்தே வருகின்றன:

''பாபம்'' என்பது தனியானது அல்ல. தான் செய்யும் செயலிலேயே உள்ளது. தெய்வத்துவம் என்பதும் அவரவர் செய்யும் செயலிலே உள்ளது, ''எனது நன்மைக்கும் தீமைக்கும் என் குணமும் செயலுமே காரணம். ஆகவே என் குணத்தைச் சிறப்பானதாகக் கொள்ள வேண்டும்'' என்று உங்களுக்குள்ளே நீங்களே உறுதி பூண்டு செயல்பட வேண்டும். அப்போது வாழ்க்கை அர்த்தமுள்ளதாகும். நீங்கள் ஆனந்தமான வாழ்வு பெற வேண்டுமானால் உங்கள் நடத்தையும் குணமும் சிறப்புற வேண்டும்.

(த. ச. சா. 1988 ஒகஸ்ட். ப. 7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (46) புகழ் - இகழ்

## விவேகம் என்ற பகுத்தறியும் திறன், மிகுந்த மகிழ்ச்சி நிலையிலும் ஆழ்ந்த துக்க நிலையிலும் செயலற்று விடுகிறது:

எவராகிலும் உங்களைக் கண்டனம் செய்தோ தாக்கியோ பேசினல், உடனே உங்கள் மனதில் இந்த ஒலி அலைகளினல் அதிர்வுகள் ஏற்பட்டு மூளையின் நரம்புக் கேந்திரத்தைத் தாக்குகின்றன. உடனே உங்களுக்குக் கோபமுண்டு நீங்கள் கொதித்தெழுகிறீர்கள். சண்டைக்குத் தயாராகி விடுகிறீர்கள். அப்போது, மனதின் மீது கட்டுப்பாடு இல்லாமல் போய்விடுகிறது. உங்களது விவேகத்தை இழந்து விடுகிறீர்கள். மாருக, ஒருவர் உங்களைப் புகழ்ந்து பேசுகிருர் என்றல், உடனே உங்களை மறந்து நீங்கள் மகிழ்ச்சியில் திளைத்து விடுகிறீர்கள். அப்போது நீங்கள் விவேகத்தை இழந்து விடுகிறீர்கள். இந்த விவேகம் என்ற பகுத்தறியும் திறன் மிகுந்த மகிழ்ச்சி நிலையிலும், ஆழ்ந்த துக்க நிலையிலும் செயலற்று விடுகிறது. அந்த நிலையில் மனது தவருன பாதையில் செல்ல வாய்ப்பு அதிகம் உள்ளது.

(த. ச. சா. 1988. ஏப். ப. 8)

## புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாக ஏற்கும் பக்குவத்தை வளர்க்க வேண்டும்:

சைதன்யம் எனும் இனிய 'ரஸம்' வேண்டுமாயின் தேகத்தைப் பலவிதமான சாதனைகளுக்குட்படுத்தி, புலனடக்கம் செய்து, மனதை அடக்கி, உள்நோக்கித் தவம் செய்தால்தான் இந்தச் சைதன்யத்தை உணர இயலும். ஆனல் நம்முடைய நிலை என்னவென்றல் எவராகிலும் 'இந்திரன், சந்திரன்' என்று புகழ்ந்து விட்டால் உச்சி குளிர்ந்து முப்பது பவுண்ட் எடை அதிகமாகி விட்டது போல் உணர்கிறேம். பெருமிதம் தலைக்கேறி விடுகிறது. ஆனல் எவராவது நம்மைக் குறைகூறித் தாழ்வாகப் பேசிவிட்டால் உடனே மனம் நொந்து கூனிக்குறுகி 30 பவுண்ட் எடை குறைந்து விட்டதாக உணர்கிறேம். இப்படிப் புகழ்ச்சியைக் கேட்டு புளகாங்கிதமடைவதும் இகழ்ச்சியைக் கேட்டுக் கதிகலங்கிப் போவதும் தவிர்க்கப்பட வேண்டும். புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாக ஏற்கும் பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். எவரோ நம்மைக் குறை கூறிவிட்டால் அதனல் என்ன ஆகிவிடும்? நமது சத்தியம் நம்மிடமே

இருக்கிறது. பயமோ மற்றும் கலக்க உணர்வோ எப்போது ஏற்படும்? நம்மிடத்திலே சத்தியம் இல்லாத போதுதான் பயம் ஏற்படும். நாம் நேர்மையுடன் நன்னெறியைக் கடைப்பிடித்து வந்தால் எதற்குப் பயப்பட வேண்டும்? ஆத்ம சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(த. ச. சா. 1986. ஒக். ப. 5)

### போற்றுதலும் தூற்றுதலும்:

நம்மிடம் இல்லாத குறைகளையும் குற்றங்களையும் ஒருவர் எடுத்துக் கூறினால் அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. இது உலக நியதி. வெய்யிலும் நிழலும் பக்கத்திலேயே உள்ளது போல் போற்றுதலும் தூற்றுதலும் அருகருகே உள்ளவையே. வெய்யில் இருப்பதால்தான் நிழல் விழுகிறது. நிழலில் கூட வெளிச்சம் இருக்கிறது. இதைப் பற்றிக் கவலைப்படலாகாது. இந்த உண்மையை உணர்ந்து செயலில் இறங்க வேண்டும்.

(த. ச. சா. 1987. மாச். ப. 13)

## (47) லோபம்

### உலோபத்திற்கு உதாரணம் - துரியோதனன்:

மகாபாரதத்தில், துரியோதனன் உலோபத்திற்கு உதாரணமாக விளங்கினான். தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்த பாண்டவர்களுக்குக் கிரமமாகச் சேரவேண்டிய இராஜ்யத்தைக் கொடுக்க மறுத்ததுமின்றி, 'ஊசிமுனை' இடம் கூடக் கொடுக்க முடியாதென்று கூறி விட்டான் துரியோதனன். ஆகவே இவன் உலோபத்திற்கு உதாரணமாக விளங்கினான். பிறர் பொருளைப் பறிப்பவன் அல்லது அனுபவிப்பவன் திருடனென்றே கருதப்படுவான். பஞ்சபாண்டவர்களுடைய நாட்டையும் தாரத்தையும் தனதென அபகரித்த துரியோதனன் கடைசியில் அவமானத்தினால் குன்றி உயிரையும் இழந்து அவனது கூட்டத்தினரையும் உயிரிழக்கச் செய்தான்.

(த. ச. சா. 1987. மாச், ப. 7)

### பேராசை:

லோபம், அதாவது பேராசை, எவ்வளவு சம்பாதித்தாலும், எவ்வளவு செல்வங்கள் அடைந்திருந்தாலும் எதையுமே விட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க மனமில்லாத பேராசை பிடித்தவர்கள், பிறரிடமிருந்து எதையும் பெறுவதற்கு எப்போதும் தயாராக இருப்பார்களே யன்றிப் பிறருக்கு ஒரு துரும்பும் கூடக் கொடுக்க மனமிருக்காது. இது எப்படி யென்றல் ''உன் வீட்டிற்கு வந்தால் என்ன தரு வாய்? என் வீட்டிற்கு வந்தால் என்ன கொண்டு வருவாய்?'' என்று கேட்பவர்களின் தன்மையையே குறிக்கும். பேராசை ஒரு வரை எல்லாவற்றையும் சேர்த்து வைப்பதிலேயே இடைவிடாத நாட்டம் கொண்டவராகச் செய்து விடும். இப்படிப்பட்ட மனப் பான்மையை விட்டு விடுவது அவசியம்.

(த. ச. சா. 1988. செப். ப. 10)

## (48) அஹங்காரம்

### இராவணன் சகலகலா வல்லவனுயிருந்தும் அஹங்காரத் தால் கெட்டான்:

சமூகத்திலிருந்து விலகி தனியாய் வாழ்வது சாத்தியமல்ல. மனிதன் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வருவது சமுதாயத்தின் மத்தியில்தான் என்பதையும் ஒவ்வொருவரும் இந்த சமுதாயத் தின் ஒரு அங்கமென்பதையும் நன்குணர வேண்டும். ஆகவே சமுதாயநலனே முக்கியமான குறிக்கோளாகக் கொள்ள வேண்டி யது ஒவ்வொருவருடைய கடமையாகும். நல்லமக்களாக வாழ்ந்து நற்கதி பெற சமூகசேவை செய்வதே சிறந்த மார்க்கம். இதற்கு வழிசெய்யும் வகையில்தான் சத்திய சாயி நிறுவனம் அமைக்கப் பட்டுள்ளது. இதில் பணிகள் செய்யும் போது எந்தவித ஆடம் பரத்திற்கும், விளம்பரத்திற்கும் இடம் கொடாமல் செயல்பட வேண்டும். தூய்மையான, எளிமையான தொண்டே மிகச்சிறந் தது. இதில் 'நான் செய்கிறேன்' என்ற அஹங்கார உணர்வுக்கு இடமே கொடுக்கக் கூடாது. அஹங்கார உணர்வு நாசத்திற்கே வழிதேடும். இராவணன் சகலகலா வல்லவனுக இருந்தான். எல்லாவிதமான பூஜைகளும், சாஸ்திரப்படி சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மங்களையும் தவருமல் செய்து வந்தான். எல்லாவிதமான செல்வங்களையும் பெற்று கல்வி கேள்விகளிலும், வீரதீரத்திலும், பலபராக்கிரமத்திலும், தனக்கு நிகர் எவருமில்லை என்றபடி மிக உயர்ந்த நிலையிலிருந்தான். ஆனல் இவ்வளவு சிறப்பாக எல்லாவிதமான வளங்களும் நிறைந்திருப்பினும் அவ னிடம் ஒரே ஒரு பலஹீனம் இருந்தது. அதுவே 'அஹங்காரம்' இந்த ஒரே பலஹீனத்தினல் அவன் கடைசியில் ஒரு குரங்கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமானப்படுத்தப்பட்டு, ஒரு சாதாரண மனித உருவில் இருந்தவரால் தனது முடிவைச் சந்திக்க நேர்ந்தது.

(த. ச. சா. 1986 மார்ச். ப 11)

**அஹங்காரமெனும் தீய உணர்வு அகன்றால்தான் ஆன்மாவை உணர முடியும்:**

பற்றுதலின் காரணமாக மமதை அதிகரித்து விவேகமற்ற நிலைக்கு மனிதனை உட்படுத்திவிடும். வெட்கமற்ற நிலையடையச் செய்துவிடும். ஈச்சஞ்செடியின் கழுத்தில் கள்ளுப்பானையை கட்டி விடுவார்கள். இப்படிப்பட்ட நிலையில் அது கர்வத்துடன் ஓங்கி நிற்கிறதென்றால் அது சரியாகுமா? அதேபோல் 'அகங்காரமெனும் கள்ளுப்பானையை கழுத்தில் கட்டிக்கொண்டு ஜம்பமாக 'நான் மனிதன்' என்று கூறிக்கொள்வது எவ்வளவு மதியீனம்! சிந்தித்துப்பாருங்கள். இந்த அகந்தையை அகற்றினால்தான் நாம் விவேகத்துடன் ஆன்மாவைப்பற்றிய சிந்தனையில் ஈடுபட முடியும். எவ்வளவு புராணங்கள் சாத்திரங்கள் படித்தாலும் பாண்டித்தியம் பெற்றாலும் ஆன்மாவை உணரமுடியாது. இந்த அகங்காரமெனும் (Ego) தீய உணர்வு அகன்றால்தான் ஆன்மாவை உணர முடியும்.

(த. ச. சா. 1988 பெப். ப. 14)

**அடக்க வேண்டிய எட்டுக்கர்வங்கள்:**

1. பிறப்பினால் ஏற்படும் கர்வம், உயர்குடியில் அல்லது உயர் குலத்தில் நல்லவசதி படைத்த குடும்பத்தில் பிறப்பெடுப்பதால் ஏற்படும் அகந்தை.
2. செல்வச் செருக்கு.
3. பதவியினால் கிடைக்கும் அதிகாரங்களினால் ஏற்படும் அகந்தை.
4. உயர் கல்வியினால் ஏற்படும் கர்வம்.
5. அழகு அல்லது சரீர வளத்தினால் ஏற்படும் கர்வம்.
6. யௌவனம் – இளமைத்திமிர்.
7. பரிவாரங்களினால் ஏற்படும் கர்வம்.
8 அறிவாற்றலினால் ஏற்படும் அகந்தை.

இந்த எட்டுவிதமான சிறப்புகளும் தற்காலிகமானவையே. இவையாவும் கண நேரத்தில் மாறிவிடக்கூடியவை; நிலையானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல்ல. ஆகவே இப்படிப்பட்ட அகந்தையினால் ஏற்படும் அகங்கார உணர்வை தியாகம் செய்து பகவானிடம் சரணடைந்தால் தான், மனிதனுடைய உண்மையான இயல்பை உணரமுடியும். ஆத்மீகப்பயணத்தில் முதல்படியாக இந்த 'அர்ப்பணம்' செய்யும் நியமம் விளங்குகிறது.

(த. ச. சா. 1988 ஏப். ப. 2)

**மதம் எட்டு வகை:**

முதலாவது 'தனமதம்' அதாவது செல்வச் செருக்கு, இரண்டாவது 'பலமதம்' அதாவது சரீர பலத்தினால் ஏற்படும் கர்வம். மூன்றாவது 'யௌவன மதம்' அதாவது இளமையின் கர்வம், நான்காவது 'வித்யா மதம்' அதாவது கல்வி அறிவினால் ஏற்படும் கர்வம். ஐந்தாவது 'சௌந்தர்யம்' அதாவது எழிலினால் ஏற்படும் கர்வம், ஆறாவது 'இராஜ்ய மதம்' அதாவது பதவிச் செருக்கு, ஏழாவது 'சாதனை' அதாவது செய்யும் சாதனையினால் கர்வம், எட்டாவது 'தவம்' அதாவது 'தவம்' செய்வதிலும் செருக்குக் கொள்ளுதல். இவைகள் யாவும் மனிதனின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாகும்.

(த. ச. சா. 1986 யூன். ப. 3)

# (49) சரணாகதி

**எளிய உபாயம் சரணாகதி:**

தெய்வார்ப்பணம் என்பது எளிதானது. ஆனால் இதற்குக் குறுக்கே வருவது ''அகங்காரம்'' என்பது. 'இது என்னுடையதே' என்ற எண்ணம் மேலோங்கினால் பணத்தைத் தன்னிடமே வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை வலுவடைகிறது. ஆனால், பணம் உங்களுடையதே, பாதுகாப்புக்காக வங்கியில் வைக்கிறீர்கள் எனும் எண்ணம் வேரூன்றினால், உங்கள் கவலை குறைகிறது. உங்களுடைய தேகமென்று எண்ணினாலும் அதன் பாதுகாப்பு இறைவனிடம் ஒப்படைக்கப்பட்டால் உங்களுக்கு ஏன் கவலை? இந்த எளிய உபாயம் புரியாமல்தான் சரணாகதி செய்வதில் தயக்கம் உண்டாகிறது. உங்கள் இதயத்தை என்றாகிலும் இறைவனுக்கு அளித்தேயாகவேண்டும். இப்போது இல்லாவிடில் என்றோ ஒரு நாள் கட்டாயமாக உங்கள் இதயம் அவரிடம் சேர வேண்டியதே. இது தவிர்க்க முடியாது. இதனைத் தெரிந்து இப்போதே நீங்களாகவே அர்ப்பணித்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது உங்களுக்குப் பெருமை சேர்க்கும். வாழ்க்கைப் பயணத்தைப் பயமின்றித் தொடர முடியும்.

(த. ச. சா. 1988. செ. ப. 6)

## எங்கே தேடுவது இறைவனை:

எங்கும் நிறைந்த இறைவனை எங்கே தேடுவது? ''எவ்வளவோ யாத்திரைகள் சாதனைகள் எல்லாம் செய்தோம் ஆனால் கடவுளைக் காண முடியவில்லை'' என்று ஏங்குகிறார்கள். கோடிக் கணக்கானவர்கள் இப்படி கடவுளைத் தேட முற்படுகிறார்கள். ஆனால் இது மதீயீனமே. எங்கும் கடவுள் நீக்கமற நிறைந்து இருக்கும் போது அவரை எங்கே என்று தேடுவது? இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுபவர்கள் அறிவற்றவர்களே. சாதகர்கள் கடவுளைத் தேடுகின்றனரா? அல்லது கடவுள் சாதகர்களைத் தேடிக்கொண்டுள்ளாரா என்று எண்ணிப்பாருங்கள். கடவுளிடம் முழுமையாகச் சரணமடைந்த ஒரு நபரை எங்கும் காண முடியவில்லை. கடவுள் பக்தனைத் தேடிக் கொண்டிருக்கிறாரேயன்றி நீங்கள் கடவுளைத் தேட வேண்டியதில்லை.

(த. ச. சா. 1987. பிப்பி. ப. 19)

## அன்றாடச் செயல்களைத் தெய்வ நிவேதனமாகச் செய்வது:

வீட்டில் குழந்தைகளைக் குளிப்பாட்டும் போது தெய்வத்திற்கு அபிஷேகம் செய்வதாகக் கருத வேண்டும். குழந்தைகளுக்கோ கணவருக்கோ உணவு பரிமாறும் போது தெய்வத்திற்கு நிவேதனம் செய்வதாகக் கருத வேண்டும். ஒரு பிச்சைக்காரருக்கு உணவு அளிக்கும் போது தெய்வமே அந்த உருவத்தில் வந்துள்ளதாகக் கருதி அதைத் தெய்வார்ப்பணமாகக் கருதுங்கள். பிசைக்காரர் என்பது அந்த உருவமே. ஆனால் அதுவும் ஆத்மாவின் ஸ்வரூபமே. காய்கறிகளை நறுக்கும்போது காமம், குரோதம், போன்ற தீய குணங்களையே நறுக்குவதாகக் கருதுங்கள் வீட்டைச் சுத்தம் செய்யும் போது உங்கள் இதயத்தையே தூய்மையாக்குவதாகக் கருதுங்கள்.

(த. ச. சா. 1987. ஏப். ப, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (50) காமம்

**ஆசை நற்செயல் தீச்செயல் என்று பகுத்தறியும் சக்தியையே போக்கிவிடுகிறது:**

காமம் நற்கருமங்களை வேரிலேயே வெட்டிவிடுவது போல் செய்யவிடாமல் தடுத்து விடுகிறது. ஆசை அதிகரித்தால் நற்செயல் தீச்செயல் என்று பகுத்தறியும் சக்தியையே போக்கி விடுகிறது. தனது செயல்களின் பின் விளைவுகளைப்பற்றிச் சிந்திக்கும் தன்மையையே இழக்கச் செய்து விடுகிறது. ஆகவேதான் உபநிஷத்துக்கள் 'கர்மத்தையே கடவுளெனக்கருதி முதலில் அதற்கு வணங்குங்கள்' என்று முறையிடுகின்றன. ('தஸ்மை நமஃ கர்மா') எந்தப் பணியையும் தொடங்குவதற்கு முன் அதற்கு வணக்கத்தைச் செலுத்தித் தொடங்க வேண்டுமென்பதே இதன் பொருள். அதற்கான பிரார்த்தனை என்னவெனில் 'தான் செய்யப்போகும் கர்மம் பிறருக்கு நன்மை பயப்பதாக இருக்கட்டும். இதனால் எவருக்கும் தீங்குவரக்கூடாது' என்பதே.

*(த. ச. சா, 88 செப். ப. 9, 10)*

**காமம் கர்ம நாசம்:**

இன்று மனிதர்கள் சமூகத்திடமிருந்து எதைப் பெறலாமென்ற நோக்கத்துடனே செயலாற்றத் தொடங்குகின்றனரே யன்றித் தான் சமூகத்திற்கு எதைக் கொடுக்கலாமென்ற உணர்வு சிறிதுமில்லை. இது சரியான அணுகுமுறையேயல்ல. ஒவ்வொருவரும் ''என்னால் சமுதாயத்திற்கு என்ன கொடுக்கமுடியும்? அது என்னால் என்ன நன்மையடைய முடியும்?'' என்றே சிந்திக்க வேண்டும். இப்படிப்பட்ட உயர்தர நோக்கத்துடன் செய்யப்படும் செயல்களே நற்செயல்களாகும். ஆசையால் நிறைந்த உள்ளங்களில் இம்மாதிரி நல்லெண்ணங்கள் தோன்றமாட்டா, ஆகையால் மனிதர்கள் செய்யும் செயல்கள்யாவும் மாசற்றவையாகவே ஆகின்றன. ஆகவே 'காமம்' என்பது மனிதனைப் புனிதப் பாதையிலிருந்து திசை திருப்பி விடுகிறது. இதையே தான் 'காமம் கர்ம நாசனம்' என்று குறிப்பிட்டுள்ளனர். அதாவது ஆசை நற்காரியங்களைச் செய்யவிடாமல் தடுக்கும் என்பதே இதன் கத்ருது.

*(த. ச. சா. 88 செப். ப. 10)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (51) கோபம்

**கோபம்:**

கோ (குரோதம்) மனிதனைப் பைத்தியமாகவே ஆக்கி விடும் சக்திகொண்டது. இதனால், ஒருவர் பணநஷ்டம் அடைவதுடன் மானத்தையும் இழக்க நேரலாம். அவருக்கு இழிவைத் தேடித்தந்து, சகாக்களிடம் விரோதம் கொள்ளச்செய்து, எல்லாவற்றையுமே இழக்க நேரிடலாம். கோபத்திற்கு அடிமையானவர்கள் எந்தப் பணியையும்ம சிறப்பாகச் செய்திட முடியாது. அநேகவிதமான இன்னல்களை இவர்கள் எதிர் நோக்க வேண்டியிருக்கும். பாபச் செயல்கள் பல செய்து அதனால் உலகோரால் தூற்றப்படும் நிலைக்கு ஆளாவார்கள். கோபம் மனிதனின் அறிவையே அழித்துவிடும். உலக அறிவு, பகுத்தறியும் ஆற்றல், எதையும் சீர் தூக்கி ஆராயும் சக்தி, தனது முன் அனுபவத்தினால் பெற்ற அறிவு, யாவையுமே இவர்கள் இழக்க நேரிட்டுவிடும். இப்படியாகப் பற்பல அபாயங்களை விளைவிக்கும் மிகக் கொடியதொரு ஆயுதமே கோபம்.

(த. ச. சா. 88 செப். ப. 10)

# (52) சமுதாயம்

**தனிநபரின் சுகத்திற்குச் சமுதாயத்தின் சுபம் அத்தியாவசியம்:**

எவரோ ஒருவர் துன்பத்தில் ஆழ்ந்தால் அது தனக்குச் சம்பந்தப்பட்டதல்ல என்று இருப்பது சரியல்ல. சமுதாயம் நலமாயிருந்தால்தான் ஒவ்வொருவரும் நலமுடனிருக்க முடியும். தேசம் க்ஷேமமாக இருந்தால்தான் தாமும் க்ஷேமமாக வாழ முடியுமென்ற உணர்வு வேண்டும். என் கிராமம் எப்படியாவது போகட்டும் நான் மட்டும் நன்றாயிருந்தால் போதுமென்று எவரும் கருதலாகாது. அப்படியிருந்தால் வெகு நாட்கள் காலம் தள்ள முடியாது. சமுதாயத்தில் பிறந்து அதிலே வளருவதால் சமுதாயத்திலிருந்து விலகி வாழ இயலாது. சமுதாயம் நலமாயிருந்தால்தான் குடும்பம் நலமுடன் இருக்கும். குடும்பம் நலமுடனிருந்தால் தான் தானும நலமாயிருக்கலாம். ஆகவே 'நான்' எனும் தனி நபரின் சுகத்திற்குச் சமுதாய சுகம் அத்தியாவசியமாகும்.

(த. ச. சா. 1987. ஏப். ப. 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் சமுதாயத்திற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?:

உங்களுடைய தொழில் அல்லது பணி தூய்மையானதாயிருத்தல். நீங்கள் எம்மாதிரித் தொழிலை ஏற்க வேண்டும்? எம்மாதிரி உத்தியோகத்தை நாடவேண்டும்? அது சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நலம் சேர்க்கும் தன்மை உடையதாய் இருத்தல் வேண்டும். நாடு உங்களுக்கு ஜீவனோபாயமாக ஒரு தொழிலோ உத்தியோகமோ கிடைக்கச் செய்கிறது. நீங்கள் பதிலுக்கு நாட்டிற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்பதே உங்கள் முக்கிய நோக்கமாயிருத்தல் வேண்டும். ''சமுதாயத்திற்கு நான் என்ன உதவி, என்ன சேவை செய்யலாம்?'' என்ற நினைவே உங்கள் உள்ளங்களில் மேலோங்கியிருக்க வேண்டும். நீங்கள் செய்யும் பணிகளில் ''அசத்தியம்'' சிறிதுமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏமாற்றுதல், பொய்புரட்டு, மோசடி செய்தல் போன்ற தீய நோக்கங்கள் அண்ட விடாமல் உங்கள் பணியை கண்ணும் கருத்துமாய் கண்ணியத்துடனும் நாணயத்துடனும் செய்வதில் ஈடுபட வேண்டும்.

(த. ச. சா. 1986. ஜன. பக். 19)

## சமுதாயத்திற்கு சேவை செய்வதில் ஈடுபடுவதே படித்தவர்க்கழகு:

ஒழுக்கக் கல்வியும் ஆன்மீகக் கல்வியும் மனிதன் கட்டுப்பாட்டுடன் ஒழுங்கு முறையான வாழ்க்கை வாழ வழி வகுக்கும். சுயகட்டுப்பாட்டைப் போதிக்காத கல்வி, கல்வியென்றே குறிப்பிடத் தகுதியற்றது. உண்மையான கல்வி மனிதனை கருணையுள்ளம் கொண்ட மனிதத் தன்மை மிகுந்தவராக உருவாக்கக் கூடியதே. குறுகிய மனப்பான்மையையும் சுயநல உணர்வையும் வளர்ப்பது உண்மையான கல்வியாகாது. கல்வி கற்றவரின் இதயத்திலிருந்து பிறரிடம் அனுதாபமும் பரிவும் தாமே ஊற்றெடுத்து வரவேண்டும். தன்னுடைய முன்னேற்றத்திலேயே நாட்டம் கொண்டிராமல் சமுதாயத்திற்கு சேவை செய்வதில் ஈடுபாடு கொள்வதே படித்தவர்க்கழகு. சமுதாய சேவையே கல்வி முறையின் முக்கிய நோக்கமாயிருத்தல் வேண்டும்.

(த. ச. சா. 1986. பெப். பக். 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (53) சகவாசம்

## நல்லோர் சேர்க்கையினுல், ஜீவன் முக்தி:

அளவற்ற சமுத்திரம் இரத்தினங்களுக்கு நிலயம், முத்துக்களுக்குக் கருவூலம். அதன் ரூபம் வர்ணனைக்கு அப்பாற்பட்டது. அதன் ஆழம் மிகமிக அதிகம். உலகத்திலுள்ள அனைத்து உயிரினங்களின் தாகத்தைத் தீர்ப்பது சமுத்திரமே! ஆனுல் சமுத்திரத்தின் நீர் உப்பாக இருக்கின்றது. நமது சாக்கடை நீர் மிகவும் அசுத்தமாக இருக்கின்றது. இதை எவரும் கண்களாலும் கூடப் பார்க்கமாட்டார்கள். அந்தச் சாக்கடைத் தண்ணீர் எவ்வளவுதான் அசுத்தமாக இருந்த போதிலும் சமுத்திரத்தோடு சேரும் பொழுது, அந்தச்சாக்கடைத் தண்ணீரோடு சமுத்திரநீர் சேர்ந்து விடாது. காரணம் என்ன? சமுத்திரத்தின் தண்ணீர் அளவற்றதாக இருக்கின்றது. சாக்கடைத் தண்ணீர் குறைவாக இருக்கின்றது. அற்பமானது அளவற்றதோடு சேர்ந்து அளவற்றதாகவே மாறிப் போகின்றது. அது போன்றே நாம் நல்லோர் திருக்கூட்டத்தோடு சேர்ந்தால், நமது அற்ப குணங்களும் கூட நல்ல குணங்களாக மாறிவிடுகின்றன. இதையே வேதாந்த பரிபாஷையில் 'ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் நிர்மோஹத்வே நிச்சல தத்வம் நிச்சலதத்வே ஜீவன் முக்தி' எனக் கூறப்பட்டுள்ளது. நல்லோர் சேர்க்கையினுல் ஜீவன் முக்தி வாய்க்கின்றது. மேலும் ஓர் உதாரணம்: ஒன்று நெருப்பு மற்றது கரி, நெருப்பு, நெருப்புஸ்தானத்திலும், கரி, கரிஸ்தானத்திலும் இருந்தால் கரி, நெருப்பு ஆக முடியாது. இந்தக் கரியை நெருப்பின் அருகில் சேர்க்க வேண்டும். நெருப்போடு தொடர்பு ஏற்படுத்த வேண்டும். அவ்விதம் தொடர்பு ஏற்படுத்தும் பொழுது, கரி, எந்தளவு நெருப்போடு சேர்கின்றதோ அந்தளவு நெருப்பு கரியோடு சேர்ந்து விடுகிறது. கரியை அருகில் வைத்து விசிறியினுல் விசிறினுல் கரி முழுமையாகவே நெருப்பாக மாறிவிடுகிறது.

(ந. ச. சா. 1986 யூலை. ப. 6, 7)

## தீயோர் சகவாசம்:

கைகேயி மிக உயர்ந்த குணமுடையவள். அன்புமிக்கவள். நல்ல வம்சத்தில் தோன்றி சிறந்த அரசியாகவே விளங்கினுள். ஆனுல் மந்தரை எனும் தீயவளுடன் சேர்ந்ததால் அவளுடைய கணவனை இழந்து சொந்த மகனின் அன்பையும் இழந்து. நாடெங்கும் மக்களிடம் கொடியவளெனும் கெட்ட பெயரெடுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் அளவிற்கு பாதிக்கப்பட்டு வாழ்க்கையையே வீணுக்கி எக் காலத்தும் இழுக்குக்காளாகி விட்டாள்.

(த. ச. சா 1986 ஜன. ப. 5)

# (54) ராகம் துவேஷம்

**ராகம், துவேஷம் நீங்கினுல் பகவான் வெளிப்படுவார்:**

பகவானைத் தேடவேண்டிய அவசியமேயில்லை. அவர் எங்கும் நிறைந்திருக்கையில் எதற்காக வேறு இடங்களுக்குப் போய்த் தேடவேண்டும்? 'அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வியாப்யநாராயண ஸ்தித:' உள்ளே வெளியே எங்கேயும் வியாபித்துள்ளார் நாராயணன். உள்ளது ஒரே பரம்பொருள். எங்கும் நிறைந்தவர் அவரே. காணப்படும் ஒரே மெய்ப்பொருள் இப்பரம்பொருளே. ஆகவே இந்த சாதனைகள் யாவும் அவரைத்தேடும் முயற்சிகளல்ல. மனதில் குடிகொண்டுள்ள மலங்களான விருப்பு, வெறுப்பு, (ராகதுவேஷம்) போன்ற தீயவுணர்வுகளை போக்குவதற்காகவே இந்தச் சாதனைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தத் தீய குணங்களை அகற்றி விட்டால் பகவான் தானே நமக்குப் புலப்படுவார். எங்கும் தேடத் தேவை இல்லை. நெருப்பைச்சற்று சட்டை செய்யாமல் விட்டிருந்தால் அதன்மேல் நீறுபூத்துவிடுகிறது. ஆதலால் உள்ளே உள்ள தணல் கண்களுக்குப் புலப்படுவதில்லை. மேலே மூடியுள்ள நீறுதன்னை அகற்றி விட்டால் உள்ளே தணல் நன்கு புலப்படும். இதேபோல் நமது இதயத்தின் ஆழத்தில் ஆத்ம ஞானியான தெய்வம் 'ஞானபாஸ்கரனுக' அதாவது 'ஞான ஒளிவீசும் சூரியனுக' பிரகாசித்துக் கொண்டுள்ளார்.

(த. ச. சா. 1988 யூலை. ப. 3)

# (55) பிரார்த்தனை

**பிரார்த்தனை:**

'பிரார்த்தனை' என்பது யாசிப்பதல்ல, இது ஒவ்வொருவரிலுமுள்ள தெய்வத்துவத்தை உணர்ந்து எங்கும் நிறைந்த பரம்பொருளின் பெருமையை அனுபவித்து ஆனந்தத்தில் திளைத்தலேயாகும். இதய பூர்வமில்லாத பிரார்த்தனை பிரார்த்தனையேயாகாது. இதயமற்ற வார்த்தைகளை ஆண்டவன் கேட்கமாட்டார். வார்த்தைகளே இல்லாத இதயத்தூய்மையை அங்கீகரிக்கலாம். இதயத் தூய்மையே பிரதானமானது. இறைவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹ்ருதயேசன்' என்று குறிப்பிடுவதன் கருத்து என்னவென்று சிந்தித்துப் பாருங்கள். எவரைத் தூஷித்தாலும் இறைவனைத் தூஷித்ததாகவே ஆகும். எவரிடம் அன்பு பாராட்டினாலும் அது ஆண்டவனிடம் அன்பு பாராட்டியதாகும்.

(த. ச. சா. 88 ஆகஸ். ப. 6)

# (56) திரிகரணசுத்தி

**திரிகரணசுத்தி:**

எண்ணங்களும், சொற்களும், செயல்களும் எப்போதும் ஒன்றுக்கொன்று ஒத்தே இருத்தல் வேண்டும். 'திரிகரணசுத்தி' மூவகைத் தூய்மை என்பது எண்ணம், சொல், செயல் இவை மூன்றும் ஒருமிக்க தூய்மையாய் இருத்தல் என்றே பொருள்படும். சாதாரணமாக, மக்கள் தாம் நினைப்பது ஒன்றும், சொல்வது வேறொன்றும் செய்வது மற்றொன்றுமாகவே செயல்பட்டு வருகின்றனர். இதுமிகப்பெரிய தவறுமட்டுமன்றி மனிதத் தன்மைக்கே முரணானதும் பாசாங்குபுரியும் கபடத்தனமுமாகும். நீங்கள் எண்ணும் எண்ணங்களையும், பேசும் சொற்களையும், புரியும் செயல்களையும் மிக்க கவனத்துடன் உணர்ந்து ஆராயவேண்டும். பொய் பேசுவதனால் கிடைக்கக்கூடிய அற்ப ஆதாயங்கள் உண்மையில் இலாபங்கள் அல்ல. மாறாக, அது உங்கள் மனத்தையே மாசுபடுத்தி பழுதடையச்செய்து விடுகிறது. இதனால் உங்கள் வாழ்க்கையே நாசமாகிவிடும்.

(த. ச. சா. 1988 மார்ச். ப. 1)

**ஒரு தவறிலிருந்து பல தவறுகள் விளைகின்றன:**

ஒரு சிறுதவறிலிருந்தே பல தவறுகள் விளைகின்றன. இவையே விபரீதமாய்ப் போய்விடுகின்றன. சிறு விதையே பெருமரமாக வளருகிறது. அந்த மரத்தில் மீண்டும் ஆயிரக்கணக்கான விதைகள் உருவாகின்றன. இவைகள் மீண்டும்முளைத்து மரமாகவளர்ந்தால் எவ்வளவு லட்சக்கணக்கானவை வளர வழியுள்ளது என்று சிந்தித்துப்பாருங்கள். ஆகவே விதையைநடும்போதுநல்லகனியைக் கொடுக்கும் விருக்ஷத்தின் விதையாக நட்டுவிட்டால் இதனால் எவ்வளவோ லட்சக்கணக்கான கனிகளைப் பெற வாய்ப்புண்டு.

(த. ச. சா. 1988 மார்ச். ப. 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (57) மாணவர்

## மாணவர்களைச் சிறந்தவர்களாக்குவது பெற்றோரும் ஆசிரியருமே:

கல்விமுறையிலுள்ள முக்கியமான அடிப்படைச் சீர்கேடுகள் சரிசெய்யப்படுவதில்லை. இதனால் அவதிக்குள்ளாகுவது மாணவர்களே. மாணவர்களைக் குறைகூறிப்பயனில்லை. அவர்கள் குன்றில் உள்ள பாறையைப் போன்றவர்களே. ஒரு சிற்பி அந்தப் பாறையைப் பெயர்த்தெடுத்து, தனது ஆற்றலினாலும், திறமையினாலும். அழகிய சிலையாக வடிக்கிறான். சதாரணக்கல்லை அழகிய சிலையாக உருவாக்குவது சிற்பியின் கைத்திறனேயல்லவா? இதே போல் அறியாப்பருவத்திலுள்ள சிறுவர்களையும், சிறுமிகளையும் நல்ல ஒழுக்கமுடைய சமுகத்திற்கு சேவை செய்யும் சிறந்தவர்களாக உருவாக்குவது பெற்றோர்களும் ஆசிரியர்களுமே. இவர்கள் நல்ல முன்னோடிகளாகத் தாமே வழிகாட்டினால் மாணவர்கள் சிறந்த குடிமக்களாக வளர்ந்து நாட்டிற்கு வளமூட்டுவார்களென்பதில் ஐயமில்லை. இப்படிப்பட்டவர்களால் நாட்டிற்கே பெருமை ஏற்படும்.

*(த. ச. சா. 1986 பெப். ப.4)*

## மாணவர்களுக்கு அன்பைப் போதிப்பது அன்பு மூலமே சாத்தியமாகும்:

மாணவர்களுக்கு அன்பைப்பற்றிப் போதிப்பது அன்பின் மூலமே சாத்தியமாகும். என்னுடைய இயல்பே அன்பு, ஆகையால் இந்த அன்பு எனும் பிணைப்பினால்தான் சத்தியசாயி உயர் மட்ட கல்விக்கூடத்தில் மாணவர்கள் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்கு முறைதவறாமலும் எவ்வித கொந்தளிப்புக்கிடமின்றி அமைதியாகக் கல்வி பயின்று வருகின்றனர். எனக்கு யாரிடமும் விரோதமில்லை. வேற்றுமையுணர்வுமில்லை. என்னைக் கண்டனம் செய்து கொண்டோ என்மீது விரோதம் பாராட்டும் வகையில் சிலர் பேசிக்கொண்டோ செயல்பட்டுக்கொண்டிருக்கலாம். ஆனாலும் அப்படிப்பட்டவர்களிடம் கூட எனக்கு விரோதமில்லை. எல்லோரிடமும் ஒரேமாதிரியான அன்பு பாராட்டி வருகிறேன். ஒவ்வொருவரும் எனக்கு அருமையானவரே. அன்பு என்னுடைய நிரந்தரமான குணமாக அமைந்துள்ளதால், எனக்கு ஒருபோதும் கவலையோ, அமைதியின்மையோ இருப்பதில்லை. எப்போதும் ஆனந்தமாக அமைதியாகவே இருக்கிறேன். அன்பு சொல்வடிவத்தில் சத்தியமாகும். செயல்வடிவில் அதுவே தர்மம். எண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவில் அது அமைதி (சாந்தி). அன்பைப்புரிந்து கொள்ளுதலே அஹிம்சை. இந்த அன்பு என்பது நமக்குள்ளேமறைவாகப்பாய்ந்து கொண்டிருக்கும் ஒரு ஜீவநதி போன்றது.

*(த. ச. சா. 1986 பெப், ப– 9, 10)*

## (58) பெற்ருேர்

### பெற்ருேர் செய்யும் தவறு:

தற்காலத்தில் குழந்தைகளில் தொண்ணூறு சதவீதம் கெடுவதற்குக் காரணம் பெற்ருேர்களே என்பது துர்ப்பாக்கியமான உண்மை. குழந்தைகளை அவர்கள் சமயமறிந்து கண்டிப்பதில்லை. அவ்வப்போது குழந்தைகளின் தவருன செயல்களைத் திருத்திஞல் குழந்தைகள் நல்ல முறையில் வளர்வார்கள். குழந்தைகள் தவருன வழியில் செல்கையில் பெற்ருேர்கள் அவர்களுக்கு இரக்கங் காட்டலாகாது. தவறு செய்யும் குழந்தைகளைத் திருத்தாமல் இருத்தல் முறைதவறிய பாசமாகும்.

*(த. ச. சா. 87 யூன். ப. 6)*

### பிள்ளை வளர்ப்பு:

இக்காலத்தில் தங்களது பிள்ளைகளை நல்லமுறையில் கட்டுப்பாட்டுடனும் கண்டிப்புடனும் பெற்ருேர்கள் வளர்க்காததால் அவர்கள் அடங்காப்பிடாரிகளாக தீயவழிகளில் ஈடுபடுகிருர்கள். குழந்தைகளிடம் அன்பும் பாசமும் இருக்க வேண்டியதுதான் ஆஞல், அளவுக்கதிகமாக அவர்களுக்குச் செல்லம் கொடுத்து வளர்ப்பது தவறு. தங்களது பிள்ளைகளை சரியான முறையில் கட்டுப்பாட்டுடன் வளர்க்காத பெற்ருேர்கள் பெற்ருேராக இருக்கத் தகுதி அற்றவர்களாகவே கருதப்படுவர். இவர்கள் திருதராஷ்டிரரைப் போன்றவர்களே. தன் பிள்ளைகளை அடக்காமல் அவர்கள் இஷ்டப்படி செயலாற்ற விட்டதால் திருதராஷ்டிரன் எவ்வளவோ துயரத்திற்குட்பட்டு மரிக்க நேர்ந்தது. கண்ணிருந்தும் குருடராகவே கருதப்படுவர் அப்படிப்பட்ட பெற்ருேர்கள்.

*(த. ச. சா. 1986 யூன். ப. 7)*

## (59) கல்வி

### கல்வியின் நோக்கம்:

'வித்யா' அல்லது கல்வியறிவு என்பது ஸ்தூல, சூட்சும, மானசிக உலகங்களைப் பற்றிய உண்மையைப் போதிப்பதேயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். தெய்வீகம் நிறைந்த புனிதமான பெரியோரையும், சான்றோரையும் கல்வியறிவின் பிரதிபலிப்பாலேதான் கண்டு கொள்ள முடியும். மாறுதலுக்கும் அழிவிற்குமுட்படும் இந்த உலகைச் சார்ந்த பொருட்களுக்கும், அழிவற்ற நிலையான பரம் பொருளுக்கும் உள்ள வேறுபாட்டை இனம் பிரித்துக் காட்டுவதே உண்மையான கல்வி எனலாம். எல்லாவற்றிலும் ஊடுருவியும், இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டுத் தனித்தும் நிற்கும் பேருண்மையை விளக்கிக் காட்டுதலே கல்வியின் நோக்கம்,

(த. ச. சா. 87 ஜன. ப. 5)

**மனித வாழ்க்கை ஐஸ்கட்டி போன்றது:**

மனித வாழ்க்கை ஒரு ஐஸ் கட்டி போன்றது. ஒவ்வொரு கணமும் இது உருகிக் கொண்டே இருக்கிறது. இது முழுமையாகக் கரைந்துவிடுமுன், பிறருக்குத் தொண்டு செய்வதில் ஈடுபடுங்கள். ஒவ்வொருவரையும் இப்படிப்பட்ட தியாக வாழ்க்கைக்குத் தயார் செய்வதே குணமேம்பாட்டுக் கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கம்.

(த. ச. சா. 86 மே. ப. 10)

# (60) சாயி தத்துவம்

**சாயி தத்துவம்:**

எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட ''Consciousness'' தன்னுணர்வு ஒன்று உள்ளது. அதுவே ''சித்தபஸ்,' என்பது. இதுவே எல்லா உணர்வுகளுக்கும் அடிப்படையானது. இதை All effective will என்று குறிப்பிடுவர். அதாவது ''எல்லாவற்றையும் இயக்கிப் பாதிக்கும் ஆதார சக்தி'' எனப்படுவதே இது. இதுவே மற்ற தன்னுணர்வுகளுக்கும் ஆதாரமானது. இதையே Super Divine Life ''எல்லாவற்றிற்கும் மேலான தெய்வீக வாழ்வு'', ''சுத்த சத்துவ ஜீவிதம்'' எனக் கூறுவர். இதுவே சாயி தத்துவமுமாகும்''' இந்தச் சாயி தத்துவத்தால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. இந்த சுத்த சத்துவ சாயி தத்துவம் எல்லையற்ற சக்தி கொண்டது. இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொள்ளுவதே ஒவ்வொரு மனிதரின் கடமையுமாகும்

(த. ச, சா. 1988. பேப். ப. 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாயி சகோரத்துவம் அன்பை அடிப்படையாய் கொண்டது:**

நீங்கள் எல்லோரும் சகோதரிகளே. இந்த உணர்வுடனே நீங்கள் வாழவேண்டும். செயல்பட வேண்டும். ஆனுல் உங்களிடையே விரோத மனப்பான்மையும் வெறுப்பு உணர்வும் நிலவுகின்றன. இது சகோதர உணர்வுக்குகந்ததல்ல. சாயி சகோரத்துவம் என்பது அன்பையே அடிப்படையாகக் கொண்டது. அன்பினுல் எதையும் சாதிக்கலாம். ஆகவே, அன்பு நிறைந்த உள்ளத்துடன் சேவைப் பணிகளில் ஈடுபட வேண்டும். சாயி தத்துவமே பிரேம தத்துவம்தான். எவ்வளவு தூரம் பிறர் உங்களை நிந்தனை செய்து உங்களுக்குக் கோபம் வருமாறு இகழ்ந்து பேசினுலும் நீங்கள் சிறிதும் பாதிக்கப் படாமல் எப்பொழுதும் புன் முறுவலுடனே இருத்தல் வேண்டும். போலியான சிரிப்பை வரவழைத்துக் கொள்வதை நான் குறிப்பிடவில்லை. உங்கள் இதயத்தின் ஆழத்திலிருந்து இந்த நேச உணர்வை எழுப்பி உண்மையாகவே மகிழ்ச்சியைப் புலப்படுத்துவதாக இருக்க வேண்டும் உங்கள் புன்னகை. இதயம் பரிசுத்தமாக இருந்தால்தான் இப்படிப்பட்ட இயல்பான மகிழ்ச்சி எப்போதும் நிறைந்து இருக்கும்.

(த. ச. சா. 1986. மார்ச். ப. 14)

**சாயி சித்தாந்தம் - சமுதாயத்திற்கு சேவை செய்வதே உண்மையான சாதனை:**

ஒவ்வொரு சாதகரும் தியாக உணர்வும் கருணையுள்ளமும் கொண்டு சேவா சாதனையில் ஈடுபட வேண்டும். மூக்கை விரலால் பிடித்துக் கொண்டு சோஹம் என்று சொல்லி உங்களுக்கு மூச்சிழுத்து வெளிவிடுவதை சீராகக் கட்டுப்படுத்தி இயங்கச் செய்வது சாயிசித்தாந்தமாகாது. சோம்பேறித் தனத்திற்கு சிறிதும் இடம் கொடுக்காமல், துள்ளி எழுந்து சுறுசுறுப்புடன் சமுதாயத்திற்கு சேவை செய்து வருவதே உண்மையான சாதனை என்பதே சாயி சித்தாந்தம். வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக வாழ முயல வேண்டும். தியாக மற்ற வாழ்வு ஒளி விளக்கில்லாத கோவில் போன்றது. இருள் சூழ்ந்துள்ள இடத்தில் தீய சக்திதான் இருக்கும். தியாக உணர்வு உங்கள் பார்வையை விரிவாக்கும். தெய்வீக சக்தியை வளர்க்கும். ''ஏகத்துவம்'' அதாவது ஒருமைப்பாடு ஓங்கி இருக்கும். இந்த ஒருமைப்பாட்டுணர்வே கடவுளை அடைய வழி வகுக்கும். ஒவ்வொருவரும் பயனைக் கருதாது சேவை செய்ய வேண்டியது அவசியமாகும்.

(த. ச. சா. 1985. டிச. ப. 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முழுமையான தெய்வசக்தி சத்யசாயியாக வந்திருக்கிறது:**

ஒவ்வொருவரிடமும் சென்று, ஒவ்வொரு மனிதனிடமும் தூங்கிக் கிடக்கும் தெய்வீக உணர்வைத் தட்டியெழுப்புவதற்காக, முழுமையான தெய்வீகசக்தி சத்தியசாயியாக மனித சமுதாயத்திற்கு நடுவே வந்திருக்கின்றது. நீ தூங்காமல் இருப்பதாலோ, தூக்கம் அதிகமாக இருப்பதாலோ, உறுமினுலோ, முணகினுலோ, உதைத்தாலோ, குறைகூறினுலோ, சண்டையிட்டாலோ, அழுதாலோ, அப்போதும் நான் உன்னைக் கைவிடமாட்டேன். உனது தெய்வீகத்தன்மை உறங்கும்படி நான் விடமாட்டேன். குழந்தை தன் கோபத்தையும், ஆத்திரத்தையும், தாய்மேல் செலுத்தினுலும், தாய் தான் தூக்கிச் செல்லும் குழந்தையைக் கைவிடுவதும் இல்லை, கீழே விழுவதற்கு விடுவதும் இல்லை, உன்னைச் சுமந்து செல்லவும், உன்கூட வரவும், உனக்கு உதவி செய்யவும் வந்திருக்கிறேன். உன்னை என்னுல் கைவிடமுடியாது. என் குழந்தைகளுக்கு நான் செய்யவேண்டிய கடமையில் தவறமாட்டேன். என்னுடைய பணிக்கு உதவி செய்கின்ற என்னுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் மிகவும் நன்றியுடன் இருப்பேன்.

(த. ச. சா. 87 ஜுன் ப. 10)

**பிரேமையே சாயியின் ஐஸ்வரியம்:**

'சாயி' உங்களுக்குக் கொடுக்கக்கூடிய 'சம்பத்' அல்லது 'செல்வம்' என்ன? இந்த மந்திரமும் மற்ற கட்டிடங்களும் அல்ல, நிலையான தூய்மையான சுயநலமற்ற பிரேமையே அது. (நித்திய நிர்மல, ஸ்வார்த்தரஹித பிரேமா) இந்தத் தூய்மையான பிரேமையே சாயி ஐஸ்வரியம். இதற்கு நீங்களே வாரிசுதார்கள். இதை நன்ருக உணர்ந்து கொண்டு உலகோருக்கெல்லாம் இதை வழங்குவது உங்கள் கடமையாகும். நீங்கள் பகவானுக்கு அளிக்கும் படைப்புக்கள் யாவும் மாயையே.

(த. ச. சா. 1986 நவம். ப. 5)

**ஸ்வாமியிடம் உள்ள ஐஸ்வரியம் எவரிடமுமில்லை:**

ஸ்வாமியிடம் (என்னிடம்) உள்ள ஐஸ்வர்யம் எவரிடமுமில்லை. அது என்னவெனில் நிலையான, தூய்மையான, மாசுமறுவற்ற பிரேமை ஒன்றே. இதுவே ஸாயியின் பெருமதிப்புள்ள நிதி. இது மட்டும் இருந்தால் பிரபஞ்சமே நமக்கு அடிபணியும். உங்கள் சாதனையைச் செய்து சமுதாயத்தில் கலந்து உங்களது அனுபவங்களையும் அனுபூதிகளையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.



(த. ச. சா. 1987 ஏப். ப. 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் வார்த்தையை நம்புங்கள்:**

என் வார்த்தையை நம்பி அதன்படி நடந்து வந்தால் நீங்கள் தப்பாமல் இந்தச்சாதனையில் வெற்றிகாணலாம். இது நானளிக்கும் உறுதி. ஆனால் எனது வார்த்தையை மட்டும் காதால் கேட்டுவிட்டு அதன்படி நடக்காவிடில் ஏதும் பயனில்லை. மேலும் மேலும் இந்தப்பாதையில் உயர்ந்து கொண்டே முன்னேறி உபரி மனதெனும் நிலையை எட்டிவிடலாம். இதில் ஐயம் ஏதுமில்லை.

(த. ச. சா. 1988 பெப். ப. 16)

# (61) சாயி நிறுவனம்

**சத்யசாயி நிறுவனத்தில் பணவசூலுக்கு இடமேகிடையாது:**

இக்காலத்தில் ஆன்மீக கூட்டங்கள் கூட வியாபார ரீதியில் இயங்குகின்றன. ஆனால் நமது சத்தியசாயி நிறுவனம் அப்படி ஆகிவிடக்கூடாது. வியாபாரரீதி என்றால் எப்படி என்று கேட்கலாம். எந்த நிறுவனங்கள் பணவசூலையோ பொருள் சேர்த்து விநியோகிப்பதையோ வரவு செலவு வைத்துக் கொள்கின்றனவோ அந்த நிறுவனங்கள் விருத்தியடைய முடியாது. சத்தியசாயி நிறுவனத்தில் இதயத்துடன் இதயம் ஒருங்கிணைந்து அன்பிற்காகவே அன்பு செலுத்தி எந்தவித கொடுக்கல் வாங்கலுக்குமிடமின்றி செயல்பட வேண்டும். பணவசூலுக்கு இதில் இடமே கிடையாது. இம்மாதிரியான பொருட்களில் நாட்டம் கொண்டு செயல்படுவதால் முன்னேறவே முடியாது. பிரேமையினால் நிறைந்த உள்ளங்களுடன் ஒருவருக்கொருவர் கைகோர்த்துக் கொண்டு சமுதாய சேவைப்பணியில் ஈடுபடவேண்டும். இப்படிச் செய்தால் விசுவபிரேம ஸ்வரூபத்தை (அன்பின் எல்லையற்ற வடிவத்தை) நாம் காணலாம்.

(த. ச. சா. 1985 டிச. ப. 19)

**பிரசாந்தி நிலைய பல்கலைக்கழகம் ஒருபணமும் வசூலிப்பதில்லை:**

பள்ளி நிறுவனங்களில் பணத்தின் ஆதிக்கம் ஒழுங்கீனத்திற்கு ஒருகாரணம். அவைகள் கல்விக்கு தேவதையாகிய சரஸ்வதியின் கோயில்களாக இருப்பதற்குப் பதிலாக செல்வத்திற்குத் தேவதையான இலக்குமியின் கோயில்களாக பணம் பிடுங்கும் வியாபார நிலையங்களாக மாறிவிட்டன. பிரசாந்தி நிலயத்திலுள்ள பல்கலைக்கழகம் கற்பிப்பதற்கோ, சோதனைக் கூடங்களுக்கோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளுக்கோ, நூல்நிலைய வசதிகளுக்கோ, முதல் வகுப்பிலிருந்து பி. எச். டி. வரையிலும் கட்டணம் வசூலிப்பதில்லை. அதனால் கல்வி வளரும் சமுதாயத்திற்கு ஒரு சேவையாக உயர்கிறது. இந்தச் சூழ்நிலையில் கற்றுக் கொள்ளும் மாணவர்கள் பிற்காலத்தில் சேவை செய்வதில் உற்சாகம் அடைவர். மற்றவர்களுக்குச் சேவை செய்வதில் ஆர்வம் காட்ட வேண்டுமே தவிர சேவை பெறுவதில் அல்ல. வியாஸ பகவான், சேவை மிகவும் புனிதமானது என்று அருளியுள்ளார்.

(த. ச.. சா. 87 மே. ப. 3)

## நிறுவனத்தில் எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆனால் உங்களுக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் தொடர்புண்டு:

நிறுவனத்திடம் எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. நீங்களே உங்களுடைய நிறுவனப் பணிகளைச் செம்மையாகச் செய்து ஆனந்தம் அடைந்து பிறருக்கும் ஆனந்தத்தை அளிப்பீர்கள் என்பதே என் விருப்பம். உங்களுக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் தொடர்பு எப்பொழுதும் உண்டு. அதுவே ஆனந்தமளிக்கும். ஆனால் நிறுவனத்தின் பணிகள் மூலம் நீங்கள் மேலும் அதிகமான ஆனந்தத்தை அடையலாம்.

(த. ச. சா. 1988. பெப். ப. 20)

## தன்னை மதிக்க வேண்டும் என்று எண்ணுபவருக்கு நிறுவனத்தில் இடமில்லை:

எவ்வளவோ காலமாய் எத்தனையோ நற்பணிகள் செய்திருப்பினும், சிறிதளவு அகங்காரம் எப்போதாவது தலையெடுத்தால் ஒருவர் அதுவரை செய்த நற்பணியெல்லாம் வீணாகிவிடும். அகங்கார உணர்வு ஆபத்தானது. பிறர் நிந்தித்தாலும் ஏளனமாகப் பேசினாலும் எதையும் லட்சியம் செய்யாமல் உங்களுடைய சேவைப் பணியில் நீங்கள் தொடர்ந்து முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும். அபவாதங்கள், கண்டனங்கள் இவைகளால் பாதிக்கப்படாமல் 'கருமமே கண்ணாயினர்' எனும் விதிமுறைக்கேற்ப உங்கள் கடமையாக இறைவனுக்கர்ப்பணமாக இந்தப் புனித சேவையில் ஈடுபட வேண்டும். பெயருக்கும், புகழுக்குமெனச் செய்யும் பணி சேவைப்பணியாகாது. பயனை எதிர் நோக்காது, மனித குலத்திற்கு உபயோகமான தொண்டு செய்வதே சுயநலமற்ற சேவை. இதுவே தெய்வ வழிபாட்டிற்

கொப்பாகும். ''நான் மிக முக்கியமான நபர், என்னை எல்லோரும் மரியாதையுடன் வணங்க வேண்டும்'' என்ற மனோபாவமுள்ளவர் இந்த நிறுவனத்தில் இருக்க அருகதை அற்றவர். அப்படிப்பட்டவருக்கு சேவா நிறுவனத்தில் இடம் கிடையாது.

(த. ச. சா. 1986. மார்ச். ப. 12)

### எதுவும் செய்யாமல் அருளை எதிர்பார்ப்பது சரியாகுமா:

நிறுவனங்களின் எல்லாப் பிரிவுகளும் மூடப்பட்டால் கூட நான் வருந்த மாட்டேன். ஆனால் இப்படி அரை குறையாய்ச் செயலாற்றுவது சுவாமிக்குச் சிறிதும் பிடித்தமில்லை. நீங்கள் செய்யும் செயல்களின் விளைவுகள் என்னிடமே வந்து சேர்கின்றன. ஆகவே இதில் எனக்குப் பொறுப்பு அதிகமாக உள்ளது. அதனால் நல்லவை, கெட்டவைகளை எடுத்துக் கூற வேண்டியதும் எனது கடமையாகிறது. நான் எடுத்துக் கொள்ள விரும்பும் பணிகள் யாவும் மக்களின் நலனுக்கும் நன்மைக்குமே யாகும். ஆகவே முழு நம்பிக்கையுடன் நீங்கள் செயல்பட வேண்டும். ''சாயி எனக்கு இதைச் செய்யவில்லை அதைச் செய்ய வில்லை'' என்று கூறுகிறீர்கள். ஆனால் நீங்கள் சாயிக்கு என்ன செய்தீர்கள் என்று எண்ணிப்பாருங்கள். செய்து கொண்டிருப்பதாக நீங்கள் சொல்லிக் கொள்வது உங்களது சுயநலத்தைக் கருதியேயன்றி சாயிக்காகவல்ல. சாயிக்காக எதுவும் செய்யாமல் சாயியிடமிருந்து மட்டும் அருளை எதிர்பார்ப்பது சரியாகுமா?

(த. ச. சா. 1986. டிசம். ப. 6)

# (62) WATCH

### W – "Watch your Words":

ஆங்கிலத்தில் ஐந்து எழுத்துக்கள் கொண்ட WATCH என்ற வார்த்தையால் இது குறிப்பிடப்படுகிறது. உண்மையில் இந்த ஐந்தெழுத்து வார்த்தையை 'பஞ்சாட்சர மந்திரம்' என்றே குறிப்பிடலாம். 'ஓம் நமசிவாய'வைவிட சக்திவாய்ந்த மந்திரம் இதில் அடங்கி உள்ளது. இதைச் சற்று விவரமாக ஆராய்ந்து பார்த்தால் இதன் உட்பொருள் நன்கு விளங்கும். முதல் எழுத்து 'W' என்பது 'Words' 'வார்த்தைகள்' என்பதைக் குறிக்கும். 'Watch your words' உன் பேச்சில் கவனம் வேண்டும் என்று இது உணர்த்துகிறது. பேசும் சொற்கள் மெய்யாகவும், பிறரை நோகச் செய்யாதனவாகவும், பிறருக்கு ஆனந்தம் அளிப்பவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும் இருத்தல் வேண்டும். இது நாவை அடக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது ('யாகாவாராயினும் நாகாக்க' எனும் வள்ளுவர் வாக்கை இங்கு நினைவு கூரலாம்.) இப்படிச் சொல்லில் கவனமாயிருத்தல் என்பது 'சத்தியம்' எனும் மேம் பாட்டுக் குணத்தைக் குறிக்கும்.

(த. ச. சா. 1986 ஏப். ப. 4)

## A – 'Watch your action':

இரண்டாவது அட்சரம் 'A' என்பது 'Watch your action' 'உன் செய்கையில் கவனமாயிருத்தல் வேண்டும்' என்பதை உணர்த்துகிறது. அவரவரது தர்மம் எதுவோ அதையே பின்பற் றிச் செயலாற்றுதல் வேண்டும். ஒவ்வொன்றிற்கும் ஒரு தர்மம் உண்டு. அதுவே அதன் இயல்பு என்றும் குறிக்கப்படும். 'தீ'யின் தர்மம் தகிப்பதும் பிரகாசிப்பதும் ஆகும். தணலாக இருக்கும் போது நெருப்பாகக் கருதப்படுவது அணைந்துவிட்டால் வெறும் 'கரி' யாகி விடுகிறது. சர்க்கரையின் இயல்பு இனிப்பு. இனிப் பில்லாவிடில் அது வெறும் மாவாகவே கருதப்படும். ரோஜா மலரின் இயல்பு அழகான தோற்றத்துடன் நறுமணமும் கூடியது. ஆனால் பிளாஸ்டிக்கில் செய்த செயற்கை ரோஜா மலர் தோற் றத்தில் மாத்திரம் அதையொத்ததே தவிர அதில் மணம் ஏது? குணமில்லாத அந்த வஸ்து போலியானதே. இதைப் போலவே மனிதனின் இயல்பும் சத்தியமே. எப்போதும் சத்தியமே பேசி அறநெறிஎனும் தர்மத்தின்படி செயல்படவேண்டும். பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் பேசுவதும் செயல்படுவதும் மனிததர்மம். ஆகவே செயலையும்கூட தனது தர்மத்திற்கேற்ப கவனத்துடன் தான் ஆற்றவேண்டும்.

(த. ச. சா. 1986 ஏப். ப. 4)

## T – 'Watch your thoughts':

மூன்றாவது அட்சரம் 'T' இது 'Thoughts' அதாவது எண் ணங்களை குறிப்பதாகும். எண்ணங்கள் நல்லவைகளாக இருந் தால்தான் உள்ளத்தில் அமைதி அல்லது 'சாந்தி' நிலவும். 'சாந்தி' என்பது சகிப்புத்தன்மைதானென்று தவறாகக் கருதுகி றோம். எண்ணங்கள் நன்றாயிருந்து, சொல்லும் செயலும் நன் றாக இருந்தால் 'சாந்தி' ஏற்படுவது திண்ணம். இவையே சத்யம், தர்மம், சாந்தி எனும் மூன்று குணங்களின் மேம்பாட்டை உணர்த்துகின்றன. எவரோ உன்னைத் திட்டுகிறார் என்று வைத் துக் கொள்ளுவோம். அதை நீ பொருட்படுத்தலாகாது. ''இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் என்னைத் திட்டுகிறார்? அதற்கு நான் இடம் கொடுக்கும் வகையில் ஏதாவது தவறு செய்திருக்கலாம்'' என்ற ரீதியில் சிந்தனை செய்யவேண்டும். ''என் நடத்தை சரியாகவே உள்ளது. அவர் திட்டுவது சரியாகப்படவில்லை'' என்று தோன்றினால் ''இதில் எனக்கு சம்பந்தமேயில்லையே. நான் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்று அதைப்பற்றிய உள்ளக்குமுறலுக்கு இடமளிக்காமல் அதை அசட்டை செய்துவிட வேண்டும். மகரிஷிகளின் ஆபரணமே 'சாந்தி'. சுயநல நாட்டம் உள்ளவர்களிடமும் அகங்காரம் தலை தூக்கி உள்ளவரிடமும் ''சாந்தி'' இருக்காது. சத்தியம், தர்மம் இரண்டும் நிறைந்துள்ளவரிடம்தான் ''சாந்தி'' குடியிருக்கும்.

(த. ச. சா. 1986. மே. ப. 4)

## C – "Watch your character"

நான்காவது அட்சரம் 'C' இது ''character'' அதாவது குணத்தைக் குறிக்கும். 'Watch your character' உன் குணத்தில் கவனமாயிரு. என்று இது உணர்த்துகிறது. இது மிகவும் முக்கியமானது 'குண' த்திற்கு அடிப்படையானது 'பிரேமை' யே. 'பிரேமை' உணர்வு இல்லாத மனிதன் நடைப்பிணமே ஆவான். குணத்தில் கவனமாயிருத்தல் என்பது ஒருவரது நடத்தையில் அது பிரதி பலிக்க வேண்டுமென்றே அர்த்தமாகும். இதைச் 'சதாசாரம்' என்று குறிப்பிடுவர். சதாசாரம் என்பது அநியாயம் செய்யாமல் இருப்பது மட்டுமல்ல. மனித இயல்பை வளர்த்துச் கொண்டு சமுதாய நலனுக்காக பாடுபடுவதும் இதில் அடங்கும். ஒருவர் வாழ்வது ஆத்மாவுக்காகவேயன்றி இந்த உடல் வளர்ப்பதற்காகவல்ல. இந்த அடிப்படையின்றி வாழ்வது தீபமில்லாத விளக்குக்கும் செல்லா நாணயத்திற்குமே ஒப்பாகும். இப்படிப்பட்ட சதாசார வாழ்விற்கு தேவையானது தூய்மையான 'பிரேமை' யே. அதுவே நித்தியமானது. சத்தியம், தர்மம், சாந்தி இவைகளுடன் கூடியது. குணம் என்பது 'பிரேமை' யையே குறிக்கும். நமது குணம் சத்தியம், தர்மம், சாந்தி பிரேமையுடன் உள்ளதா என்று கவனத்துடன் இருத்தல் வேண்டும்.

(த. ச. சா. 1988. மே. ப. 5)

## H – "Watch your heart":

ஐந்தாவது அட்சரம் 'H' அதாவது ''heart'' ஐ குறிப்பது 'Watch your heart' இதயத்தை கவனமாகக் கண்காணித்தல். இங்கே 'heart' என்பது பௌதிகமான இருதயத்தை குறிப்பிடுவதல்ல. உள்ளத்தையே இது குறிக்கும். உங்களது உள்ளம் விசால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக விரிவடையும் தன்மையுடையதாய் இருத்தல் வேண்டும். ''சர்வபூத அந்தராத்மா'' என்றபடி எல்லாவற்றினும் உள்ளே உறைவது இறைவனே எனும் பரந்த நோக்கத்துடன் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை நிறைந்த உள்ளம் கொண்டவர் எல்லாவற்றையும் இறைவனின் திருவுருவங்களாகவே கருதுவார். எல்லா உருவங்களையும் தனது உள்ளத்தின் பிரதிபலிப்பாகவே கருதினல் மற்றவர்களைத் துன்புறுத்த அல்லது பிறருக்குத் தீங்கு விளைவிக்க எப்படித் தோன்றும்? இப்படிப்பட்ட விசாலமான இதயம் படைத்தவர் எந்த ஜந்துவுக்கும்கூட ஹிம்சை விளைவிக்க விரும்பமாட்டார். ஆகவே இது அஹிம்சையை உணர்த்துகிறது.

(த. ச. சா. 1986. மே. ப. 5)

## (63) தீர்க்க ஜீவிதம் - திவ்ய ஜீவிதம்

### கோர வேண்டியது திவ்ய ஜீவிதமே:

மனிதன் இன்று கோரவேண்டியது ''தீர்க்க ஜீவிதம்'' அதாவது நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டுமென்பதல்ல. ''திவ்ய ஜீவிதம்'' அதாவது சிறிது காலமே வாழ்ந்தாலும் தெய்வீகச் சிறப்புடன் வாழ்வதையே கோரவேண்டும். ஆயுளை நீடிக்கும் முயற்சியை விட்டுக் குணத்தை மேம்பாட்டுடன் நீடிக்கச் செய்யும் முயற்சியே தேவை .. மனிதன் நற்பணி செய்வது அவன் குணத்தைப் பொறுத்தேயுள்ளது. யக்ஷ பிரச்சனையில் தருமர் உலகை ரட்சிப்பவர் யார் என்ற கேள்விக்கு பதில் அளிக்கையில் ''சத்ஜனங்கள்'' அதாவது நல்லோர்களே என்று விடை பகர்ந்தார். நற்குண சீலர்களே இன்று உலகில் இல்லையெனில் உலகிலே குழப்பமும் கொந்தளிப்பும் தாங்க முடியாத அளவில் பெருகிவிடும்.

(த. ச. சா. 1988. செப். ப. 1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்று உனக்குச் சொல்வேன். எப்படியிருந்தாலும் நீ என்னுடையவனே. உன்னை நான் கைவிடமாட்டேன். நீ எங்கிருந்தாலும் எனக்கண்மையில்தான் உள்ளாய். எங்கிருந்தாலும் நீ என் கைக்குள்ளேயே''

— பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org